ரூபா 20.00

போகிறார் சூச்
பக்கம் 08

சாவு
பக்கம் 17

விதைப்பு
பக்கம் 11

பதிவுகள்
பக்கம் 02

www.onlineuthayan.com

பக்கங்கள் : 24

உதயன்

சுடர் 27
கதிர் 158

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 20 புதன்கிழமை (02/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

இணைந்த நாட்டுக்குள் தீர்வு எதிர்க்கட்சிகள் இணக்கம்

யாழ். மே தினத்தில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே.2

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு நியாயமானதும் நிரந்தரமானதுமான அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு இலங்கை அரசு முன்வருமானால் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்கத் தயாராக இருக்கிறது என நேற்றுயாழ்ப்பாணத்தில்வைத்து பகிரங்கமாக அறிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன். கூட்டமைப்பின் இந்த நிலைப்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஐ.தே.க. உள்ளடங்கலான எதிர்க் கட்சிகளின் கூட்டு தயாராக 04

கூட்டமைப்பின் கோரிக்கைக்கு பூரண ஆதரவு வழங்கத் தயார்

கூட்டு மே தினத்தில் உறுதியளித்தார் ரணில்

யாழ்ப்பாணம், மே. 2

தமிழ் மக்களின் விடிவுக்காகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கு வலுவூட்டும் வகையில் பொறுப்பான ஒரு எதிர்க் கட்சி என்ற முறையில் முழு ஒத்துழைப்பையும் நாம் வழங்குவோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று யாழ். நகரில் நடைபெற்ற எதிர்க் கட்சிகளின் கூட்டு தேசிய மே தின விழா மேடையில் உறுதியளித்தார்.

வட பகுதியில் அராஜகம் தலைவிரித்தாடுகின்றது. தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக வன்னி மக்கள் நரகத்தில் 04

எதிர்க்கட்சிகள் கூட்டாக ஐந்து தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், மே. 2

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற எதிர்க் கட்சிகளின் கூட்டு மே தின நிகழ்வின்போது ஐந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டு மே தினத்தில் கலந்துகொண்ட கட்சிகளின் தலைவர்கள் ஏக மனதாக இத் தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

* சம்பள அதிகரிப்பு மற்றும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான தீர்மானம். -

இலங்கை வரலாற்றில் ஒருபோதுமே நடைபெற்றிருக்காதவாறு வாழ்க்கைச் செலவு, பொருள்களின் விலை என்பன அதிகரித்துள்ளன. ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி அடைந்து முழுப் பொருளாதாரமும் வீழ்ச்சியடையும் நிலைக்கு உள்ளாகியுள்ளது. பெருந் 04

உதயன் மீதான மிலேச்சத் தாக்குதலின் 6 ஆண்டுகள்

யாழ்ப்பாணம், மே 2

உதயன் பத்திரிகை நிறுவனத்தின் மீது காட்டு மிராண்டித் தனமான தாக்குதல் நடத்தப்பட்டு இன்றுடன் 6 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்கொள்ள முடியாதவர்கள், துப்பாக்கிமுனைகளில் உதயனை முடக்கிவிட முனைந்து, தோற்றுப் போனதைக் கடந்து போன ஆண்டுகள் நிரூபித்திருக்கின்றன.

ஊடகங்களின் குரல்களை அடக்கிவிட்டால் தமிழ் மக்களின் உரிமைக் குரல்களைப் பல மிழக்கச் செய்துவிடலாம் என்று கருதியவர்களுக்கு அடிவருடிகளாகச் செயற்பட்டவர்கள் 2006 மே மாதம் 2ஆம் திகதி உதயன் வளாகத்துக்குள் அத்துமீறிப் புகுந்து ஏதுமறியா இரண்டு அப்பாவிப் பணியாளர்களைச் சுட்டுக் கொன்றனர். மேலும் இருவரைக் காயப்படுத்தினர். அச்சுப் பணிக்குத் தேவையான கணினிகள் உட்பட இயந் 04

இராணுவம் இல்லை

யாழ்ப்பாணம், மே 2

யாழ்.குடாநாட்டில் நேற்று நடைபெற்ற மே தினக் கூட்டங்களுக்கான பாதுகாப்புப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படவில்லை. பதிலாகப் பொலிஸாரும் அதிரடிப் படையினருமே அந்தப் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டனர்.

இதுவரை காலமும் யாழ்.குடாநாட்டில் நடைபெறும் அர 04

முள்ளிவாய்க்கால் உயிரிழப்புகளை இனப்படுகொலையாக அறிவியுங்கள்

ஹிலாரிக்குத் தொலைநகல்கள்

வாஷிங்ரன், மே.2

முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் மூன்றாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு, முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த படுகொலைகளை இனப் படுகொலையாக அங்கீகரித்தும், வன்னி மக்களுக்கு அனுதாபமும் ஆதரவும் தெரிவித்தும் அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் 04

இலங்கையில் சட்ட ஆட்சிக்கு கணிசமான அளவு தடைகள்

பிரிட்டன் அரசு கண்டனம்

லண்டன், மே.2

இலங்கையில் நீதித் துறை நன்கு விருத்தியடைந்ததாகக் காணப்படினும் வினைத்திறன் மிக்க குற்றவியல் நீதி மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றுக்கு கணிசமான தடைகள் காணப்படுவதாகப் பிரிட்டனின் 2011ஆம் ஆண்டுக்கான மனித உரிமை அறிக்கையில் 04

இலங்கையில் பணி புரிந்தவர் பென்ரகனில்

நியூயோர்க், மே.2

இலங்கையில் முன்னர் பணியாற்றிய இந்திய வம்சாவளி அமெரிக்கர் ஒருவர் அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களமான பென்ரகனின் உயர் 04

ஆஸ்திரேலிய குடிவரவுத்துறை அமைச்சர் வருகிறார்

ஆஸ்திரேலியாவின் குடிவரவுத் துறை அமைச்சர் கிரிஸ் பௌவன், இன்று இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இன்று இலங்கை வரும் அவர் எதிர்வரும் 4ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் என எதிர்பார்க்கப் படுகிறது. இதன்போது ஆஸ்திரேலியாவுக்கு இலங்கையில் இருந்து செல்லும் அகதிகளை தடுப்பது தொடர்பில் ஆராயப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாலைதீவு பிரஜை கைது

மஹரகம பிரதேசவாசியொருவரிடமிருந்து 51,800 ரூபா பணத்தை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மாலைதீவு பிரஜையொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். முன்னணி குடிபானக் கம்பனியொன்றிடமிருந்து தான் 500,000 பவுன்ஸ் வென்றுள்ளதாகவும் தனக்கு கிடைத்துள்ள இப்பரிசுப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தான் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் கூறி குறித்த நபரிடம் பண மோசடி செய்ததாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

புகைப்படக் கண்காட்சி இன்று

ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு சுதந்திர ஊடகக் குரல் நடத்தும் புகைப்படக் கண்காட்சி இன்று புதன்கிழமை காலை ஆரம்பமாகவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக் கொடை நிதிய மண்டபத்தில் இந்தக் கண்காட்சி ஆரம்பமாகும்.

சுதந்திர ஊடகக் குரல் அமைப்பின் தலைவர் இரா. புத்திரசிகாமணி தலைமையில் ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சியில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பொன் சேகாவின் மனு இன்று விசாரணைக்கு

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரிய மனு இன்று புதன்கிழமை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க தலைமையிலான நீதியரசர்களின் முன்னிலையில் இந்த விசாரணை இடம்பெறவுள்ளது. ஏற்கனவே வெள்ளைக்கொடி வழக்கில் தண்டனை பெற்றுள்ள சரத் பொன்சேகா, அவரின் மருமகன் நடத்தி வந்த ஆயுத இறக்குமதி நிறுவன ஊழல் தொடர்பான வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். இந்தநிலையில் கைதுசெய்யப்பட்டதன் முதல் தடவையாக சரத் பொன்சேகா, பிணை கோரி மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க்கட்சிகளின் கூட்டு மேதின நிகழ்வில்...

ஈ.பி.டி.பி. நடத்திய மேதின ஊர்வலத்தில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தர நியமனம் வழங்கக் கோரி சுகாதாரத் தொண்டர்கள் கடிதம்

வடக்கு சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

வவுனியா, மே 2

வவுனியா மாவட்டத்தில் தற்காலிக சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றுபவர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் தற்காலிக சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றிய தமக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஜி.எப்.எ.ரி.எம். திட்டத்தின் கீழ் சுகாதாரத் தொண்டர்களைத் தெரிவு செய்வதற்காக கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வவுனியா மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் பணிமனையில் சுகாதார திணைக்கள அதிகாரிகள் இணைப்பாளர்கள், ஆளுநர் அலுவலக உத்தியோகத்தர்கள் முன்னிலையில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன. இதில் நான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினூடாகவும், தெரிவு செய்யப்பட்ட எமது பெயர் விவரங்கள் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தெரிவுகள் புள்ளிகள் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகவும் வவுனியா சுகாதார அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரியால் தெரிவிக்கப்பட்டது. எனவே இந்தத் திட்டத்தின் கீழ் நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் சுகாதாரத் தொண்டர்கள் சேவைக்கு உள்வாங்கப்படுவார்களெனத் தீர்க்கமாகக் கூறப்பட்டன.

ஆனால் தற்பொழுது எம்மில் மூவர் மட்டுமே உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் மேலதிகமாக புதியவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

ஏற்கனவே 2006, 2008 ஆண்டுகளில் இவ்வாறான நேர்முகப்பரீட்சைகளில் நாம் தெரிவுசெய்யப்பட்டு பின்னர் புறக்கணிக்கப்பட்டோம். நாம் அனைவரும் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக வவுனியா மாவட்டத்தில் தற்காலிக சுகாதாரத் தொண்டர்களாக சேவை புரிந்து வருகிறோம். மேலும் கடந்த சில மாதங்களாக மாத்திரமே எமக்கு மாதாந்தம் சிறு தொகை ஊதியம் வழங்கப்படுகிறது. இதற்கு முன் எமக்கு எந்தவிதமான பண உதவிகளும் வழங்கப்படவில்லை.

ஆனால் தற்போது எமது பெயர் நீக்கப்பட்டு அரசியல் செல்வாக்குக் காரணமாக புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். நாம் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த காலம் முதல் தொண்டர்களாக பணிபுரிந்து வருகின்றோம்.

நாம் அனைவரும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்ற சகல விதமான பயிற்சி வகுப்புகளிலும் கலந்து கொண்டு திறமையாகச் செயற்பட்டுள்ளோம். ஆனால் எம்மையும் எமது சேவைகளையும் புறக்கணித்து புதியவர்களைத் தெரிவு செய்வது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

இந்தப் பிரச்சினைக்கு சரியானதும் நேர்மையானதுமான தீர்வைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் வவுனியா அரச அதிபர், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார அமைச்சு, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(400)

வவுனியாவில் மே தினம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மே தினக் கூட்டமும் பேரணியும் நேற்று வவுனியாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு பேரணியுடன் ஆரம்பமானது. வவுனியா நகர சபை முன்றலில் இருந்து ஆரம்பமாகிய பேரணி வவுனியா சைவப் பிரகாச மகளிர் வீதியூடாக சென்று ஏ-9 வீதியூடாக வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தை வந்தடைந்தது.

சுலோக அட்டைகளை தாங்கியவாறும் கோஷங்களை எழுப்பியவாறு ஆயிரக் கணக்கான மக்கள் பேரணியில் கலந்துகொண்டனர். இப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் 'சிறைக் கைதிகளை விடுதலை செய்', 'விலைவாசியை உயர்த்தாதே' எனப் பலகோஷங்களை எழுப்பினர்.

இதன் பின் வவுனியா நகர சபைக் கலாசார மண்டபத்தில் கூட்டம் ஆரம்பமானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், சிவசக்திஆனந்தன், தமிழக விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, புளொட் இயக்கத் தலைவர் சித்தார்த்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா நகரசபைத் தலைவர் கனகையா ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(த-15-400-402)

வடக்கில் நிலை கொண்டுள்ள இராணுவம் அவர்களது ஊர்களுக்குச் செல்ல வேண்டும்

மே தினக் கூட்டத்தில் மாவை எம்.பி.

எங்கள் வீடுகளுக்கு நாங்கள் போக வேண்டும். அதனால் இராணுவம் தங்களது வீடுகளுக்கும் ஊர்களுக்கும் போக வேண்டும் என்ற செய்தியை நாங்கள் மேதினச் செய்தியாக விடுக்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பொதுச் செயலாளருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற மேதின நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. இன்னமும் மீளக்குடியமர்வதற்கு மெனிக்பாம் முகாமில் ஆறாயிரம் பேர் மட்டுமே உள்ளதாக முழுக்க முழுக்கப் பொய் சொல்லுகிறார்கள்.

இந்தியாவில் ஒன்றரை லட்சம் முதல் இரண்டு லட்சம் தமிழ் மக்கள் வரையில் முகாம்களில் உள்ளனர். யாழ்ப்பாணத்திலே முப்பத்தி எட்டாயிரம் பேர் இடம் பெயர்ந்து மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் பேரினவாதத்தின் அடக்கு முறையும் இராணுவத்தலையீடும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது.

இன்றைய மே நாள் நிகழ்விலே நாங்கள் எங்கள் வீடுகளுக்கு, ஊர்களுக்கு போக வேண்டும். அதற்காக எமது பகுதிகளில் உள்ள இராணுவம் தமது வீடுகளுக்கும் ஊர்களுக்கும் போக வேண்டும் என்ற செய்தியை, நாங்கள் மேதினச் செய்தியாக விடுக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-6)

மன்னாரிலும் மே தினம்

மன்னார், மே 2

சர்வதேச தொழிலாளர் தினமாகிய மேதினம் மன்னாரில் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.

மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகரசபை மண்டபத்தில் மேதினக் கூட்டம் இடம்பெற்றது.

முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமான பொதுக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், மன்னார் பிரதேச சபைத்தலைவர் மாட்டின் டியேஸ், மாந்தை மேற்குப் பிரதேச சபைத் தலைவர் வரப்பிரகாசம், நானாட்டான் பிரதேச சபைத் தலைவர் அன்புராஜ் லெம்பேட் மற்றும் தொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (க-12)



1962—2012

ஊடகத்துறையில் பொன்விழாக் காணும்

ம.வ.கானமயில்நாதன்

ஐம்பது ஆண்டுகளின் முன்னர், 'வட்டுர் கானம்' என்ற புனை பெயரில், வளரும் "தமிழ்க் கவிஞ"ருள் ஒருவராகக் 'கலைச் செல்வி' மூலம் இலக்கிய உலகிற் காலடி பதிக்கத் தொடங்கிய திரு ம.வ.கானமயில்நாதன் அவர்களை இலக்கியப் பொன் விழா ஆண்டில் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பத்திரிகை உலக ஜாம்பவான்களான கே.பி.ஹரன், இராஜ.அரியரத்தினம், எஸ்.டி.சிவநாயகம் போன்றோரின் பக்குவமான வழிகாட்டலில், பண்பட்ட ஒரு பத்திரிகையாளனாகத் தன்னை வளர்த்துக் கொண்ட அவர் கடந்த 27 ஆண்டுகளாக உதயன் நாளிதழின் பிரதம ஆசிரியராக அமைதியாகவும் அடக்கமாகவும் கொள்கைப் பிடிப்புடனும் பணியாற்றி வருகிறார். அவரது ஊடகப் பணி, நாட்டுக்கான பணி இன்னும் பல்லாண்டு வளர்ந்தோங்க அவரது 'ஊடகப் பணி பொன்விழா'வின்போது வாழ்த்துகின்றேன்.

சி.சிவசரவணபவன்
–சிற்பி–

அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதுடன்
மேலும் பலகாலம்
ஊடகத்துறைக்கு
சேவை செய்ய
எல்லாம் வல்ல
ஆண்டவன்
அருள்பாலிப்பாராக.

வாழ்த்துபவர்கள்:

உடன்பிறப்புகளும் நண்பர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளிவாய்க்கால் உயிரிழப்புகளை இனப்படுகொலையாக அறிவியுங்கள்

01 என்று கோரி அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரன் னுக்கு தொலைநகல் அனுப்பும் போராட்டம் ஒன்று புலம்பெயர் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

மே 18 நினைவு நாள் அமெரிக்க ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில் இந்தத் தொலைநகல் அனுப்பும் போராட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அதன் இணைப் பாளர் சுபா சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

ருவாண்டா படுகொலை களின் 19ஆவது நினைவு நாளை முன்னிட்டு அண் மையில் ஹிலாரி கிளின்ரன், அங்குள்ள மக்களுக்கு ஆதர வும் அனுதாபமும் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளி யிட்டிருந்தார். அதன் அடிப் படையிலேயே முள்ளிவாய்க் கால் படுகொலைகள் குறித் தும் அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

(த)

இலங்கையில் சட்ட ஆட்சிக்கு கணிசமான அளவு தடைகள்

01 தெரிவிக்கப்பட்டுள் ளது. நேற்று முன் தினம்வெளியிடப்பட்ட இந்த அறிக்கை முன்னாள் இரா ணுவத் தளபதி சரத் பொன் சேகாவுக்கு எதிரான வழக்குப் பற்றி கருத்துரைத்துள்ளது.

சரத் பொன்சேகா குற்ற வாளியாக காணப்பட்டு 3 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட வெள்ளைக் கொடி வழக்கு, அரசியல் நோக்கம் கொண்டிருந்தது என சிவில் சமூகக் குழுக்கள் கவலை தெரிவித்திருந்தன.

சகல வழக்குகளிலும் சட் டம் சுதந்திரமாகவும் பாரபட் சமின்றியும் பிரயோகிக்கப் படவேண்டும் என பிரிட்டன் இலங்கையிடம் வலியுறுத் தியது என இந்த அறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

இதற்காகவே பொலிஸ் படையின் செயலாற்றலை அதிகரிக்கச் சமுதாய பொலிஸ் முறைச் செயற்திட்டம் ஒன் றுக்கு பிரிட்டன் நீதி வழங் கியது. இலங்கையின் மனித உரிமை நிலைமையை பல வழிகளிலும் பிரிட்டன் அவ தானித்துவருகின்றது.

குறிப்பாக மனித உரி மைப் பிரச்சினைகளிலும் 319 தனியாள்கள் தொடர்பான சம்பவங்களிலும் பிரிட்டன் அவதானம் செலுத்தியுள்ளது.

மேலும் யாழ்ப்பாணத் தில் லிலித் குமார் வீரராஜ், குகன் முருகானந்தன் ஆகி யோர் காணாமல் போனமை யும் 2010 ஜனவரியில் காணாமற்போனவரும் பின் னர் சிதைந்த உடலாக மீட்கப்பட்டவருமான பட்டாணி ராஸிக் பற்றியும் இந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது என இந்த அறிக்கை கூறுகின்றது. (த)

எதிர்க்கட்சிகள் கூட்டாக ஐந்து தீர்மானங்கள்

01 தோட்டத்துறைமக்க ளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குதுரித வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும்.

விவசாயிகள், கடற்றொழி லாளர்களுக்கு நிவாரணங் களை வழங்க வேண்டும் . தொழில் புரியும் மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்கும் பொருட்டு அதி கரிக்கின்ற வாழ்க்கைச் செல வுக்கும் அன்றாடத் தேவைக்கு ஏற்பவும் 750 ரூபாவால் சம்பளத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண் டும். சிறந்த மற்றும் தொலை நோக்குடைய பொருளாதார முகாமைத்துவத்தின் ஊடாக மக்களுக்கு நிவாரணங் களை வழங்கக் கூடியதான பொருளாதார பின்னணி ஒன்றை ஊருவாக்க வேண்டும்.

✱அரசியல் தீர்வுக்கான தீர்மானம்-

இனங்களுக்கு மத்தியில் மீண்டும் சந்தேகமும், நம் பிக்கை இன்மையும், அமை தியின்மையும் உருவாகு வதற்கான வாய்ப்புக்களை ஒழித்து அரசு பல சந்தர்ப் பங்களில் வாக்குறுதியளித் துள்ளவாறு அனைத்து இன மக்களாலும் ஏற்றுக் கொள் ளக்கூடியதான, நிலையான அரசியல் தீர்வு ஒன்றை வழங்க வேண்டும்.

✱ அரசியல் பழிவாங் கல்களைத் தடுப்பதற்கான தீர்மானம்-

பழிவாங்கல்களின்றி சுதந்திரமாக வாழக்கூடிய, ஜனநாயகமும் அடிப்படை உரிமைகளும் ஆட்சிபுரி கின்ற சமூகமொன்றைக் கட்டியெழுப்புமாறு அரசை வற்புறுத்துகிறோம்.

✱ புலம்பெயர்ந்த ஊழி யர்களுக்கான சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சமவாயத்துக்கு ஒப்புதல் அளிப்பதற்கான தீர்மானம்-

உழைப்பை ஏற்றுமதி செய்கின்ற நாடுகளுக்கி டையே பொதுச் சேவை நிபந்தனைகளை உருவாக் குமாறும், வெளிநாடுகளில் தொழிலில் ஈடுபடுகின்ற ஊழியர்களின் உரிமை மற் றும் சிறப்பு உரிமைகளை உறுதிசெய்கின்ற சர்வதேச தொழில் அமைப்பின் 189 ஆம் இலக்க சமவாயத்துக்கு ஒப்புதல் அழிக்குமாறும் முன்மொழிகின்றோம்.

✱ மீளக் குடியமர்த்து வதற்கான தீர்மானம்-

இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்க ளில் மீளக் குடியமர்த்தி, காணிகளை இழந்த உரிமை யாளர்களுக்கான காணி உரி மையை மீண்டும் பெற்றுக் கொடுத்து சிவில் நிர்வா கத்தை உறுதி செய்து அவர் களின் வாழ்க்கையை கட்டி யெழுப்புவதற்குத் தேவை யான அனைத்து வசதிக ளையும் நிவாரணங்களை யும் வழங்குமாறு அரசை வற் புறுத்துகிறோம். (த-2-3)

இலங்கையில் பணி புரிந்தவர் பென்ரகனில்

01 நிலைப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் இனத்துவக் கற்கைகளுக்கான அனைத் துலக நிலையத்தின், தெற் காசிய சிறுபான்மையினர் உரிமைகள் என்ற திட்டத் தின் பணிப்பாளராகவும், பின்னர் வொய்ஸ் ஒவ் அமெரிக்காவின் கொழும்புச் செய்தியாளராகவும் பணி யாற்றிய விக்ரம் சிங் என்ப வரே பென்ரகனில் உயர் பதவியைப் பெற்றுள்ளார்.

பென்ரகனில் தெற்கு மற்றும் தென்கிழக்காசியா வுக்கான பிரதி உதவிப் பாது காப்புச் செயலர் பதவிக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தெற்கு மற்றும் தென்கி ழக்காசியா தொடர்பான கொள்கைகளின் அபிவிருத்தி தொடர்பாக மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள விக்ரம் சிங், குறிப்பாக ஆஸ்ரேலியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுடனும், இந்தியா, இலங்கை போன்ற தந்திரோபாய நாடுகளுட னான உறவுகள் குறித்தும் கவனம் செலுத்துவார்.

ஆசிய பசுபிக் பிராந்தி யத்தின் பாதுகாப்பு விவகா ரங்களில் இவர் முக்கியமான பாத்திரத்தை வகிப்பார் என்று அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கொள்கை விவகாரங்களுக்கான பதில் கீழ்நிலைச் செயலர் ஜேம்ஸ் மில்லர் தெரிவித்துள்ளார்.

கம்போடியாவில் இந்த வாரம் நடைபெறும் ஆசியான் நாடுகளின் பாதுகாப்பு அதி காரிகளின் மாநாட்டில் பங் கேற்கும் அமெரிக்கக் குழு வுக்கு விக்ரம்சிங் தலைமை யேற்கவுள்ளார். 2011 ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் பென்ரகனில் கொள்கைப் பிரிவில் ஆசிய பசுபிக் பாது காப்பு விவகார ஆலோசகராக விக்ரம் சிங் பணியாற்றி வந்தார்.

அத்துடன், ஆப்கானிஸ் தான் மற்றும் பாகிஸ்தானில் இடம்பெற்ற போர்கள் பற் றிய உள்ளக மீளாய்வுக் குழுக்களுக்கும் இவர் தலை மையேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

இராணுவம் இல்லை

01 சியல் சார்ந்த கூட் டங்கள் அல்லது பேரணிகளில் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப் பட்டு அங்கு பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப் படுவதுதான் வழமை.

எனினும் வழமைக்கு மாறாக நேற்று இடம்பெற்ற அரசியல் கட்சிகளின் மே தினக் கூட்டங்களுக்கான பாதுகாப்புப் பணிகள் முற்றுமுழுதாகப் பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட் டிருந்ததைக் காண முடிந் தது.

உதயனின் மீதான மிலேச்ச தாக்குதலின் 6 ஆண்டுகள்

01 திரங்களை துப் பாக்கிச் சன்னங் களால் சல்லடையிட்டனர்.

இந்த மிலேச்சத்தனமான தாக்குதலில் உதயனின் வணிக முகாமையாளர் சுரேஷ் என அழைக்கப்படும் பஸ்ரி யன் ஜோர்ஜ் சகாயதாஸ் (வயது 36) மற்றும் எஸ். ரஞ்சித்குமார் (வயது 24) ஆகியோர் அந்த இடத் திலேயே கொல்லப்பட்ட னர். எஸ்.உதயகுமார் (வயது 48), என்.தயாகரன் (வயது 24) ஆகியோர் படுகாய மடைந்தனர்.

ஊடக சுதந்திர தினத் துக்கு ஓர் இரவு முன்னதாக உதயன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதன் பின் னரும் உதயன் ஊடகவிய லாளர்கள் இலக்கு வைக்கப் பட்டு ஜனநாயகவிரோத சக்திகளால் தொடர்ச்சியான தாக்குதலுக்கு உள்ளாக் கப்பட்டு வந்துள்ளார்கள்.

இந்த அச்சுறுத்தல்கள் அனைத்தையும் தாண்டி, உதயன் தனது மக்கள் பணி யைச் செவ்வனே இடை யறாது ஆற்றிவருகின்றான் என்பதனை உதயனின் வாச கர் பெருமக்கள் நன்கறிவர். இனிவரும் காலங்களிலும் தமிழ் மக்களின் உரிமைக் காகவும் விடுதலைக்காகவும் உயர்ச்சிக்காகவும் உதயன் தன் உயிர் நீத்த எம் ஊடகப் போராளிகளின் வழி நின்று தொடர்ந்தும் குரல் கொடுப் பான். (உ-01) *(விரிவான தக வல்கள் 10ஆம் பக்கத்தில்)*

கூட்டமைப்பின் கோரிக்கைக்கு பூரண ஆதரவு வழங்கத் தயார்

01 வாழ்வதைப் போன்றே வாழ்கின் றனர். இவற்றை நான் கண் கூடாகக் கண்டிருக்கின் றேன். இவர்களுக்கு விடிவு ஏற்படுத்த வேண்டும்.

யாழ். குருநகரில் நேற்று நடைபெற்ற கூட்டு மே தினத் தில் உரையாற்றிய ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

வாருங்கள் தம்பி வாருங் கள்.. தங்கைகளே.. நாம் அனைவரும் இலங்கையர் கள் என்ற ரீதியில் ஒன்றுபடு வோம். எம் மத்தியில் தமிழர், சிங்களவர், முஸ்லீம் என்ற மாறுபாடு இல்லை. இந்த நாட்டில் அராஜகத்தை ஒழித்து ஜனநாயக மக்களாட்சியை ஏற்படுத்துவோம்.

தமிழ் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஒன்றுபட்ட இனங் களின் நீதியானதும் நியாய மானதும், நிரந்தரமானது மான தீர்வுகாணப்படவேண் டும் என்று கூறினார். அவ ரது கூற்று ஏற்றுக்கொள் ளப்பட வேண்டியது. பொறுப் பான ஒரு எதிர்க்கட்சி என்ற வகையில் அதற்கு நாம் பூரண ஆதரவை வழங்கத் தயார். அரசு அதற்கான சூழலை ஏற்படுத்த வேண் டும். தவறினால் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றி ணைந்து வீதியில் இறங்கி போராட்டம் நடத்துவோம்.

நாம் அனைவரும் ஒன்று பட்டு அராஜக அரசை வீட் டுக்கு விரட்டி ஜனாநாயக மக்கள் ஆட்சியை உருவாக்க வேண்டும் - என்றார். (த-02)

இணைந்த நாட்டுக்குள் தீர்வு எதிர்க்கட்சிகள் இணக்கம்

01 உள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார். யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த எதிர் கட்சிகளின் கூட்டு மே தின நிகழ்வில் கலந்துகொண்டு தலைமை உரை ஆற்றும் போதே சம் பந்தர் இவ்வாறு குறிப் பிட்டார்.

கூட்டமைப்பின் தலை வர் இரா. சம்பந்தனின் இந்த அறிவிப்பைத் தாம் ஏற்றுக் கொள்கிறார் என அடுத்துப் பேசிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஆமோதித்து உரையாற்றினார்.

பதின்நான்கு எதிர் கட்சி கள் இணைந்து ஏற்பாடு செய்த கூட்டு மே தின நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இந்த மே தின நிகழ்வில் சுமார் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். நாட்டின் வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் தெற்குப் பகுதிகளில் இருந்து வந்த மக்கள் இந்த மே தின நிகழ்வில் திரண்டனர்.

இந்த நிகழ்வில் தலைமை உரை நிகழ்த்திய கூட்ட மைப்பின் தலைவர் சம்பந் தன் மேலும் தெரிவித்ததா வது:

இந்த நாட்டில் தொழி லாளர்கள் பல்வேறு பிரச்சி னைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். குறிப்பாக பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப் பின்றி உள்ளனர். 25 வீத மாக உள்ள தமிழ் மக்களில் 5 வீதமானவர்களுக்கே அரச துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. மஹிந்த அரசு பாரபட்சத்துடன் நடந்து கொள்கிறது. அநீதியான இந்த அரசுக்கு முடிவுகட்ட வேண்டும். இதற்கு நாம் ஒன்றிணைந்து போராடு வது அவசியம். தொழிலா ளர்களின் உரிமைப் போராட் டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் ஒத்துழைக்கும்.

நாம் யாழ்ப்பாணத்தில் தனியான மே தினத்தை கொண்டாட ஏற்பாடு செய் தோம். அப்போது எதிர்க்கட் சிகள் இணைந்து மே தினத் தைக் கொண்டாடுவது என்று ஒரு கருத்துத் தெரி விக்கப்பட்டது. இதற்கு நாம் சம்மதித்தோம். தமிழ் பேசும் மக்களுக்கும் பெரும்பான்மை இன மக்களுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் இந்த மே தினம் ஒன்றைத் தெளிவுபடுத் தியிருக்கின்றது. நாட்டி லுள்ள அனைத்து இன மக் களும் ஒருமித்து ஒற்றுமை யாக வாழ விரும்புகிறார்கள் என்பதை அது தெளிவாக கூறியிருக்கிறது. இந்த மே தின நிகழ்வில் தமிழ், சிங் கள, முஸ்லிம் மக்கள் இணைந் துகொண்டு இதனையே வெளிப்படுத்தி இருக்கி றார்கள்.

எனினும் சில அரசியல் வாதிகளும் அரசியல் கட்சி களும் பிரிவினை வாதத்தை ஏற்படுத்த விரும்புகிறார் கள். அதன் மூலம் அவர்கள் அரசியல் சுய லாபம் தேடு கிறார்கள். இவ்வாறான தீய சிந்தனைகளுக்கு யாரும் இடம்கொடுக்க வேண்டாம். அதற்கு இந்த மே தினம் ஆரம்பப் படியாக அமை யட்டும். கடந்த 2010ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்பு மக்களின் உடனடித் தேவைக்காக தேசியப் பிரச் சினைக்க உடனடித் தீர்வு காண அரசுடன் ஒத்துழைக் கத் தயார் என நாம் அறி வித்தோம். ஒருமித்த நாட் டுக்குள்ளே நியாயமானதும் நிரந்தரமானதும் நடை முறைச்சாத்தியம் ஆனது மான அரசியல் தீர்வை பெறு வதில் தொடர்ச்சியாக ஆர் வம் காட்டி வருகின்றோம். 2011 ஆரம்பம் முதல் இந்த வருடம் ஜனவரி வரை அர சுடன் இந்த விடயம் தொடர் பாக பலமுறை பேசினோம். எந்த முன்னேற்றமும் இல்லை. எமது ஒத்துழைப்பை அரசு உதாசீனப்படுத்தாமல் இருந்திருந்தால் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமை ஓரளவேனும் மேம்பட்டிருக்கும்.

எமது மக்களின் துன்பம், துயரம் தொடர்பாக போதிய அளவு எடுத்து உள்ளது. இந்த மக்களுக்கு உதவ அரசு முன்வந்திருந்தால் வெளிநாட்டு மற்றும் புலம் பெயர் சமூகத்தின் உதவி களும் அதிகரித்திருக்கும். ஆனால் குறுகிய நோக்கம் கொண்ட அரசு எமது அழைப்பை உதாசீனம் செய் தது. இதன் காரணமாக அரசு தமிழ் மக்களை தொடர்ந்தும் துன்பப்படுத்துகிறது. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். அதற்காக எதிர் கட்சிகள் அனைத்தும் ஒன் றிணைந்துள்ளோம் - என்றார்.

முன்னதாக நேற்றுப் பிற் பகல் ஒரு மணியளவில் நல்லூர் கைலாச பிள்ளை யார் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமான கூட்டு மே தின பேரணி கோயில் வீதி வழியாக குருநகர் சென்.றோக் விளையாட்டு மைதானத்தை நோக்கி நகர்ந்தது. இதில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரம சிங்க, கூட்டமைப்பின் தலை வர் இரா. சம்பந்தன் ஏனைய எதிர்க்கட்சிகளின் தலைவர் களான மனோ கணேசன், சிறிதுங்க ஜயசூரிய, விக்கி ரமபாகு கருணாரட்ண, சரத் மன்மேந்திரா ஆகியோரு டன் எதிர்க்கட்சிகளின் நாடா ளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் தலைவர் கள் முன்னே செல்ல பேரணி ஆரம்பமானது. உணவுப் பொருள்கள், எரிபொருள் விலையேற்றம் என்பவற் றைக் கண்டித்தும், வேலை வாய்ப்பு வழங்கக் கோரியும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறும் பேரணியில் கலந்து கொண்டவர்கள் கோஷங்களை எழுப்பியது டன் பதாதைகளையும் தாங் கியிருந்தனர். சுமார் 15 ஆயி ரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர். நேற்றுக் காலை முதல் பேரணியில் கலந்துகொள்வதற்காக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பஸ்களில் வந்த மக்கள் நல்லூர் ஆலய சுற் றாடலில் குவிந்தனர்.

பேரணி குருநகர் சென். றோக் விளையாட்டு மைதா னத்தை அடைந்ததும் அங்கு கூட்டம் ஆரம்பமானது. இதில் இரா. சம்பந்தன், ரணில் விக்கிரமசிங்க உட் பட கட்சிகளின் தலைவர் கள் உரையாற்றினார்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எவ்வழி செல்லும்...?

வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தில் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்பட்டன. இந்த விவகாரம் குறித்து, பொருத்தமான சமூக, அரசியல் வழிகளில் பதில் அளிக்குமாறு, இலங்கை ஜனாதிபதியிடம் கேட்டுள்ளேன். மனித உரிமைகள் மீறப்பட்டமை குறித்துப் பொறுப்புக் கூறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி உள்ளேன்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள ஐக்கியநாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ - மூன், அங்கு வைத்து இந்தத் தகவலை ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வலுவான அதிகாரம் உண்டு. அதனால், தாம் நியமித்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை, தாமதம் செய்யாமல் நடைமுறைப் படுத்த வேண்டும். அனைத்துலக சமூகத்திடம் இருந்து எழுந்த காத்திரமான கோரிக்கைகளை அடுத்தே இலங்கை அரசு (ஜனாதிபதி) நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தது. அது நல்ல, கனதியான பரிந்துரைகளைச் செய்துள்ளது. பொது மக்கள் போரின் போது கொல்லப் பட்டமை குறித்து பொறுப்புக் கூறும் பொறிமுறை விரைவில் உருவாக்கப்பட வேண்டும் - என்றும் பான் கீ - மூன் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இதேவேளை, இலங்கை அரசு தனது சொந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதில், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும், ஐ.நா.வின் செயலாளர் நாயகமும் ஒத்த கருத்து டையவர்களாக இருப்பதாக புதுடில்லி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஐ.நா.வின் செயலாளர் நாயகமும், இந்தியப் பிரதமரும் நடத்திய கலந்துரையாடலின் போது, இலங்கை குறித்த அக்கறைக்குரிய விவகாரங்களில், இலங்கையில் நல்லிணக்கத்தை உற்பவிப்பதில் தாமதம் காட்டப்படக் கூடாது என்பதில் இருவரும் ஒத்த கருத்தை வெளியிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில், இலங்கை அரசு இன்னமும் உளன்றிக் கவனம் செலுத்துவதாக இல்லை. அமைச்சரவையின் சட்ட ஆலோசகரும் முன்னாள் பிரதம நீதி அரசருமான மொஹான் பீரிஸ், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவந்து மூன்று மாதங்களே ஆகின்றன. அதனால் பரிந்துரைகளை விரைந்து, உடனடியாக நடைமுறையாக்குவது மற்றவர்கள், வெளியார் கூறுவது போன்று இலகுவானதல்ல என்ற உள்ளூறிய நிலைப்பாட்டை, கருத்தை இரண்டொரு நாள்களுக்கு முன்னர் வெளியிட்டிருக்கிறார்.

அதாவது பான் கீ - மூன் அவசரப்படுவது போலவோ, இந்தியப் பிரதமர் அதற்கு ஒத்தூதுவது போலவோ நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைந்து நடைமுறைப்படுத்துவது சாத்தியம் இல்லை என்பதனை, அமைச்சரவையின் சட்ட ஆலோசகர் தெட்டத் தெளிவாகத் தெரிவித்திருப்பதைக் கருத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது.

போர் முடிந்து சுமார் இரண்டு மாத காலத்துக்குள் இலங்கை வந்து திரும்பிய ஐ.நா.வின் செயலாளர் நாயகம், போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் விடயத்தில் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர்குழு ஒன்றை நியமித்த வேளை, இலங்கை அரசு துள்ளிக் குதித்து பலத்த ஆட்சேபம் தெரிவித்ததும் -

பான் கீ-மூன் தாம் தீர்மானித்தவாறே நிபுணர் குழுவை நியமித்ததும் பழைய சங்கதிகள்.

ஆனால் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை வெளிவருவதற்கு முன்னரே, அதற்கு மாற்றீடாக அரசு தனது சொந்த நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்து விசாரணைகளை நடத்தியது. ஐக்கிய நாடுகள் சபை அல்லது சர்வதேச மட்டத்தில் விசாரணைகள் தேவை இல்லை என்று உலகத்துக்குச் செய்தி சொன்னது.

ஆனால், தனது சொந்த நல்லிணக்க ஆணைக்குழுவால் சிபார்சு செய்யப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதில் அரசு அசமந்தம் காட்டி வருகிறது. ஜெனிவாத் தீர்மானத்தின் முக்கியமான கோரிக்கையும் இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்த பரிந்துரைகளைப் பிசிறின்றி விரைந்து செயற்படுத்த வேண்டும் என்பதேயாகும்.

அது விடயத்திலும், இப்போது இலங்கை அரசு தாமதம் காட்டுவதால், மனம் ஒப்பிச் செயற்படுவதற்கான அறிகுறி, அசுகை எதுவும் தென்படாததாலேயே, ஐ.நா.வின் பொதுச் செயலாளரும், இந்தியப் பிரதமரும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளைத் தப்பாது, விரைந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதனை வலியுறுத்தும் தேவை எழுந்துள்ளது.

இலங்கை அரசு தனது நலன் கருதிய நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் தடம் பதிப்பது, இனிமேல் கடினம் என்பதற்கான சங்கின் முழக்கம் கேட்கத் தொடங்கி உள்ளது, அவ்வளவே.

யாழ்.நூலகத்தை எரித்த ஐ.தே.கவுடன் கொஞ்சிக் குலாவுகிறது கூட்டமைப்பு

மே தினக் கூட்டம் தொடர்பில் அமைச்சர் பஸில் சாடல்

கொழும்பு, மே 2

எத்தனை பிறவிகள் எடுத்தாலும் யாழ்ப்பாண மக்களின் மனங்களில் இருந்து யாழ். நூலக எரிப்புச் சம்பவத்தை அழித்துவிட முடியாது. அவ்வாறான பாதகச் செயலுக்குத் துணைபோன ஐக்கிய தேசியக் கட்சியுடன் மே தினக் கூட்டம் என்ற போர்வையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொஞ்சிக் குலாவுவதை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களா?

- இவ்வாறு கேள்வியெழுப்பினார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

எதிர்க்கட்சிகள் யாழ்ப்பாணத்தில் நடத்திய பொது மே தினக் கூட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பு கலந்து கொண்டது குறித்து கருத்து வெளியிட்டபோது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் அரசியல் ரீதியான தீர்மானங்களை சரியாகவே எடுப்பதில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரித்த கூட்டமைப்புக்கு இறுதியில் என்ன ஆயிற்று? அவர்களின் தீர்மானம் சரியாக எடுக்கப்படவில்லையே?

இப்போது ஆட்சி மாற்றம் என்ற கனவில் மிதந்து கொண்டு ரணிலின் பின்னால் சுற்றித்திரிகிறது கூட்டமைப்பு. ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தனது மே தினத்தைக்கூட ஒற்றுமையாக நடத்த முடியவில்லை. கட்சி இரண்டு பட்டுப் போயுள்ளது. மே தினத்திற்காக கட்சியைக்கூட ஒன்றுபடுத்தி செயற்பட முடியாதவர்கள் எப்படி இந்த நாட்டைப் பொறுப் பேற்பது பற்றிச் சிந்திக்க முடியும்? இந்த இலட்சணத்தில் இருக்கும் ஐ.தே.கவுடன் கூட்டமைப்பு ஒன்று சேர்ந்து நிற்பது அரசியல் இலாபத்திற்காகவா அல்லது மக்கள் நலன் கருதியா?

கறுப்பு ஜூலையை உருவாக்கி, ஆசியாவின் பொக்கிஷமாக இருந்த நூலகத்தை எரித்து கறைபடிந்த வரலாற்றை ஏற்படுத்திய ஐ.தே.கவுடன் யாழ்ப்பாண மண்ணில் தமிழ்க் கூட்டமைப்பு எந்த முகத்துடன் கைகோர்க்கிறது என்பதைக் கேட்க விரும்புகிறேன். தமிழ் மக்கள் ஏமாளிகள் அல்லர் என்பதைக் கூட்டமைப்பு வெகு விரைவில் புரிந்துகொள்ளும். தமிழர்களைத் தொடர்ந்தும் கூட்டமைப்பினால் ஏமாற்ற முடியாது. - இவ்வாறு குறிப்பிட்டார் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

பதவியைத் தூக்கி வீசவும் தயார்

அ.இ.ம.கா. அதிரடித் தீர்மானம்

தம்புள்ள பள்ளிவாசல் விவகாரத்தால், அரசிலுள்ள முஸ்லிம் அரசியல் பிரமுகர்களின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ள நிலையில்,அவசரமாகக் கூடிய அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அதியுயர்பீடம் பள்ளிவாசல் விவகாரத்திற்குத் தீர்வு காண்பதற்குப் பதவிகள் தடையாக இருப்பின் அவற்றைத் துறப்பதற்கும் தயாராகுவதெனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அதியுயர்பீடக் கூட்டம் கட்சித் தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் நடை பெற்றது. இதன்போது தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் 4 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என கட்சியின் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ். ஹமீட் தெரிவித்தார்.

தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் நாட்டின் இஸ்லாமிய அதியுயர் பீடமான ஜம் இய்யதுல் உலமா சபை எடுக்கின்ற தீர்மானத்தை அமுல்படுத்த தமது முழு அரசியல் பலத்தையும் பிரயோகிப்பதெனவும், அதனை நடைமுறைப்படுத்துவதற்குப் பதவிகள் தடையாக இருப்பின் அவற்றைத் துறப்பதெனவும் பிரதானமாகத் தீர்மானிக்கப்பட்டது எனவும் கட்சியின் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ். ஹமீட் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்கா, கனடாவுக்கு இலங்கை பணியாளர்கள்

கொழும்பு,மே 2

இலங்கைப் பணியாளர்களை கனடா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா, சுவிற்சர்லாந்து மற்றும் ஜேர்மனி உள்ளிட்ட பல நாடுகளுக்கு அனுப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.இது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பணியாளர்களை அனுப்புவதற்காக சகல நாடுகளுடனும் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாக அந்தத் திணைக்களத்தின் தலைவர் தெரிவித்தார்.

இந்த நாடுகளில் பொறியியலாளர், ஹோட்டல் வேலை மற்றும் விமான நிலைய வேலைகளில் அதிக வெற்றிடங்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனவேதான் இலங்கைப் பணியாளர்களைச் சர்வதேச நாடுகளில் வேலை செய்வதற்கு ஏற்ற வகையில் பயிற்றுவித்துள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(த)

ஒருபோதும் அடிபணியோம்

ரவூப் ஹக்கீம் சூளுரை

"தம்புள்ள பள்ளிவாசல் அகற்று தலுடன் தொடர்பான மிரட்டல்கள் மற்றும் வன்முறைகள் போன்றவற்றுக்கு நாம் ஒருபோதும் அடிபணிய மாட்டோம். பள்ளிவாசலை அகற்றக் கூடாது என்ற விடயத்தில் விட்டுக் கொடுப்புக்கே இடமில்லை. பலமான அரசு என்று நம்பி நாம் இணைந் திருக்கும் இந்த அரசுதான் பலவீனமான மக்களைப் பாதுகாக்கவேண்டும்"

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடியபோது கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தம்புள்ளயில் உள்ள பெரும் பான்மை இன மக்கள்கூட பள்ளிவாசல் தாக்குதல் சம்பவம் அநீதியானது என்றும், அப்பள்ளி 60 வருடங்களாக அங்கேயே உள்ளது என்றும் கூறுகின்றனர்.

அந்தப் பள்ளிவாசலை அந்த இடத்தில் இருந்து அகற்றக்கூடாது. அப்பள்ளி வாசல் அமைப்பதற்காக மாற்றுக்காணிகள் வழங்குவது தீர்வாக அமையாது. எமக்கு அந்தக் காணி தேவையில்லை.

பள்ளிவாசலை அகற்றுவது அடிப்படை உரிமை மீறலாகும். இதை நினைத்து நாம் வெட்கப் படுகின்றோம். பலவீனமான மக்களைப் பலமான அரசு காப்பாற்ற வேண்டும். பலமான அரசு என்று நினைத் துத்தான் நாம் அரசுடன் இணைந்தோம். இந்த விடயம் தொடர்பாக நான் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் பேசினேன். அவர் இதனைப் பரிசீலிப்பதாக என்னிடம் கூறினார்.

தமிழ்க் கட்சிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனு

தனிநாடு அமைப்பதே அவற்றின் நோக்கம் என அறிவிக்கக் கோரி

கொழும்பு, மே 2

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப். தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளின் ஒரே நோக்கம் இலங்கையில் தனி நாட்டை அமைப்பதே என அறிவிக்குமாறு கோரி, நேற்றுமுன்தினம் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிங்கள தேசிய முன்னணியின் செயலாளர் ஜயந்த வியனகே இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். இந்தக் கட்சிகளின் பெயர்களிலேயே இலங்கையில் தனிநாட்டை அமைப் பது தொடர்பான கருத்து அடங் கியிருப்பதாகவும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் 1985 ஆம் ஆண்டு திம்புவில் நடைபெற்ற பேச்சுக்களின் போது, தனிநாட்டைத் தவிர வேறு தீர்வுக்கு இந்தக் கட்சிகளின் தலைவர்கள் விருப்பம் தெரிவிக்கவில்லை எனவும் இந்தக் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் தனிநாடு தொடர்பான எண்ணக் கருக்கள் காணப்படுவதாகவும் அதற்காக இந்தக் கட்சிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளமைக்கு கடந்த காலச் சம்பவங்களை உதாரணமாகக் கூறலாம் எனவும் லியனகே தனது மனுவில் கூறியுள்ளார்.

இலங்கை ஒற்றையாட்சி நாடு என்பதை ஏற்றுக்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ள நிலையில், அதற்கு எதிரான நோக்கத்துடன் செயற்படுவது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை மீறுவதாகும் எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைய நிர்வாகிகள் மீது விரைவில் சட்டநடவடிக்கை

கிளிநொச்சி ஓட்டோ சங்கம் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 2

கிளிநொச்சி மாவட்ட ஓட்டோ சங்கத்தின் முன்னைய நிர்வாகத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகத் தெரிய வருகின்றது.

பழைய நிர்வாகத்தினர் கணக்கறிக்கைகளைச் சரியான முறையில் சமர்ப்பிக்கவில்லையெனத் தெரிவித்து ஓட்டோ உரிமையாளர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

2010 ஆம் ஆண்டு மீளக் குடியமர்வின் போது தெரிவு செய்யப்பட்ட கிளிநொச்சி மாவட்ட ஓட்டோ உரிமையாளர் சங்கத்தினர் தெரிவு செய்யப்பட்ட காலத்தில் இருந்து கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் எதுவித கணக்கறிக்கைகளையும் ஓட்டோ உரிமையாளர்களுக்கும், புதிய நிர்வாகத்துக்கும் சமர்ப்பிக்கவில்லை. கணக்கறிக்கைகளை நடப்பு ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டதை அடுத்து, அதற்குப் பழைய நிர்வாகம் ஒப்புதல் அளித்திருந்தது.

> பழைய நிர்வாகத்தினர் கணக்கறிக்கைகளைச் சரியான முறையில் சமர்ப்பிக்கவில்லையெனத் தெரிவித்து ஓட்டோ உரிமையாளர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

ஆனால் இதுவரை புதிய நிர்வாகத்திடம் கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. இதனால் புதிய நிர்வாகம் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பழைய நிர்வாகத்திடம் பல லட்சக் கணக்கில் நிதி இருந்ததாகவும், பழைய நிர்வாகம் பொறுப்பற்ற விதத்தில் நடந்துள்ளமையால், தற்போது 175 இற்கும் மேற்பட்ட ஓட்டோக்களைப் பதிவுக்கு உட்படுத்த முடியாமல் இருப்பதாகவும், புதிய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்துப் பழைய நிர்வாகத்தின் பொருளாளர், தலைவர் ஆகியோருக்கு எதிராக ஓட்டோ உரிமையாளர்களால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-6)

வவுனியா ஆசிரியை வீட்டில் நகைகள், பணம் திருட்டு

நெளுக்குளம், மே 2

வவுனியா நெளுக்குளம் நேரியகுளம் வீதியருகே உள்ள ஆசிரியை ஒருவரின் வீட்டில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புத்தாண்டுக்கு மறுதினம் ஆசிரியையின் வீட்டில் உள்ளவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது அதிகாலை 3 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கதவு திறந்திருந்த சமயம் உள்ளே நுழைந்து மறைந்திருந்த திருடர்கள் கட்டிலில் வைக்கப்பட்டிருந்த தாலிக் கொடி, இதற்கு அருகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சங்கிலி, காப்புக்கள் மேசையில் கைப்பையினுள் வைக்கப்பட்டிருந்த 17 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

> 14 திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியையான திருமதி எம்.நடேஸ்வரன் என்பவரது வீட்டிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆண்டு நெளுக்குளத்திலும், அதனை அண்மித்த பிரதேசத்திலும் 14 திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

சேதமடைந்த நிலையில் காணப்பட்ட சிலாவத்தை மீன்சந்தை தொடர்பாகச் செய்திகள் வெளியான பின்னர் அது இப்போது புனரமைக்கப்பட்டுப் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது. (435)

வீட்டுச் சூழலையும் சமூகத்தையும் கவனித்தால் ஒழியும் மலேரியா

கிளி. அரச அதிபர் கருத்து

கிளிநொச்சி, மே 2

எமது வீட்டுச் சூழலையும், எம்மைச் சூழ்ந்துள்ள சமூகத்தையும் கவனிப்பவர்களாக நாம் இருப்போமானால் மலேரியாவை எளிதில் ஒழித்து விட முடியும் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு கடந்த 27 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நிகழ்வொன்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இப்படியான தொருதினம் எமது மாவட்டத்தில் கொண்டாடப்படுவது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

உண்மையில் கிளிநொச்சி என்று சொன்னாலே அதிகளவானவர்கள் பயப்படுவது இந்த மலேரியாவுக்குத்தான்.

இங்கு குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே கிளிநொச்சி என்றால் மலேரியா என்ற பயம் தொடர்ந்து இருந்து வந்துள்ளது.

நாங்கள் எங்களது வீடுகளை மட்டுமல்லாது எம்மைச் சூழ்ந்துள்ள சமூகத்தையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அதன் மூலம்தான் மலேரியாவையும் ஏனைய நோய்களையும் கட்டுப்படுத்த முடியும் என்றார். (க-6)

தாய், தந்தையரை இழந்த மாணவர்களுக்கு நிதியுதவி

கிளிநொச்சி, மே 2

கிளிநொச்சிப் பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் தாய், தந்தை இருவரையும் இழந்த மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அமரர் பொன் சபாபதி ஞாபகார்த்த நிதியத்தினூடாகவே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

கல்வித் துறையில் மிக உயர்ந்த பதவிகளை வகித்து வன்னிமண்ணுக்குப்பெருமை சேர்த்த அமரர் பொன். சபாபதி ஓர் ஆசிரியராகத் தமது சேவையைத் தொடங்கி படிப்படியாக உயர்ந்து, இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தின் மேலதிக கல்விப் பணிப்பாளராக இறுதியாகக் கடமையாற்றிப் பெருமை சேர்த்தவர்.

இவரது நினைவாக உருவாக்கப்பட்டதே பொன் சபாபதி ஞாபகார்த்த நிதியம்.

கிளிநொச்சி மாவட்டத்திலே கடந்த போரின்போது தமது தாய், தந்தை இருவரையும் இழந்த 112 மாணவர்களுக்கு இந்த நிதியத்தினூடாக நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

மாணவர்களின் பெயர்களில் பணம் வங்கியில் வைப்பிலிடப்பட்டு உரிய பாடசாலைகள் ஊடாக வங்கிப் புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக நிதியத்தின் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

(க-6)

மோசமான நிலையில் சந்தியம்மன் வீதி

நெடுங்கேணி, மே 2

முல்லைத்தீவு மாவட்டம் வற்றாப்பளை சந்தியம்மன் வீதி கவனிப்பாரற்ற நிலையில் குன்றும் குழியுமாக மோசமான நிலையில் காணப்படுகின்றது.

அத்துடன் செம்பாட்டு வீதியாகவும் மாறியுள்ளது. இந்த வீதியை வற்றாப்பளை அம்மன் கோயிலுக்குச் செல்லும் பக்தர்கள், பாடசாலை மாணவர்கள், வாகனங்களில் செல்வோர் எனப் பலர் பயன்படுத்தி வருகின்றனர். இவர்கள் தற்போது பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழும் இந்த வீதி உள்ளடக்கப்படவில்லை. முல்லைத்தீவின் ஏனைய பகுதிகளிலுள்ள வீதிகள் சில புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இந்த வீதி எவரது கண்ணிலும் தென்படாமல் இருப்பது இந்தப் பகுதி மக்களுக்குப் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

(க-435)

உணவு வைக்க மறந்ததால் காலைப் பதம் பார்த்த சேவல்

தனக்கு உணவு வைக்க மறந்த ஆசிரியை ஒருவரின் காலை அவர் வளர்த்த சேவலே பதம் பார்த்த சம்பவம் வவுனியா நெளுக்குளத்தில் நிகழ்ந்துள்ளது.

நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்பித்து வரும் ஆசிரியை ஒருவர் தான் வளர்த்து வரும் சேவலுக்குக் குறிப்பிட்ட வேளையில் உணவு வைப்பது வழக்கமான நிகழ்வாக இருக்கும். அன்றைய தினம் வேலை மிகுதியால் ஆசிரியை இதனைச் செய்வதற்கு மறந்து விட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த சேவல் பலமுறை கூவியது. ஆனால் ஆசிரியை இதனைக் கவனிக்கவில்லை. இறுதியில் அங்கிருந்த மரமொன்றின் கீழ் சேவல் அமர்ந்து கொண்டது.

சிறிது நேரத்தின் பின்னர் ஆசிரியை வெளியே செல்ல ஆயத்தமானார். மரத்தின் கீழ் காத்திருந்த சேவல், சமயம் பார்த்து ஆசிரியையின் காலைப் பலமுறை கொத்திப் பதம் பார்த்துத் தனது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டது.

காலில் காயமடைந்த ஆசிரியை வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுள்ளார். இந்தச் சம்பவம் இந்தப் பகுதியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-402)

சித்திரைப் பௌர்ணமி விழா

நெடுங்கேணி, மே 2

முல்லைத்தீவு மாவட்டம் அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த சித்திரைப் பௌர்ணமி விழா எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெறவுள்ளது.

இதில் நேர்த்திக் கடன்கள், அன்னதான நிகழ்வுகள் என்பன சிறப்பாக இடம்பெறவுள்ளன.

அத்துடன் 'மாலைக்கு வாதாடிய மைந்தன்' என்னும் காத்தவராயன் நாடகமும் இடம்பெறவுள்ளது.

அடியார்கள் இந்தப் பௌர்ணமி விழாவில் பங்கு கொண்டு அருள் பெறுமாறு ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-435)

பஸ் நிலையத்தில் கடைகள் கேட்கின்றனர் வவுனியா நகரத்தின் அப்பிள் வியாபாரிகள்

நெளுக்குளம், மே 2

வவுனியாவில் பஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில் தமக்குக் கடைகளை அமைத்து வழங்குமாறு இங்குள்ள அப்பிள் வியாபாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் தெரு ஓரத்தில் அப்பிள் வியாபாரத்தில் ஈடுபட்டமை தொடர்பாக இவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இது தொடர்பாக இவர்கள் தெரிவிக்கையில்:

தாம் தமது ஜீவனோபாயத்துக்காகப் பலவருடங்களாக வவுனியாவில் தொழில் செய்துதந்து வாழ்க்கையை நடத்தி வருவதாகவும், தமக்கு அரச உதவி கிடைப்பதில்லை எனவும், தமது சிறிய முதலைக் கொண்டே அப்பிளை வாங்கி விற்றுச் சீவியம் நடத்தி வருவதாகவும் தமது உணவுக்காகத் தொடர்ந்தும் இந்த வியாபாரத்தைத் தொடர நகரசபை அனுமதியளிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். மேலும் அதிக வாடகை செலுத்தி கடைகளில் தாம் அப்பிள் வியாபாரம் நடத்த முடியாது எனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

பஸ் தரிப்பை அண்மித்த பகுதிதான் தமக்கு உகந்த வியாபாரத் தளம் என்றும் அங்கு கடை அமைத்துத் தமக்கு வழங்க வேண்டுமெனவும் மேலும் இவர்கள் நகரசபையினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கிராம அலுவலர்களுக்கு இடமாற்றம்

வலி. கிழக்கில் இன்று முதல் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், மே 2

யாழ்ப்பாணத்தில் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் முதல் தடவையாக வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கு உள்ளக இடமாற்றம் இன்று புதன்கிழமை முதல் நடைமுறைக்கு வருகிறது.

இந்தப் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் 21 கிராம அலுவலர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய ரீதியாகக் கிராம அலுவலர் இடமாற்றம் இந்த வருட முற்பகுதியில் இடம் பெறுவதற்கான அனுமதியை அமைச்சு வழங்கியிருந்தது.

எனினும் குடிசன மதிப்பீட்டுப் பணியை முன்னிட்டு அந்த இடமாற்றங்கள் இடை நிறுத்தப்பட்டிருந்தன. தற்போது மீண்டும் இடமாற்ற செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

> வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 15 தொடக்கம் 20 வருடங்களுக்கு மேலாக ஒரே பிரிவில் கிராம அலுவலர்கள் சிலர் கடமை நிலையிலிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 15 தொடக்கம் 20 வருடங்களுக்கு மேலாக ஒரே பிரிவில் கிராம அலுவலர்கள் சிலர் கடமை நிலையிலிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அதே வேளை நியமனம் பெற்ற காலம் தொடக்கம் ஒரே பிரிவில் கடமையாற்றி வந்த சமூர்த்தி அபிவிருத்தி அலுவலர்களும் உள்ளக இடமாற்றத்துக்கு இன்றிலிருந்து உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக வலி. கிழக்குப் பிரதேச செயலர் எம்.பிரதீபனிடம் கேட்டபோது,

கிராம அலவலர்களுக்கான இடமாற்றமும் சமூர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கான இடமாற்றமும் குறிப்பிட்ட அலுவலர்களின் பணி நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக குறிப்பிட்ட கால சேவையை அடிப்படையாகக் கொண்டு இடமாற்றச் செயல்திட்டம் முன்னெடுக்கப்படும் என்றார்.

(த-3-11)

கரந்தன் வீதி மோசமாகச் சேதம்

யாழ்ப்பாணம், மே 2

நீர்வேலி தெற்கு கரந்தன் வீதி மோசமாகச் சேதமடைந்துள்ளதால் இந்த வீதியூடாகப் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த வீதியில் பெரும் குழிகள் ஏற்பட்டுள்ளதால் மழை காலங்களில் வெள்ளம் தேங்கிக் காணப்படுகின்றது. அத்துடன் நீர்வேலி கந்த சுவாமி கோயிலின் வெளிவீதியாகவும் இந்த வீதி காணப்படுவதால் சுவாமி வீதிவலம் வரும்போது அடியார்கள் பெரும் சிரமப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திருவிழாக் காலங்களில் அடியார்கள் அங்கப் பிரதிஷ்டை செய்வதிலும் அவலப்படுகின்றனர்.

எனவே இந்த வீதியை உடனடியாகப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையிடம் கோரியுள்ளனர். (த-17)

பருத்தித்துறை நகரசபையால் வீதிகள், கால்வாய்கள் புனரமைப்பு

பருத்தித்துறை நகர சபையால் பருத்தித்துறை நகர எல்லைக்குட்பட்ட வீதிகள், கால்வாய்கள் புனரமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

9 லட்சம் ரூபா செலவில் தும்பளை, யக்கோவளை, ஒருதானை ஒழுங்கை, உடையார் ஒழுங்கையும், 90 லட்சம் ரூபா செலவில் வீ.எம். வீதி, கல்லூரி வீதி, முதலாம் குறுக்கு வீதி, 2 ஆம் குறுக்கு வீதி, 4 ஆம் குறுக்கு வீதி, தும்பளை வீதி, தம்பசிட்டி வீதி, கடற்கரை வீதி கதிரவேற்பிள்ளை வீதிகளும் முதலாம் கட்டை முதல் கடற்கரை வீதிவரையும் உள்ள கால்வாய்கள் 140 லட்சம் ரூபா செலவிலும் நெல்சிப் நிறுவன உதவியுடன் மேற்படி புனரமைப்புப் பணிகள் இடம் பெறவுள்ளதாக நகரசபைத் தலைவர் சபா. ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (வ-402)

வெறிச்சோடியது குடாநாடு

போக்குவரத்து சேவைகளும் மட்டுப்படுத்திய அளவில்

யாழ்ப்பாணம், மே 2

மேதினத்தால் யாழ்.நகரப் பகுதி உட்படக் குடாநாட்டின் பல பகுதிகளும் நேற்றுச் சனநடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

அத்துடன் நேற்றுப் போக்குவரத்து சேவைகளும் வெகுவாகக் குறைவடைந்திருந்தன.

யாழ்.மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் குறைந்த எண்ணிக்கையான பஸ்களே போக்குவரத்தில் ஈடுபட்டதைக் காண முடிந்தது. அதேபோன்று தனியார் பஸ்களும் மட்டுப்படுத்திய அளவிலேயே சேவையை மேற்கொண்டன.

பெரும்பாலான தனியார் பஸ்கள் மேதின நிகழ்வுக்காகப் பொதுமக்களை ஏற்றி இறக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டன. இதனால் அவை போக்குவரத்துச் சேவையில் ஈடுபடவில்லை.

மருந்தகங்கள், உணவகங்கள் மட்டுமே நேற்றுத் திறந்திருந்தன. ஏனைய சகல வியாபார நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

நகரில் மக்களின் நடமாட்டமும் மிகமிகக் குறைந்திருந்தது. மே தின ஊர்வலங்கள் நடைபெற்றமையால் காலை முதல் வீதிகளில் பெரும் எண்ணிக்கையான பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

சில இடங்களில் பொலிஸார் வாகனங்களை வழிமறித்து, வீதிச் சோதனை நடவடிக்கையிலும் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

மேதினக் கூட்டங்கள் இடம் பெற்ற பகுதிகளான யாழ்.முற்றவெளி மற்றும் குருநகர் பகுதிகளில் பாதுகாப்புக் கடமையில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து ஈடுபட்டனர். இந்தப் பகுதிகளில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய சிலர் பொலிஸாரினால் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

யாழ்.நகரப்பகுதிக்கு வெளியேயும் வியாபார நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. சந்தைகளிலும் சனக்கூட்டம் மிகக் குறைவாகவே இருந்தது.

காலையில் வீதிகளில் ஓரளவு சன நடமாட்டம் இருந்த போதும் நண்பகலுக்குப் பின்னர் அதனையும் காணமுடியவில்லை. நேற்றைய மேதினத்தால் குடாநாடு முற்றாக முடங்கியது.

(த-17)

பெண்ணைத் தாக்கிவிட்டு தாலி அறுத்த கொள்ளையர்

சாவகச்சேரியில் சம்பவம்

தென்மராட்சி, மே 2

வீதியில் நடந்து சென்ற பெண்ணை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தாக்கி விட்டு அவர் அணிந்திருந்த மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியினை அபகரித்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி கிராம்புவிலில் இடம் பெற்றது.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

சாவகச்சேரி கிராம்பு விலைச் சேர்ந்த பெண் தனது வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்தார். மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு பெண்ணைத் தாக்கியுள்ளனர். இதன் பின்னர் மோட்டார் சைக்கிளை இயக்கி விட்டு பெண்ணின் அருகே சென்ற அவர்கள் அவர் அணிந்திருந்த 7 பவுண் தாலிக் கொடியினை இழுத்து அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.

மோட்டரர் சைக்கிள் இலக்கத்தை மனப்பாடம் செய்த பெண் சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். மோட்டார் சைக்கிள் பற்றிய விவரங்களைத் திரட்டிய பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

(த-9)

வெட்டத் தடை விதிக்கப்பட்ட காளையைப் பராமரிப்பது யார்?

வழக்கு விசாரணை இன்று

யாழ்ப்பாணம், மே 2

இறைச்சிக்காக வெட்டப்படவிருந்த காளையை வெட்டுவதற்கு யாழ்.நீதிமன்றம் தடைவிதித்த பின்னர் அதனை யார் பராமரிப்பது என்பது தொடர்பான இணக்கப்பாட்டுக்காக ஒத்திவைக்கப்பட்ட காளை வழக்கு நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதில் எதிர் மனுதாரர்கள் சார்பில் நஷ்ட ஈடாக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கோரப்பட்டது. மனுதாரர்கள் சார்பில், இந்தப் பணத்தைச் செலுத்தும் அன்பர்களிடம் கலந்தாலோசித்துத் தீர்மானம் எடுக்க வேண்டியிருப்பதால் குறுகிய கால அவகாசம் தரும்படி மன்றில் கோரப்பட்டது. அதனையடுத்து இந்த வழக்கு இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிர் மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஜோனி மதுரநாயகம், ஏ.நுஃமான் ஆகியோர் வழக்கின் எதிரி மன்றுக்குக் கட்டுப்பட்டுள்ளார் என்றும் காளையைப் பராமரித்த செலவு, அது வெட்டப்படாதால் ஏற்பட்ட நட்டம், பண இழப்பு என்பவற்றை ஈடு செய்ய முடியாமல் போனதாகவும் தெரிவித்தனர்.

அதன்படி காளைக்கான உணவு, சுத்தம் செய்தல், பராமரிப்பு வழக்குச் செலவு உட்பட இதர செலவுகளுக்காக 5 லட்சத்து 40 ஆயிரத்து 800 ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும், எனினும் மனிதாபிமான அடிப்படையில் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவைத் தரும் படியும் மனுச் செய்திருந்தனர்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இ.த.விக்னராஜா, இந்தப் பணத் தொகையைச் செலுத்தும் அன்பர்களிடம் அதுபற்றிக் கலந்தாலோசித்துத் தீர்மானிக்க வேண்டியிருப்பதால் குறுகிய கால அவகாசம் தரும்படி மன்றில் மனுச் செய்தார். அதனைப் பரிசீலித்த நீதிவான் வழக்கை இன்று புதன்கிழமை வரை ஒத்தி வைத்தார்.

இதேவேளை கடந்த தவணையின் போது காளையை வெட்ட யாழ்.நீதிமன்றம் தடை விதித்ததையடுத்த மேல் முறையீடு செய்யவிருப்பதாக எதிர்மனுதாரர்கள் தெரிவித்திருந்த போதும் பின்னர் மேன்முறையீடு செய்யவில்லை எனது குறிப்பிடத்தக்கது. (த-4)

பருத்தித்துறையில் பொதுமண்டபம் அமைத்துத் தருமாறு கோரிக்கை

இந்தியத் துணைத் தூதரகத்துக்குக் கடிதம்

பருத்தித்துறை, மே 2

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட மக்கள் கலை கலாசார நிகழ்வுகளை நடத்துவதற்குப் பொது மண்டபம் ஒன்றை அமைத்துத் தருமாறு பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா ரவீந்திரன் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் கடிதம் ஒன்றைத் துணைத் தூதரகத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

பருத்தித்துறை எல்லைக்குள் பொது மக்கள் கலாசார வெளியீடுகளை மேற்கொள்வதற்குப் பாடசாலை மண்ட பங்களை நாடுகின்றனர். இவ்வாறு பாடசாலை மண்டபங்களை நாடுகின்றபோது பல்வேறு சிக்கல்கள் எழுகின்றன. பொதுவான கலாசார மண்டபம் ஒன்றைப் பருத்தித்துறை நகரில் அமைத்தால் அது பலருக்கும் பயன்படும்.

> பருத்தித்துறை எல்லைக்குள் பொது மக்கள் கலாசார வெளியீடுகளை மேற் கொள்வதற்கு பாடசாலை மண்ட பங்களை நாடுகின்றனர்.

எனவே எமது பகுதியில் அவ்வாறான மண்டபம் ஒன்றை அமைப்பதற்கு இந்திய அரசு உதவ வேண்டும் என அவர் துணைத் தூதரகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (த-402)

கைதடியில் திருட்டு

கைதடி, மே.02

வீட்டில் உள்ளோர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை சமயலறையின் ஓட்டைக் கழற்றி உட்புகுந்த திருடர்கள் வீட்டில் இருந்த 15 பவுண் நகைகள், ஒரு தொகைப் பணம், கைத் தொலைபேசி உட்பட எட்டு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை அபகரித்துச் சென்ற சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை கைதடி தெற்கில் இடம்பெற்றுள்ளது.

கைதடி தபாலக ஊழியர் சுப்பிரமணியம் சுதர்சன் என்பவரின் வீட்டில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து அவர்கள் இந்தத் திருட்டுச் சம்பந்தமாக புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-288)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்றம் போகிறார் சூகி

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன், மியன்மாருக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் ஆங் சாங் சூகியின் பதவியேற்பு தொடர்பான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மியன்மாரின் ஜனாநாயகக் கட்சித் தலைவி ஆங் சாங் சூகி நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்க இணக்கம் தெரிவித்துள்ளார். அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்புரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும், நாட்டின் அரசியலமைப்பைப் பாதுகாக்கும் நோக்கிலும் தாம் இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக ஆங் சாங் சூகி குறிப்பிட்டுள்ளார்.

நாளை நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வுகளில் தமது கட்சி உறுப்பினர்கள் கலந்துகொள்வார்கள் என்று ஆங் சாங் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சி அறிவித்துள்ளது.

மியன்மாரில் இராணுவ ஆட்சியாளர்களின் தலையீடுகள் குறைக்கப்படவேண்டும் எனத் தெரிவித்து, ஆங் சாங் சூகியின் கட்சி நாடாளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரித்திருந்தது.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன், மியன்மாருக்குப்பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் ஆங் சாங் சூகியின் பதவியேற்பு தொடர்பான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஜனநாயக செயற்பாட்டாளர் ஆங் சாங் சூகிக்கும், ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கும் இடையில் நேற்று சந்திப்புக்கள் இடம்பெற்றன.

அண்மையில் நடைபெற்ற மியன்மாரின் இடைக்கால நாடாளுமன்றத் தேர்தலில் ஆங் சாங் சூகி வெற்றி பெற்றிருந்தபோதிலும், பதவிப் பிரமாணம் செய்து கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவையில் அதிரடி மாற்றம்



எகிப்தின் அமைச்சரவையில் உடனடியாக மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில நாள்களுக்குள் இந்த மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது என்று இராணுவ ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முக்கிய அமைச்சர்களின் பொறுப்புக்கள் பெரும்பாலும் மாற்றப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எகிப்தின் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வகிக்கும் முஸ்லிம் தோழமைக் கட்சியுடன் இராணுவ ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை அடுத்து இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னாள் அதிபர் ஹோஷ்னி முபாரக் பதவி கவிழ்க்கப்பட்டதன் பின்னர், எகிப்தில் அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

மக்கள் போராட்டத்தை அடுத்து, முன்னாள் அதிபர் ஹோஷ்னி முபாரக் பதவி விலகியிருந்தார்.

பாக். பிரதமரை நீதிமன்றம் பதவி நீக்கமுடியாது

நீதித்துறை என்னை பதவி நீக்கம் செய்ய முடியாது நாடாளுமன்றம்தான் என்னை பதவி நீக்கம் செய்ய முடியும் என பாகிஸ்தான் பிரதமர் கிலானி தெரிவித்துள்ளார்.

சர்தாரி மீதான ஊழல் வழக்குத் தொடர்பாக கிலானி மீது உயர் நீதிமன்றத்தின் அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டது.

இது தொடர்பாக அவர் உயர் நீதிமன்றத்தில் முன்னிலையாகினார். அதன் போது கிலானியின் மீது குற்றச்சாட்டு நிரூபிக்கப் பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது.

இதனால் அவர் பதவி இழக்க நேரிடும் எனப் பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும், நீதிமன்றம் பதவி விலகுவது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை.

இந்தநிலையில் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற பொதுநிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட கிலானி, நான் பிரதமராவதற்கு முன்பு சபாநாயகராக, அமைச்சராகப் பதவி ஏற்றுள்ளேன்.

என்னைப் பதவி இறக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு இல்லை. அரசியலமைப்புச் சட்டத்தின் படியே என்னை பதவி நீக்கம் செய்ய முடியும். அதனைத் தீர்மானிக்க வேண்டியது சபாநாயகரே ஆவார் எனக் குறிப்பிட்டார்.

பல்லைப் பிடுங்கிய காதலி

லண்டன், மே 2

தன்னை விட்டுவிட்டு வேறொரு பெண்ணைக் காதலித்ததால் கோபமடைந்த பெண் மருத்துவர், காதலனின் எல்லாப் பற்களையும் பிடுங்கி எறிந்தார்.

போலந்து நாட்டைச் சேர்ந்த அன்னா மேகோவியக் என்ற பல் மருத்துவரே இவ்வாறு தனது காதலனை பழிதீர்த்திருக்கின்றனார். திடீரென ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால், அன்னாவை பிரிந்து சென்ற இவரின் காதலனான மாரெக் வேறொரு பெண்ணுடன் சுற்றத் தொடங்கினார். இதனால் கோபம் அடைந்தார் அன்னா.

இந்நிலையில், பல்வலியால் துடித்தார் மாரெக். பழைய காதலி பல் வைத்தியர் தானே என்று நினைத்து சமீபத்தில் அவரது மருத்துவமனைக்குக்குச் சென்றார். ஏற்கனவே கோபத்தில் இருந்த அன்னா, தன்னை ஏமாற்றி விட்டுப் போன காதலனை பழிவாங்க இதுதான் தக்க நேரம் என்று நினைத்தார். மாரெக்கின் பற்களைச் சுற்றி பல மயக்க ஊசிகளைப் போட்டார். அவருடைய வாய்ப் பகுதி மரத்துப் போனதும், சிகிச்சை அளிக்கத் தொடங்கினார். பாதிக்கப்பட்ட பல்லை எடுத்து விட்டதாகக் கூறினார். அத்துடன் அவர் வாய் திறக்க முடியாதபடி தலையுடன் சேர்த்துக் கட்டுப் போட்டு அனுப்பினார். ஒரு நாள் கழித்து கட்டை அவிழ்த்து விடலாம் என்று கூறி அனுப்பினார். தான் கைவிட்டாலும், வைத்தியர் என்ற முறையில் காதலி சிகிச்சை அளித்ததை நினைத்து சந்தோஷப்பட்டபடி வீட்டுக்குச் சென்றார் மாரெக்.

பின்னர் தலையில் கட்டை அவிழ்த்து வாய் திறந்து பார்த்த போது பொக்கையை பார்த்து அதிர்ச்சி அடைந்தார். வாயில் ஒரு பல்கூட இல்லை. எல்லாப் பற்களையும் அன்னா பிடுங்கிப் போட்டிருந்தார். இது தொடர்பாகப் பொலிஸில் மாரெக் வழக்குத் தொடுத்தார்.

இதையடுத்து அன்னாவை பொலிஸார் கைது செய்துள்ளனர். விசாரணையின்போது அவர் கூறுகையில், மாரெக்கை பார்த்ததும் கோபத்தை அடக்க முடியவில்லை. அதனால்தான் அப்படிச் செய்தேன். என்னை கை விட்டதற்குப் பழிவாங்கி விட்டேன் என்று கூறியுள்ளார். இதற்கிடையில், பொக்கை வாய் காதலன் எனக்குத் தேவையில்லை என்று கூறிப் புதிய காதலியும் அவரைப் பிரிந்து விட்டார்.



வடக்கு காசாப் பகுதியில் பாலஸ்தீனிய சிறுவர்கள், போரால் அழிந்துபோன தமது வாழ்விடங்களில் விளையாடத் தொடங்கியிருக்கின்றனர்....

பஹ்ரைனில் எதிர்க்கட்சி செயற்பாட்டாளர் வழக்கில் திருப்பம்



பஹ்ரைனில் முக்கிய எதிரணிச் செயற்பாட்டாளர் அப்துல்ஹாதி அல் கவாஜா மற்றும் ஏனையசெயற்பாட்டாளர்கள் 20 பேரின் வழக்கை மீளவும் விசாரிக்க வேண்டும் என்று அந்த நாட்டு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அரசுக்கு எதிராக சதி புரிந்தார் என்ற குற்றச்சாட்டில் இராணுவ நீதிமன்றமொன்று கவாஜாவுக்கு ஏற்கனவே கடந்த ஜூனில் ஆயுள்தண்டனைவழங்கியது.

இப்போது அந்த வழக்கை சிவில் நீதிமன்றமொன்று விசாரிக்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் வழக்கு மீண்டும் விசாரிக்கப்படும் வரை கவாஜா தடுப்பில் தான் இருக்க வேண்டும் என்பதால் அவரது ஆதரவாளர்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

சில மாதங்களுக்கு முன்னர் கவாஜா உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார். இவரது விவகாரத்தை முன்னிறுத்தி மனித உரிமை ஆர்வலர்கள் பேரணிகளில் ஈடுபட்டனர்.

'வழக்கு மீண்டும் விசாரிக்கப்பட வேண்டும், அரசு தரப்பு வாதத்தையும் குற்றஞ் சாட்டப்பட்ட தரப்பு வாக்கு மூலங்களையும் புதிய வழக்கினை போல விசாரிக்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்மானித்திருக்கிறது' என அரச செய்தி ஊடகம் தெரிவித்துள்ளது.

கவாஜாவுடன் தண்டனை யளிக்கப்பட்ட மற்ற 20 பேருக்கும் இந்த மீள்வழக்கு விசாரணைக்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

'இந்த வழக்கை ஆரம்பத்திலேயே சிவில் நீதிமன்றத்தில் விசாரித்திருக்க வேண்டும். இராணுவ நீதிமன்றத்தில் இருந்தாலும் சிவில் நீதிமன்றத்தில் இருந்தாலும் அவர்கள் எல்லாம் ஒரே ஆள்களே, ஆடை அங்கிகள் மட்டும் தான் வித்தியாசம்' என்று கவாஜாவின் மனைவி பிபிசியிடம் கூறியுள்ளார்.

டென்மார்க் மற்றும் பாஹ்ரைன் ஆகிய நாடுகளுக்கான இரட்டைக் குடியுரிமையை வைத்திருக்கின்ற கவாஜாவை மனிதாபிமான அடிப்படையில் டென்மார்க் அனுப்பிவிடுமாறு அந்த நாட்டு தூதுவரும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதால் கவாஜாவின் உடல் நிலையும் மோசமடைந்துள்ளதாக அவரது மனைவி மேலும் குறிப்பிட்டார்.

பின்லேடன் கொல்லப்பட்டதற்கான ஆதாரங்கள் வெளியிடப்படமாட்டா

ஒசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட படங்களை வெளியிடும் திட்டமில்லை, என அமெரிக்கா தெரிவித்துள்ளது. அமெரிக் காவின் தேசிய பாதுகாப்புத் துணைச் செயலர் ஜோன் பெர்னான் இது குறித்துத் தெரிவிக்கையில்:-

பாகிஸ் தானின் அபோதாபாத்தில் ஒளிந்திருந்த அல்குவைதா தலைவர் ஒசாமா பின்லேடன் கடந்த ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி அமெரிக்க அதிரடிப் படையினரால் சுட்டுகொல்லப்பட்டார்.

அவர் கொல்லப்பட்டதற்கான ஆதாரத்தை தெரிவிப்பதற்காக, சில படங்கள் மட்டும் அப்போது வெளியிடப்பட்டன. அபோதாபாத்தில் நடந்த முழு விவரங்களை வெளியிடும் திட்டம் எங்களுக்கு இல்லை.

ஒசாமா கொல்லப்பட்ட சம்பவத்தின் அனைத்துப் படங்களும் வெளியிடப் பட்டால் அது பயங்கரவாதிகளிடையே தேவையில்லாத கொந்தளிப்பை ஏற்படுத்தும். எனவே தான் அதை வெளியிடாமல் இருக்கிறோம் என்றார்.

துருக்கியில் முதல் முறையாக சிவில் சட்டம் அறிமுகம்

துருக்கியில் முதல் முறையாக முழுமையான சிவில் அரசியலமைப்பு வரையப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இதற்கான நடவடிக்கைகளைத் துருக்கி நாடாளுமன்றக் குழு ஆரம்பிக்கவுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்களை மேற்கோள்காட்டி பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

30 வருடங்களுக்கு முன்னர் இராணுவ ஆட்சியாளர் களால் வரையப்பட்ட தற்போதுள்ள அரசியலமைப்பில் ஜனநாயக மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

ஆளில்லாத விமானத் தாக்குதல்களை விரும்பும் ஒபாமா

அல் குவைதா இயக்க உறுப்பினர்களை கொல்வதற்கு ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றமை குறித்து முதல் முறையாக விவரமான கருத்துகளை அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் பயங்கரவாதத் தடுப்புத் தொடர்பான ஆலோசகர் ஜோன் பிரஸ்னன் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஆயுத வலையமைப்புக்கு எதிரான போரை வெற்றிகொள்வதற்கு ஆளில்லா விமானத் தாக்குதல்கள் உதவி புரிவதாக வாஷிங்டனில் வைத்து அவர் கூறியுள்ளார்.

தற்போதுள்ள நடைமுறை குறித்து மேலும் வெளிப்படையாகச் செயற்படவேண்டும் என்றே ஒபாமா விரும்புவதாகவும் பிரஸ்னன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அல் குவைதா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடையவுள்ள நிலையில், அவரின் இந்தக் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கப் படைகள் ஆளில்லா விமானங்கள் மூலமான தாக்குதல்களை தீவிரப்படுத்தி வரும் நிலையில் அவரின் இந்தக் கருத்துக்கள் முக்கியம் பெறுகின்றது.

ஆளில்லா விமானங்கள் மூலமான தாக்குதல்களில் பெருமளவு பாகிஸ்தானிய பொதுமக்கள் கொல்லப்படுவதும் அதற்கு எதிராகப் பாகிஸ்தான் கருத்து வெளியிடுவதும் அண்மைக் காலமாக இடம் பெற்று வரும் சச்சரவுகளுக்குக் காரணமாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பள்ளிவாசலை இடமாற்றக்கூடாது

காத்தான்குடி நகரசபையில் தீர்மானம்

காத்தான்குடி,மே2

தம்புள்ள ஜும்ஆ பள்ளிவாசல் அதே இடத்தில் இருக்க வேண்டும் என்ற தீர்மானமொன்று காத்தான்குடி நகர சபையின் விசேட கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

காத்தான்குடி நகர சபையின் விசேட கூட்டம் நகர சபை தலைவர் எஸ்.எச். அஷ்பர்தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தம்புள்ள பள்ளிவாசல் உடைத்துச் சேதப்படுத்தப் பட்ட சம்பவத்தை காத்தான் குடி நகரசபை கண்டிக்க வேண்டும் என்ற தீர்மானம் சபை உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்டபோது சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

தம்புள்ள பள்ளிவாசல் அதே இடத்தில் இருக்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் இந்தப் பள்ளி வாசலை இடமாற்றக்கூடாது. பள்ளிவாசல் உடைக்கப் பட்டுச் சேதப்படுத்தப்பட் டதை காத்தான்குடி நகர சபை வன்மையாகக் கண் டிக்கின்றது என்று இந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை ஜனாதிபதிக்கு அனுப்பு வது, மற்றும் காத் தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன அலுவலகத்தின் மீது விஷ மிகளால் மேற்கொள்ளப் பட்ட தாக்குதலை கண்டிப் பது போன்ற தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற் றப்பட்டதாகக் காத்தான் குடி நகர சபை தலைவர் எஸ். எச். அஷ்பர் தெரிவித்தார்.

கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற காத்தான்குடி நகர சபையின் கூட்டத்தின் போது நகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் எம்.எம்.அப்துர் றஹ்மானினால் தம்புள்ள பள்ளிவா யல் உடைப்புக்கெதிராக காத் தான்குடி நகர சபை கண்டனத் தீர்மானம் நிறை வேற்ற வேண்டும் என்று கொண்டுவந்த பிரேரணை உரிய முறையில் முன்வைக் கப்படவில்லை என்று தெரி வித்து நகர சபை ஆளும் தரப்பு உறுப்பினர்கள் நிரா கரித்திருந்தமை குறிப்பி டத்தக்கது. (ச)

இரத்தினபுரி வீதியில் போக்குவரத்து தடை

இரத்தினபுரி, மே.2

இரத்தினபுரி, வலகட பிர தேசவீதியில்மண்மேடொன்று சரிந்து வீழ்ந்ததில் போக்கு வரத்து நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கற்பாறை ஒன்றுடன் இந்த மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளதாக இரத்தினபுரி மாவட்ட இடர் முகாமைத் துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் கேணல் பிரியந்த அபேரத்ன தெரிவித் தார். வீதி அபிவிருத்தி அதி கார சபையின் ஒத்துழைப்பு டன் குறித்த மண்மேட்டினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ச)

சுயதொழில் கடன் வழங்கல்

மட்டக்களப்பு மாவட் டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட கல்லடி, திருச் செந்தூர் பாடுமீன் கிராம அமைப்பால் நேற்று முன் தினம் திங்கட்கிழமை உறுப் பினர்களுக்கான சிறுதொழில் வாழ்வாதாரக் கடன்கள் வழங்கப்பட்டன.

இந்தக் கடன்கள் குடும் பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சுயதொழில்களை மேற்கொள் ளல், ஏற்கனவே மேற்கொள் ளப்பட்டுவரும் தொழில் களை விருத்தி செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக வழங்கப்படுவதாக பாடு மீன் கிராம அமைப்பின் செய லாளர் சகாயராணி விஜய நாதன் தெரிவித்தார். (ச)

மட்டக்களப்பில் கைக்குண்டுகள் மீட்பு

மட்டக்களப்பு,மே2

மட்டக்களப்பின் புறநகர் பகுதியான திராய்மடுப் பகு தியில் உள்ள சுனாமி வீட் டுத்திட்டவீடு ஒன்றில் இருந்து இரண்டு கைக்குண்டுகளை மட்டக்களப்புப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் திங் கட்கிழமை மாலை அப்பகு தியில் இருந்து கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் இந்தக் கைக் குண்டுகள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட கைக்குண்டு கள் மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட் டுள்ளதுடன் மேலதிக விசார ணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

பட்டதாரிகளுக்கு நியமனம்

கண்டி,மே2

மத்திய மாகாணத்தில் வேலையில்லாத பட்ட தாரிகள் 914 பேருக்கு வேலை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கண்டி மாவட்ட செயலாளர் காமினி செனவிரத்ன தெரி வித்தார்.

இவர்கள் அரச திணைக் களங்களிலும், பிரதேச செய லாளர் அலுவலகங்களிலும் திட்ட செயற்பாட்டு உத்தி யோகத்தர்களாக நியமிக் கப்படுவர் என்று அவர் தெரி வித்தார்.

கடந்த வருடம் 1487 பட்டதாரிகளுக்கு மத்திய மாகாணத்தில் நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ச)



அம்பாறை மாவட்டத்தில் சமுக மட்ட அமைப்புக்களின் ஒன்றியங்களை நிறுவி அதனூடாக அப்பிரதேசத்தின் குறைகள் இனங்காணப்பட்டு அதனை அபிவிருத்தி செய்யும் ஐ.நா.அபிவிருத்தித்திட்ட வேலைத்திட்டத்தின் கீழ் கிராம மட்டத்திலுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான செயலமர்வில் பிரதேச செயலாளார் ஏ.மன்சூர், ஐ.நா.அபிவிருத்தித்திட்ட நிறுவனத்தின் அம்பாறை மாவட்ட தலைமை அதிகாரி எம்.ஏ.சலீம், சம்மாந் துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஹம்சார் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (31)

அம்பாறையில் சூடு குடும்பஸ்தர் படுகாயம்

அம்பாறை,மே 2

அம்பாறை, அட்டாளைச் சேனை பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் முஸ் லிம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அட்டாளைச்சேனைப் பிர தேச சபைத் தலைவரின் தம்பியாகிய முஹமது லெவ்பை நஜீப் (வயது 39) என்பவரே இந்தச் சம்ப வத்தில் படுகாயமடைந்த வராவார்.

காரில் சென்ற குறித்த நபர் அட்டாளைச்சேனை பிரதான வீதியில் காரை விட்டு இறங்கி நின்றபோதே ஓட்டோவில் வந்த சிலர் இவர் மீது துப்பாக்கிப் பிர யோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

நெஞ்சு உட்பட உடலின் பல இடங்களிலும் காயம டைந்த குறித்த குடும் பஸ் தர் உடனடியாக அக்கரைப் பற்று ஆதார வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஓட்டோவில் வந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்கள் தப்பிச் சென்றுகொண்டிருந்த போது அங்கு நின்ற சில இளைஞர் கள் ஓட்டோவைத் துரத்திச் சென்றுள்ளனர். எனினும் ஓட்டோ தப்பிச் சென்றுவிட் டது. துரத்திச் சென்ற மோட் டார் சைக்கிளொன்று விபத் துக்குள்ளாகியதில் அத னைச் செலுத்திச் சென்ற இளைஞர் ஒருவரும் படு காயமடைந்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அட்டாளைச்சேனைப் பிரதேச சபை முஸ்லிம் காங் கிரஸ் வசம் உள்ளதும் சுடப் பட்டவர் மேற்படி பிரதேச சபைத் தலைவரின் தம்பி என்பதும் குறிப்பிடத்தக் கது. (ச)

மத்தியில் ஆலயங்களை அபிவிருத்தி செய்யத் திட்டம்

நுவரெலியா,மே2

மத்திய மாகாண சபை எல்லைக்குட்பட்ட கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள சகல சமயங்களுக்கும் உரித்தான இடங்களை அபிவிருத்தி செய்யும் விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளதாக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக மாகா ணத்தில் அமைந்துள்ள மத நிறுவனங்கள் பற்றிய மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதனடிப்படையில் அவற் றின் அபிவிருத்திக்கான நிதி உதவிகள் பெற் றுக் கொடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

வறிய குடும்பங்களுக்கு கூரைத் தகரங்கள்

மாத்தளை,மே2

மாத்தளை மாவட் டத்தில் உக்குவள பிர தேச செயலாளர் பிரி வில் வறுமைக் கோட் டின்கீழ் உள்ள குடும் பங்களுக்குப் பத்து லட் சம் ரூபா பெறுமதியான கூரைத் தகரங்கள், சுய தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளோருக்கு ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான உபகர ணங்களும் அண்மை யில் வழங்கப்பட்டுள்ள தாக மத்திய மாகாண வீடமைப்பு, மின்சக்தி அமைச்சர் பந்துலயா லேகம தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு வரும் 69 பேருக்குத் தையல் இயந் திரம், சிமெந்துக் கல் வெட்டும் இயந்திரம், தச்சுத் தொழிலாளர்க ளுக்கான உபகரணங் கள் வழங்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

கணவனால் கத்திக்குத்து; மனைவி பரிதாபச் சாவு

வெலிகந்தை,மே.2

வெலிகந்தை, போவத்தை பகுதியில் கணவ னின் கத்திக்குத்துக்கு இலக்காகிய மனைவி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக வெலிகந்தைப் பொலிஸார் தெரிவித்தனர். கணவன் - மனைவிக்கு இடையில் ஏற்பட்ட குடும்பப் பிரச்சினையால் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் வாழைச்சேனை - விநாயக புரம் பகுதியைச் சேர்ந்த தங்கராசா ஜெயராணி (வயது-40) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட கணவனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச)

மாகாணசபை கலைப்புக் குறித்து கலந்துரையாடவில்லை

கிழக்கு முதல்வர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மே2

அரசு கிழக்கு மாகாண சபையைக் கலைப்பது பற் றியோ, தேர்தல் நடத்துவது தொடர்பிலோ இதுவரை எந்தவித கலந்துரையாட லையும் நடத்தவில்லை. அவ்வாறு ஒரு தேர்தல் வந் தால் தமிழ் மக்கள் குழப்பம் இன்றித் தமது அரசியலை நகர்த்த வேண்டும் என்று கிழக்கு மாகாண முதலமைச் சர் சி.சந்திரகாந்தன் தெரி வித்தார்.

மட்டக்களப்பு, கண்ண புரம் கிழக்குப் பிரதேச மக்க ளின் பிரச்சினைகள் தொடர் பில்ஆராயும் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அமைதியை தொடர்ந்து தக்கவைக்க வேண்டிய பொறுப்பு எங் களுக்கு இருக்கின்றது. வீதியை நிர்மாணிக்கும் அதேவேளைஎமக்குக்கிடைத் துள்ள அமைதியையும் காக்க வேண்டிய பொறுப்பு எமக் கிருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தின் தனித்துவம் காக்கப்பட வேண்டும். அதனையே எமது தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியும் செய்து வருகின்றது. தேர்தல் என்று வரும்போது அனைவரும் அதில் வெல்ல வேண்டும் என்றே எண்ணுவர். எமது கொள்கை வெல்லவேண் டும். மாவட்டம் வெல்ல வேண்டும், மாகாணம் வெல்லவேண்டும். அதுவே எமது நோக்கமாக இருக்கும்.

ஆனால் இன்றுவரை தேர்தல் வருமா? வராதா? என்பதுபற்றி எனக்குத் தெரி யாது. கிழக்கு மாகாண முதல் மைச்சராக நான் இருக்கின் றேன். இதுவரையில் யாரும் உத்தியோகபூர்வமாக நாங் கள் கிழக்கு மாகாண சபையை கலைக்கப் போகின்றோம். அல்லது கலைக்க உதவி செய்யுங்கள். தேர்தலை நடத்துவோம் என்று யாரும் கோரவில்லை.

தேர்தல் ஒன்று வரும் போது தமிழ் மக்கள் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் பல் வேறு குழப்பநிலையுள்ளது. இன்று முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்க ளுக்கு பல கட்சிகள் உள்ளபோதும் அவர்கள் ஒன்றுபட்டே உள்ளனர்.

ஆனால் தமிழ் மக்களின் வாக்களிப்பு என்பது கடந்த காலத்தில் மிகவும் குறைந்த நிலையிலேயே உள்ளது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இன்று எமக்குக் கிடைத் துள்ள இந்த சமாதானமான அமைதிச் சூழலைச் சிறந்த முறையில் கொண்டுசெல் வதற்கு அரசியலும் ஒரு தளமாக இருக்கவேண்டும்.

முஸ்லிம் மக்கள் பலமாக இருந்து அவர்களுக்குச் சிங் கள மக்களும் ஆதரவு வழங் கும் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் தனித்து நிற்கும் ஒரு சூழல் வந்தால் எமது இருப்பு கேள்விக்குறியாகும்.- என் றார். (ச)

புதையல் தோண்டிய நால்வர் கைது

மொறவக்க - றுவான்கந்த விகாரைக்கு அண்மையில் புதையல் தோண்டும் முயற் சியில் ஈடுபட்டிருந்த சந் தேகநபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொறவக்க பொலிஸா ருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள் ளப் பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட் டனர். இந்த நபர்களிடம் பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 வருடங்களை கடந்தும் நிற்கும் துயர நினைவு

■ தம்பி

இலங்கையில் சுதந்திரம் பேசும் அனைவரதும் குரல்களும் நெரிக்கப்பட்டே வந்திருக்கிறது. கருத்துச் சொல்லிகளாகவும், கருத்து சிருஷ்டிப்பவையாகவும் இருக்கும் ஊடகங்கள் மிக மோசமான வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதும் தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்டதாக இருக்கின்றது.

அதிகாரத்துக்கு எப்போதெல்லாம் இந்த ஊடகங்கள் வலி தருகின்றனவோ அப்போதெல்லாம் அது தனது காட்டுமிராண்டித் தனத்தைக் காட்டத் தவறுவதில்லை. அலுவலகங்களுக்குள் பகலிலும், இரவிலும் கண்மூடிய துணிச்சலுடன் இறங்கிச் சுட்டுத் தள்ளித் தனது வெறியைத் தீர்த்துக்கொள்கிறது.

தமிழர்களின் உரிமை சார்ந்த விடயங்களை மூன்று தசாப்தங்களாகத் தமிழ்ப் பரப்பில் இருந்து பேசி வரும் உதயன் பத்திரிகை இதே அதிகாரத்தின் சவால்களை எதிர்கொண்டு வருவதைத் தமிழ் மக்கள் உணர்ந்தபடியே வாசிக்கின்றனர்.

ஒவ்வொருமுறையும் நிகழ்த்தப்படும் உதயன் மீதான கொடூரத் தாக்குதல்கள் தமிழ் மனங்களையும் அச்சுறுத்துவதாக அமைந்து வந்திருக்கின்றன.

இவ்வாறு கொடூரமானதொரு நினைவை உதயனுக்கும் தமிழர்களுக்கும் அதிகாரம் தந்து இன்றோடு 6 வருடங்கள் கடக்கின்றது.

ஊடக சுதந்திரம் வேண்டிய கனதியான நாளொன்றில் அந்தப் படுகொலை நடந்தது. அந்தக் காலத்தில் தமிழர் பரப்பெங்கும் விரிந்திருந்த இனந்தெரியாத சுட்டுக்கொலைகள் 'உதயன்' மீதும் காட்டுத்தனத்தைக் காட்டியது. [ஆனால் யார் செய்தனர் என்று எல்லோருக்கும் தெரிந்திருந்தது.]

இரவு வேலையின் தொடக்கத்திற்கு ஊடகப் பணியாளர்கள் தயாராகிக் கொண்டிருக்கையில் சுவரேறிப் பாய்ந்தது குரூரம். கண்ணில் கண்டவைகளை எல்லாம் சுட்டுத்தள்ளின அவர்களிடமிருந்த துப்பாக்கிகள். அங்கு பணியாற்றிய இருவரைப் பலியெடுத்ததுடன் தமது வெறியைத் தீர்த்துக் கொண்டனர் துப்பாக்கிதாரிகள்.

இன்றுடன் ஆறு வருடங்களைக் கடந்துவிட்டது அந்தப் படுகொலை நாள். ஆனால் அவர்கள் நினைத்தது போல் அந்த ஊடகத்தின் பணியை தடுத்து நிறுத்த முடியாமல் போனது. மரணம் சூழ்ந்து கொண்டிருக்கையில் கூட தனது பணியை உதயன் ஆற்றியது. அச்சுறுத்தல்களோடு பயணித்துத் தன்னை நோக்கி நீளும் தடைகளை உறுதியோடு எதிர்கொள்வதால்தான் காலப் பெருவெளியில் கரைந்து போகாமல் இன்றும் நின்றுநிலைக்கிறது உதயன்.

இந்தப் படுகொலையின்பின்னரும் வழமையான வழக்குகள், மற்றும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இலங்கையின் எழுதப்படாத விதியாக இருக்கும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாத, தண்டிக்கப்படாத நிலைமைகள் இன்னும் இந்தப் படுகொலைகளிலும் தொடர்கின்றன. குற்றவாளிகள் தொடர்ந்தும் உருவாகியபடியே தம் தாக்குதல்களைத் தொடர்ந்த வண்ணமிருக்கின்றனர். உளவியல் ரீதியான, பௌதிக ரீதியான தாக்குதல்களுக்கு அவர்கள் பயிற்றப்பட்டுகளமிறக்கப்பட்டிருக்கின்றனர். இந்த வன்முறை கொடூரமானதாக இப்போதும் மாறிவருகின்றது.

★★★

6 வருடங்களை அந்தப் படுகொலை கடந்த பின்னரும் நினைவுகளை மறக்காமல் பகிர்ந்து கொள்கின்றனர் அந்தத் துயரச் சம்பவத்தை நேரில் பார்த்த உதயனின் ஊழியர்கள்.

"7 மணிக்கு வேலையைத் தொடங்கினன். தொடங்கிக் கொஞ்சத்தால் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அந்த நேரத்திலை அது வழமைதானே. யாரையோ சுடுறாங்கள் என்டுட்டு பேசாம இருந்திட்டம். கொஞ்சத்தால எங்கட செக்கியூரிட்டிப் பொயின்டிலதான் அது நடந்திருக்கு என்கிறது தெரிய வந்தது. உடன கனக்க வெடிச்சத்தம் கேட்கத் தொடங்கிற்று. மேல வாறாங்கள் என்கிறது உணர்ந்து கொண்டதும் ஓடி ஒளிச்சிட்டம். பிறகு மேல வந்து தேடித் தேடிச் சுட்டாங்கள். கீழ இறங்கிப் போயிற்று திரும்பவும் வந்து கொம்பியூட்டர்களுக்கு சுட்டாங்கள்".

"எல்லாம் முடிய கீழபோய் பாத்தால் 2 பேர் செத்துக் கிடக்கினம். 2 பேர் காயப்பட்டுக் கிடக்கினம். பிறகு என்ன செய்தம் என்டே தெரியேல்ல. ஆனால் அடுத்த நாள் பேப்பர் வந்தது. இரவிரவா வேலை செய்தம். எதைத் தொவும் பயமா இருந்தது".

"நாங்க அந்த நேரத்திலை செத்தம் என்டு தான் நினைச்சம். கிட்டத்தட்ட 15 நிமிசம் வரும். பயத்திலை செத்துப் போன நேரமா அது இருந்தது". – என்கிறார்கள் இன்றும் எஞ்சியிருக்கும் ஊழியர்கள்.

பயண வழி படுகொலைத் தடங்கள்



முதல் இலக்கான சுரேஷ்

கட்டளையை மீறிய ரஞ்சித்துக்கும் சூடு

ஊடக ஆயுதங்களையும் கொலை செய்தனர்

படுகொலைகள் அரங்கேறிய பகுதி

2006.05.02 மரணத்தை கையில் வைத்தபடி அச்சேறிய செய்தி

கடவர் ஏறிக்குதித்து வந்தவர்களில் நால்வர் முதலில் அலுவலகப் பாதுகாப்பு ஊழியர் இருக்கும் இடத்திற்குச் சென்று துப்பாக்கி முனையில் அவரைக் கீழே படுக்கவைத்தனர். நிமிர்ந்தால் சுடுவோம் என்று மிரட்டி விட்டு அவர் அருகில் ஓர் ஆயுததாரி நின்று கொண்டான். ஏனையவர்களில் இருவர் அலுவலகத்தின் முன்புறம் இருந்த சந்தைப்படுத்தல் முகாமையாளரின் அலுவலகம் நோக்கி சென்றனர். எந்தக் கேள்விக் கேள்வியும் இன்றி அவர் மீது சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். அவர் இருந்த இடத்திலே மடிந்து வீழ்ந்தார்.

பின்னர் அங்கிருந்து திரும்பிய அவர்கள் பாதுகாப்பு அலுவலரின் அருகோடு இருந்த விநியோகப் பகுதிக்குள் நுழைந்தனர். அங்கு பணிபுரிந்து கொண்டிருந்த அனைவரையும் முதலில் கீழே இருக்குமாறு கூறி தாறுமாறாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். பின்னர் அனைவரையும் கீழே படுக்குமாறு கூறினர். எவரும் நிமிர்ந்து பார்க்கக் கூடாது என்று கூறிவிட்டு மீண்டும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதில் பாதுகாப்பு ஊழியருக்கு அருகே நிலத்தில் வீழ்ந்து படுத்திருந்த விநியோகப்பகுதி ஊழியரான உதயகுமார் காயமடைந்தார். காயப்பட்டதும் அவர் "ஐயோ" என எழுப்பிய குரலைக் கேட்டு துள்ளி நிமிர்ந்து பார்த்த ரஞ்சித்தை நோக்கி ஆயுததாரி துப்பாக்கியால் சுட்டான். பாதகன். காயமடைந்து கீழே வீழ்ந்த அவரின் முதுகில் காலை வைத்து மீண்டும் அவர் மீது சரமாரியாக துப் பாக்கிப் பிரயோகம் செய்தான். அதனால் அவரும் அந்த இடத்திலே மடிந்தார்.

விநியோகப் பிரிவில் இருந்த உதவி விநியோகப் அலுவலரின் தலையில் துப்பாக்கி வைத்து மிரட்டி "எங்கேயடா கெட் ஒபிஸ் காட்டு" என கேட்டுள்ளனர். பின்னர் துப்பாக்கி முனையில் அவரை இழுத்துச் சென்று ஆசிரியர் பீடத்தைக் காட்டுமாறும் மிரட்டியதுடன் குறித்த செய்தியாசிரியரின் பெயரைக் கூறி "அவன் எங்கே?" என்று கேட்டனர். பாதுகாப்பு ஊழியரின் பகுதியில் இருந்து உள்ளே ஆசிரியர் பீடத்துக்கு செல்லும் வரையும் கண்ணில் கண்ட இடத்தில் எல்லாம் சகட்டு மேனிக்குத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதையடுத்து சுதாகரித்துக் கொண்ட ஆசிரியர் பீட ஊழியர்கள் மறைவிடம் ஒன்றில் பதுங்கிக் கொண்டனர் என்பதால் அதிர்ஸ்டவசமாக உயிர்தப்பிக்கொண்டனர்.

சகட்டுமேனிக்கு ஆசிரியர் பீடத்துக்குள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட ஆயுததாரிகள் மூவரும் பின்னர் விநியோக அதிகாரியையும் இழுத்துக்கொண்டு படிகளில் இறங்கத் திரும்பினர். எனினும் திடீர் என விழிப்பு வந்தவர்களாக அவர்களில் ஒருவன் ஓடிச் சென்று கணினி அறைக்குள் புகுந்து கண்ணாபின்னா என்று சுட்டுத் தள்ளினான்.

இதில் அங்கிருந்த கணினிகள் அனைத்தும் சிக்கித் சிதறி சின்னாபின்னமாகின பத்திரிகையைப் பிரசுரிப்பதற்கு முடியாத அளவிற்கு அனைத்துக் கணினிகளும் சல்லடைகளாகத் துளைக்கப்பட்டன.

அதன் பின்னர் அங்கிருந்து வெளியேறிய ஆயுததாரிகள், சென்ற இடங்களில் எல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். மீண்டும் பாதுகாப்பு ஊழியரின் பகுதிக்கு சென்ற ஒருவர், பத்திரிகையின் அச்சகப் பகுதிக்குச் சென்று தாக்க வேண்டும் என்று அரை குறைச் சிங்களத்தில் தெரிவித்துள்ளார்.

எனினும் மற்றையவர் அதனை மறுத்து "நேரமாகி விட்டதால் உடனடியாக நாங்கள் செல்ல வேண்டும்" என்று சிங்களத்தில் பதிலளித்துள்ளார்.

துப்பாக்கி முனையில் தம்முடன் இழுத்துச் சென்ற விநியோக உதவி அதிகாரியைக் கீழே படுக்குமாறு கூறிவிட்டு சடுதியாக வீதிக்குச் சென்று மோட்டார் சைக்கிள்களில் ஏறித் தப்பிச் சென்றனர் கொலையாளிகள். இன்னும் அவர்கள் யார் என்று தெரியாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் அரச பொலிஸார்.

குறிப்பு:
வழமையாக இந்தப் பகுதியில் இடம்பெறும் செந்தூரியின் கட்டுரை நாளை பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குழாய்க்கிணறுகளும் குழப்பங்களும்

■ யாழ்ப்பாணத்தான்

அவசரமான உலகம் இது. குறைந்த நேரத்தில் அதிகளவிலான பலன்களை பெறுவதே நவீன மனிதர்களின் நோக்கம். அதற்குத் துணை போகும் அதி நவீன தொழில் நுட்பங்கள் எம் தேவைகளைக் குறுகிய நேரத்தில் வினைத்திறனுடன் பூர்த்தி செய்யினும் அவை மறைமுகமாக பாராதூரமான பாரிய பக்க விளைவுகளை ஏற்படுத்தி நிற்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. இதன் வெளிப்பாடுகளே இன்றைய பூமி அனர்த்தங்கள், வானியல் மாற்றங்கள், மாற்ற முடியாத உயிர்க் கொல்லி நோய்கள் போன்றனவாகும்.

நீண்டகால அழிவுகளில் இருந்து மெல்ல மீண்டு வரும் எம் குடாநாடும் இந்த நவீன தொழில் நுட்பத் தொற்றலுக்கு ஆளாகாமல் தப்பவில்லை. நில மட்ட வீடுகள் இன்று வானைத் தொடும் கோபுரங்களாக, மாடிகளாக ஒரு வீடு இருந்த வளவினுள் 2,3 வீடுகள் அமைக்கப்படுகின்றன. இதுவரை சினிமா வழி பார்த்த நவீன நகரம் (Modern city) இன்று எம் கண் முன்னே உருவாகி வருகின்றது. பல பரப்பளவில் கட்டப்படும் வீடுகளும் கட்டடங்களும் இன்று சில குழி அளவிலான நிலங்களிலேயே கட்டப்படுகின்றன. இவற்றைத் தாங்கும் சக்தி எம் நிலத்துக்கு உள்ளதா என்ற கேள்வி இன்றும் கேள்விக் குறியாகவே உள்ளது. இதற்கானத் தொழில்நுட்பம் மட்டும் ஏன் இன்னும் குடாநாட்டுக்கு வரவில்லையோ தெரியவில்லை. இல்லை மறைமுகமாகக் கொண்டு வரப்பட்டால் தடுக்கப்பட்டு





இருக்கின்றதோ தெரியவில்லை.

இந்த இட நெருக்கடியால் நிலத்தடி நீர்வளத்தையே ஒரே யொரு நீர் மூலமாக நம்பி இருக்கும் குடாநாடு தான் நீர் பெறும் வழிமுறைகளையும் மாற்றியமைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதன் வெளிப்பாடே இன்று அதிகளவில் குடாநாட்டில் தோண்டப்படும் குழாய்க் கிணறுகள். கையால் துளையிடுபவர்களாலும், பாரிய இயந்திரங்கள் மூலம் துளையிடுபவர்களாலும் எம் குடாநாடு அம்மணமாக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது என்பதே உண்மை. இதனைக் கட்டுப்படுத்தும் நடைமுறைகள் பெயரளவில் மட்டுமே திணைக்களங்களில் உள்ள நிலையில், நாளுக்கு நாள் அதிகளவான துளைகள் எம் பூமித் தாயின் மேல் போடப்பட்டுக் கொண்டுதான் உள்ளது.

உண்மையில் வெட்டுக்கிணற்றை விட மிக விரைவாக அமைக்கக் கூடிய குறுகிய இடத் தேவை கொண்ட குறைந்த செலவில் அமைக்கப்படக் கூடியவையே குழாய்கிணறுகள். இவை எம் வெற்றுக் கண்ணால் காணமுடியாதளவு எமக்கு ஏற்படுத்தும் பாரிய தீங்குகளை எம் மக்கள் அறிந்து கொள்வது மிக அவசியம்.

பின்வரும் இரு படங்கள் எம் குடாநாட்டின் நிலக்கீழ் நீர்ப் படைகள் எவ்வாறு அமைந்துள் என என்பதை ஆய்வுகளின் பின் காணப்பட்ட தோற்றப்பாடாகும்.

பாறைகளின் இடையே பல படைகள் காணப்படின், நீரியல் அழுத்தம் காரணமாக, நிலக்கீழ் நீர்ப்படையானது மேற்காட்டப் பட்டவாறு ஒருவில்லை போன்ற உவர் நீர்ப்படையை உருவாக்கும்.

சாதாரண கிணறுகள் அமைக்கப்படும் பொழுது அவற்றில் நீர் எடுக்கும் அளவும் குறைவாகக் காணப்படுவதுடன் எடுக்கப்பட்ட நீர் மீள் நிரம்பல் அடைய வேண்டிய நேரம் கிடைக்கின்றது. ஆனால் குழாய்கிணறுகள் அமைக்கப்படும் பொழுது அவை நீர்த் தாங்கு படைகளின் பாரிய நீர் தளம்பலை ஏற்படுத்துகின்ற. அத்துடன் கனரக இயந்திரங்களைக்கொண்டு குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும் பொழுது நிலத்திற்குக் கீழான தரையமைப்பில் பாரிய மாற்றங்கள் வெடிப்புகள் ஏற்படுகின்றன. இதனால் நிலத்தடி ஓட்டம் தடைப்படுகின்றதோடல்லாமல் திசைமாறுகின்றது. இதனால் தொலைவில் உள்ள மலக்குழிகளோ கழிவுகளோ எம் நிலக்கிழ் நீரை தொற்றடையச் செய்ய அதிக வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன.

இத்துடன் இவ்வாறு இயந்திரங்கள் கொண்டு அமைக்கப்படும் குழாய்கிணறுகள் அதிகளவு ஆழமாகவும் அதிக நீர் தள்ளும் சக்தி கொண்டவையாகவும் காணப்படுகின்றன. இதனால் அவை அதிகளவு நீரை எடுப்பதற்குத் தூண்டுகின்றன. இதனால் மேற்காட்டப்பட்ட படத்தில் உள்ளவாறு உவர் நீரானது வேகமாக "உட்புகுதல்" மூலம் நன்னீர்ப் படைகளை மாசாக்கத் தொடங்குகின்றது.

இதே போன்று நன்னீர் கிணறுகளினுள் நீர் கொள் சக்தியை அதிகரிக்க எண்ணி ஆழமாக குழாய்க் கிணறுகளை அமைத்தலின் மூலம் மக்கள் நீரின் தரத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படுகின்றது. அதே போல குழாய்க் கிணறுகள் மூலம் தொடங்கப்பட்ட நீர் விநியோகத் திட்டங்கள் ஆரம்பத்தில் நன்னீரை வழங்கிய போதும் இன்று அவை மாற்றமடைந்து நீரை விநியோகிப்பது, நாம் எடுத்துரைத்த விடயங்களுக்குச் சான்றுபகரும் உண்மையாகும்.

காலத்தின் தேவைக்காகக் குழாய் கிணறுகள் அமைக்கலாம். ஆயினும் அதற்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்று மேற்கொள்ளல் வேண்டும். ஆயினும் எம் மக்களுக்கு இந்தத் தொழில் நுட்பம் கைக்கெட்டாத ஒன்றாகவே காணப்படுகின்றது. நிலத்தடி நீரை நாம் உரிய முறையில் பெற்றுக்கொள்ள நீர்ப் புவியியல் ஆலோசனை (Hydrogelogical survey) எனும் நுட்பம் மிக அவசியம். ஆயினும் உரிய தரப்பினால் இதற்கான கட்டணங்கள் ரூபா 30,000.00 தொடக்கம் ரூபா.40,000.00 வரை அறவிடப்படுகின்றது.

அம்மணமாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் குடாநாட்டைக் காக்க உங்கள் பங்களிப்பு என்ன? உரிய திணைக்களங்கள் எம் மக்களுக்கு உரிய முறையில் பங்களிப்புச் செய்யுமா? இன்றேல் எந்தப் பயிரும் விளையும் எம் வளப்பூமி பாலைவனமாவது நிச்சயம். எம்மக்கள் மீண்டும் ஓர் பாரிய இடப்பெயர்வை நீருக்காக எதிர்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்படலாம். இதற்கான தீர்வு தான் யார் கையில்.

நில அபகரிப்பால் பாதிப்படையும் விதைப்பு

■ இ.இந்திரன்

இறுதிப் போர்ச் சூழல் ஓய்ந்த பின் வன்னிப் பெரு நிலப்பரப்பிலும் ஏனைய மருதநிலமெங்கிலும் இந்தமுறை பெரும் போக நெற்செய்கை அமோக விளைச்சலைத் தந்து துன்புற்ற மக்களின் மனங்களின் வாழ்வாதாரத்திலும் பால்வார்த்துள்ளது. அத்தோடு சிறுபோகத்துக்குரிய ஏற்பாடுகளிலும் விவசாயிகள் தற்போது ஈடுபட்டுள்ளனர். புலம்பெயர்வின் பின் பொதுவாக இந்த முறைதான் அனைத்து விளைச்சல் நிலங்களிலும் அமோக விளைச்சலை காணக்கூடியதாக உள்ளது.

ஆயினும் இந்த விளைச்சல் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலேயே பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. விளைச்சலின் பின்பும் அதை விட அதிகளவான பிரச்சினைகளை வன்னி விவசாயிகள் எதிர்கொள்கின்றனர். பொதுவாக நெல் கொள்வனவிற்கென இங்கு வரும் தென்பகுதி கொள்வனவாளர்கள் விவசாயிடம் நெல்லினை கொள்வனவு செய்த பின் அதன் பெறுமதிக்கு காசோலைகளை வழங்கிச் செல்கின்றனர். பின் அவர்கள் வங்கிக்குக் கொண்டு செல்லும் போதுதான் புலப்படுகிறது அது போலிக் காசோலை என்பது.

இந்த முறை, சென்ற வருடத்தைவிட கூடிய அளவிலான விளை நிலம் விதைப்புக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் பல ஹெக்ரேயர் பரப்பளவினைக் கொண்ட வயல் நிலங்கள் விதைப்பினை மேற்கொள்ள முடியாமல் தரிசு நிலங்களாகக் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இதில் சில இராணுவ ஆதிக்கத்துக்கு உட்பட்டவை. ஏனையவை மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்படாமல் இருக்கும் பிரதேசம். எடுத்துக்

"புதுக்குடியிருப்புச் சந்தி தொடக்கம் கேப்பாப்புலவு வழியாக வற்றாப்பளை எல்லை வரை நூற்றுக்கணக்கான ஹெக்ரேயர் வயல் நிலப்பிரதேசங்கள் தரிசாக விடப்பட்டிருக்கின்றன.

காட்டாக கிளிநொச்சி மாவட்டத்தில் முரசுமோட்டை சேற்றுக்கண்டி அம்மன் கோயில் வழியாகப், பெரியகுளம் பிள்ளையார் கோயில் சந்தியில் தொடுக்கும் பழைய கண்டி வீதி நெடுகிலும் அமைந்துள்ள நூற்றுக்கணக்கான ஹெக்ரேயர் வயல் நிலம் விதைப்பின்றி உள்ளது. அந்த நிலங்களுக்கு உரித்தான மக்கள் அவற்றை மீள ஒப்படைக்கும்படி கேட்டால் கூட சில அரசியல் தலையீடுகளால் அவற்றை மீளப் பெற முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். சகல பிரதேசங்களிலும் இவ்வாறாக மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்ளுமாறு வண்ணமே உள்ளனர். இதேபோல் புதுக்குடியிருப்புச் சந்தி தொடக்கம் கேப்பாப்புலவு வழியாக வற்றாப்பளை எல்லை வரை நூற்றுக்கணக்கான ஹெக்ரேயர் வயல் நிலப்பிரதேசங்கள் தரிசாக விடப்பட்டிருக்கின்றன. அவ்வாறாக இந்தப் பிரதேசங்களில் மீள் குடியமர்வு என்பது இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை. இலங்கை விமானப்படையினர் மக்களின் வாழ்விடங்கள் உட்பட அவர்களின் வயல் நிலங்கள் அனைத்தையும் முட்கம்பி வேலியால் அடைத்து "விமானப்படையினருக்கு உரித்துடையது" எனப் பெயர்ப் பலகை இடப்பட்டுள்ளது. மேலும் பரந்த எவு பரப்பளவைக் கொண்ட காட்டுவளமும் இங்கு அழித்தொழிக்கப்பட்டுள்ளன.

வன்னியின் வளங்களும் சிங்களவர்களால் சூறையாடப்பட்டு வருகின்றன. இரும்பு வியாபாரம் தொட்டு அனைத்து வளங்களையும் தெற்கு வியாபாரிகள் கடத்திப் போகின்றனர்.

இந்த நிலையில் இங்கு குறிப்பிடப்பட்ட பிரச்சினைகள் தொடர்ந்தும் கவனத்தில் எடுக்கப்படாது விடப்படுமாயின் அடுத்த வருட விளைச்சல் சடுதியான வீழ்ச்சியைச் சந்திக்கும் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். ஏற்கனவே எகிறிக் கொண்டிருக்கும் விலைவாசி உயர்வுகளுக்கு மத்தியில் விளைச்சலில் இது போன்ற பிரச்சினைகள் எழுவது வன்னிப்பிரதேச விவசாயத்தின் மீள் எழுச்சியைப் பாதகமான திசையை நோக்கித் திருப்பும் எனவும் அஞ்சுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட 'A'தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர், # 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே.0212226944

நல்லூர் பாம் சென்ரர் கனகபுரம் வீதி, கிளிநொச்சி. தொ.பே. 0776225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை. தொ.பே. 0778996085

31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்	மறைவு
01 ★ 08 ★ 1926	02 ★ 04 ★ 2012

அமரர் கந்தையா வேலாயுதபிள்ளை

(ஓய்வு பெற்ற இ.போ.ச. ஊழியர்)

கடந்த 02.04.2012 ஆம் திகதி இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் கந்தையா வேலாயுதபிள்ளை அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.05.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்கள் குடும்பத்தாருடன் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம் பெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்சடங்கில் பங்கு கொண்டோர்க்கும் அவரது மறைவுச்செய்தி அறிந்து பல வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசடி வீதி, தாவடி வடக்கு, கொக்குவில். மனைவி

வாகனம் விற்பனைக்குண்டு

Mizuspsi Candar அலுமினிய Body 2007 Model NP LH XXXX விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு : 0771144279, 0776384558

இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.450 மட்டுமே. தினமும் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை திறக்கப்படும்.

நல்லூர் பாம் சென்ரர், #19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

விவசாய டிப்ளோமாவுக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை விவசாயக் கல்லூரியில் டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்றை நெறிக்கு விண்ணப்பிப் போர் ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் ஏதாவது ஒரு பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். (வ-14)

சஞ்சிகைக்கு ஆக்கம் கோரல்

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தினால் வெளியிடப்படவுள்ள அரையாண்டு சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுடையோர் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு நேரடியாகவோ, தபால் மூலமாகவோ ஆக்கங்களைச் சமர்ப்பிக்க முடியும் என கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன் அறிவித்துள்ளார். (வ-14)

பெண்ணிடம் சங்கிலி அபகரிப்பு

நவாலி மே.2

சண்டிலிப்பாயில் பகல்வேளையில் வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியைத் திருடர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

சண்டிலிப்பாய் பழம் வீதியில் பெண்ணொருவர் நடந்து சென்று கொண்டிருந்தபோது சைக்கிளில் வந்த இருவர் அப்பெண் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

இது குறித்து மானிப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளதாகவும் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் குற்றத் தடுப்புப்பிரிவுபொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (வ-100)

வெற்றிடங்கள்

கொழும்பை தலைமையகமாகக் கொண்ட கணினி நிறுவனத்தினது பின்வரும் கிளைகளுக்கு குறிப்பிட்ட பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை

இடங்கள்	பதவி வெற்றிடங்கள்
* யாழ்ப்பாணம்	1. கணக்கு உதவியாளர்
* வவுனியா	ஆண்/ பெண் (கணினி அறிவு
* திருகோணமலை	முக்கியம்)
* கிளிநொச்சி	2. தொழில்நுட்பவியலாளர்
* நெல்லியடி	3. சந்தைப்படுத்தும் பிரதிநிதி

அனைத்துப்பதவிகளுக்கும் 01,02 வருட அனுபவம் எதிர்பார்க்கப்படுகின்றது. தகுதியானவர்கள் தங்களது சுயவிவரங்களுடங்கிய விண்ணப்பத்தினைக் கீழ்வரும் விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும்.

MICRO PC SYSTEMS
No: 115c, W.A.Silva Mawatha,
Wellawatha.
T.P: 021 222 5893
E.mail:-mail@micropcsystems.com

31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

கடந்த 02.04.2012 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி அமரர்

கந்தையா சிவபாக்கியம்

அவர்களின் 31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (02.05.2012) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காரைக்கால் வீதி, இணுவில். (17586) (6,7,10) குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

சிதம்பரப்பிள்ளை இராமநாதர்

(இளைப்பாறிய அதிபர்)

மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகவும், இல.62, அரச வீதி, நல்லூரை தற்போதைய வசிப்பிட மாகவும் கொண்ட இளைப்பாறிய அதிபர் சிதம்பரப்பிள்ளை இராமநாதர் கடந்த (30.04. 2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மிருசுவில் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-கற்பகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற சிவபாக்கியத்தின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக்கணவரும், குமுதநாயகி (ஆசிரியை, வைத்தீஸ்வராக் கல்லூரி), மகேந்திரன் (இளைப்பாறிய அதிபர்), அமிர்தகௌரி (ஆசிரியை, அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்), வசந்தசெல்வி (தாதிய உத்தியோகத்தர், யா/போதனா வைத்தியசாலை), சிவேந்திர கலாநிதி (அரச நில அளவையாளர், நில அளவைத் திணைக்களம்-யாழ்ப்பாணம்), சர்வேந்திரன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கச்சேரி-யாழ்ப்பாணம்), சத்தியேந்திரம்பிள்ளை (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி- இணைப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாமநாதன் (முன்னாள் தொழில்நுட்ப வியலாளர், பெருந்தெருக்கள் திணைக்களம்), பரலோகராசா (தொலைபேசி இயக்குநர், மந்திகை அரசினர் வைத்தியசாலை), மனோராஜி (ஆசிரியை, நுணாவில் கிழக்கு, அமிர்தாம்பிகை வித்தியாலயம்), லக்ஷிமிபிரபா (ஆசிரியை, கந்தர்மடம், சைவப்பிரகாச வித்தியாலயம்), ஆதிரை (ஆசிரியை, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்), செவ்வந்தி (ஆசிரியை, மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும், சோபியா (மாணவி, யாழ்/இந்து மகளிர் கல்லூரி), பிரவீணா, சிவநிரோஜினி, மஞ்சுளானி, ஆரணி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவிகள்), அபிராம், ரவீந்திர சங்கர், பிருந்தாபன், கோபிகிருஷ்ணா (யா/இந்துக்கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2012) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு இல. 62, அரச வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 62, அரச வீதி, (இளம் கலைஞர் மன்றம் அருகில்), நல்லூர் - யாழ்ப்பாணம்.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்

(17026) (6,7,10)

தீராத நினைவலைகள்

5ஆம் ஆண்டுநினைவு 3 ஆம் ஆண்டு நினைவு

அமரர் மங்கயர்க்கரசி பகவான்

அமரர் ஞானசோபனை தேவந்திரன்

அமரர் தே. றேனிதா

காலங்கள் கரைந்தோடினாலும்
நாங்கள் அனைவரும் ஒன்றாய் வாழ்ந்த நினைவலைகள்
என்றும் எம்மை விட்டு நீங்காது
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி குடும்பத்தினர்.

ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

சரண்ஜன் ஸ்ரீசுரேந்திரன்

(யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி A/L மாணவன்)

திதி : பூர்வபக்க ஏகாதசி (02.05.2012)

அன்னை மடியில்:	அரண் அடியில்:
13.07.1993	14.04.2011

நேற்றுவரை எம்முடன் இருந்தவனே
இன்று எம்முடன் இல்லையே என்றதும்
நெஞ்சம் கனக்குதய்யா - இன்றும்
எம் கண்களுக்குள் உன் உருவம் தான்
எப்படி ஐயா உன் நினைவுகள் எம்மைவிட்டு
நீங்கும்? என்றும் அழியாதையா உன் நினைவுகள்

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாசமிகு அப்பா, அம்மா, அண்ணாவி, அக்கா, மைத்துனர், மைத்துனி, மருமக்கள்.

குடும்பத்தினர்.

(17637) (6,7,10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ரணிலின் கருத்தால் கவலையில்லை

மத்திய வங்கி ஆளுநர் கூறுகிறார்

கொழும்பு,மே2

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தால் தாம் வருத்தப்படவில்லை என்று இலங்கையின் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

இந்தியாவின் அக்னி ஏவுகணையைக் காட்டிலும் இலங்கையின் அஜித் நிவாட் கப்ரால் என்ற ஏவுகணை அழிக்கும் சக்தியை அதிகமாகக் கொண்டது என்று ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்துள்ளார்.

எனினும், எதிர்க்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடந்த 6 வருடங்களாக இவ்வாறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருவதாக கப்ரால் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களின் கருத்துக்களால் தாம் பின்னோக்கிச் செல்லப்போவதில்லை என்று கப்ரால் தெரிவித்தார். ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் ஓர் அரச நியமனமாவது வழங்கப்படவில்லை. அரச சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டன என்று அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சா டி சில்வா, மத்திய வங்கியின் செயற்பாடுகளை விமர்சித்து வருகிறார், எனினும் பொது மக்கள் இந்தக் கருத்துக்களைக் கவனத்தில் கொள்ள மாட்டார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நினைவு தினத்துக்காக...

தமிழ் மக்களுக்கு எதிரான போரை வெற்றி கொண்டதைக் கொண்டாடும் 'வீரர்கள் மாதம்' நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. படையினரின் நலன்புரி நட வடிக்கைகளுக்காக வருடாந்தம் நிதி சேகரிக்கும் முதலாவது கொடியைப் படையினர் சேவைகள் அதிகார சபையின் தலைவர் பத்மா வெத்தேவ ஜனாதிபதிக்கு அணிவித்தார். அருகில் பாதுகாப்புச் செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷ காணப்படுகின்றார்.

ரூ.39 மில்லியன்

துமிந்த சில்வாவின் சிகிச்சைக்கு

கொழும்பு,மே2

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலை தொடர்பில் சந்தேகிக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, தற்போது சிங்கப்பூரின் மௌன்ட் எலிசபெத் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

இலங்கையில் அவரின் சிகிச்சைக்காக மட்டும் 18 மில்லி யன் ரூபாய்கள் செலவிடப் பட்டுள்ளன. அதேநேரம் சிங்கப்பூரின் மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையில் இதுவரை 39 மில்லியன் ரூபாக்கள் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

துமிந்த சில்வா, 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சிங்கப்பூரின் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

நில்வள கங்கையில் முதலைகள் இறப்பு

கொழும்பு,மே2

நில்வள கங்கையில் கடந்த சில நாள்களாக மரணித்த முதலைகள் மிதப்பதை அவதானித்து வருவதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 26 ஆம் திகதி முதல் இதுவரையில் இவ்வாறு மரணித்த 5 முதலைகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

அண்மையில் நில்வள கங்கையில் முகம் கழுவிக் கொண்டிருக்கும் போது பாடசாலை மாணவி ஒருவரை முதலை தாக்கி மரணமடைந்துள்ளார்.

வனஜீவராசிகள் திணைக்களத்தினால் நில்வள கங்கையிலுள்ள முதலைகளைப் பிடித்து வேறு இடங்களுக்கு விடுவிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தற்போது அந்தப்பணி நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

அரசியல்வாதிகளும் இனிமேல் வரி செலுத்த வேண்டும்

நிதியமைச்சின் செயலாளர் தகவல்

கொழும்பு,மே2

ஐம்பதாயிரம் ரூபாவுக்கு அதிகமாக மாத வருமானத்தைப் பெறும் அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் இனிவரும் காலங்களில் வருமான வரியை செலுத்தவேண்டும். இதற்கான சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படவுள்ளது என்று நிதியமைச்சின் செயலாளர் பி.பி. ஜெயசுந்தர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

50 ஆயிரம் ரூபாவை வருமானமாகப் பெறும் அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் 4 வீதத்தை வருமான வரியாக செலுத்த வேண்டும்

50 ஆயிரம் ரூபாவை வருமானமாகப் பெறும் அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் 4 வீதத்தை வருமான வரியாகச் செலுத்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை காலமும் இந்த நடைமுறை இருக்கவில்லை. எனினும் நாட்டின் நலன்கருதி இந்த நடைமுறையைப் பின்பற்ற அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் அர்ப்பணிப்பை மேற்கொள்ளவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

நூதன சாலைக்கும் சோதனைச் சாவடி

கொழும்பு,மே2

கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள தேசிய நூதன சாலைக்குப் புதிய பொலிஸ் சோதனைச்சாவடி ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலு வலகம் தெரிவித்துள்ளது.

கடந்த 28 ஆம் திகதி இந்தச் சோதனைச்சாவடி திறக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் கீழ் மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் கண்காணிப்பில் 15 பொலிஸ் அதிகாரிகளைக் கொண்டு இந்தச் சோதனைச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்புடையதாக இந்தச் சோதனைச்சாவடி இயங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

இஸ்லாமிய இலக்கிய மாநாடு கொழும்பில்

கொழும்பு,மே2

உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டை அடுத்த மூன்று மாத காலத்திற்குள் கொழும்பில் நடத்துவதற்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் 13 பேர் அங்கம் வகிக்கின்றனர். நீதியமைச்சில் இடம்பெற்ற இந்தக்கூட்டத்தில் முஸ்லிம் கல்விமான்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கடந்த வருடம் மலேசியாவில் நடைபெற்ற மாநாட்டைவிட இந்தமாநாட்டை பிரமாண்டமாக கொழும்பில் நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (ச)

பொலிஸ் பொறுப்பதிகாரி பணி நீக்கம்

கொழும்பு,மே2

திஸ்ஸமஹாராமபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பணிநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸ் சேவையில் இருந்து கொண்டு கடந்த 2006 ஆம் ஆண்டு தனியார் நிறுவனம் ஒன்றில் பணி புரிந்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹினிதும பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பிரதி பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட மூன்று பொலிஸ் அதிகாரிகளும் பணிநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

பொலிஸ் நிலையத்தில் இருந்த நாள் பதிவேடு காணாமல் போன சம்பவம் தொடர்பிலேயே இவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

நன்மை அளிக்கும் ஆட்சியை எதிர்காலத்தில் அமைப்பேன்

ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,மே2

இன, மத பேதங்கள் இல்லாமல் நாட்டிலுள்ள அனைவருக்கும் நன்மை அளிக்கும் விதத்திலான ஆட்சியை எதிர்காலத்தில் நான் அமைப்பேன் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நீர்கொழும்பு, கட்டுவ பிரான்ஸிஸ் ஸாலிஸ் தேவாலய நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரின் பின்னர் எமது நாடு அபிவிருத்தியை அடையக்கூடிய வாய்ப்பு இருந்தது. அதனை நாங்கள் இழந்திருக்கின்றோம். நாட்டின் பொருளாதார அபிவிருத்தி 8.3 சதவீதமாகக் காணப்படுகின்றது.

நாடு பாதாளத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. ஆட்சியில் உள்ளவர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் நன்மை பயக்கும் விதத்தில் ஆட்சி நடத்தப்படுகிறது.

நிலத்துடனும் கடலுடனும் போட்டியிட்டு வாழ்க்கை நடத்தக்கூடிய ஏழை மக்களுக்குப் பொருளாதார அபிவிருத்திகளின் நன்மை போய்ச் சேர வேண்டும். நாட்டிலுள்ள 2 கோடி மக்களுக்கும் நன்மை தரக்கூடிய விதத்தில் ஆட்சி நடத்தப்பட வேண்டும்.

எமது நாட்டின் தேசிய வருமானத்தில் 50 சத வீதத்தை 20 சதவீதமாக வசதி படைத்தவர்கள் அனுபவிக்கின்றனர். 4 சத வீதத்தையே ஏழை மக்கள் அனுபவிக்கின்றனர் என்று ஆய் வொன்றிலிருந்து தெரிய வந்துள்ளது.- என்றார். (ச)

ஹிருணிக்காவுக்கு பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு,மே2

கொலன்னாவ துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்ட ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு 24 மணி நேரப் பொலிஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கறுவாத் தோட்டம் பகுதியில் அமைந்துள்ள ஹிருணிகாவின் வீட்டுக்கு இந்தப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது என ஹிருணிகா பிரேமச்சந்திர வினால் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே அவருக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்க நட வடிக்கை எடுக் கப்பட்டுள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

தமது உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என ஹிருணிகா பிரேமச்சந்திர முன்வைத்துள்ள முறைப்பாடு தொடர்பில் பொலிஸ் மா அதிபரின் உத்தரவிற்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழு இது தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
1984
*
09
*
09

அரக்கனின் கையில்
2010
*
05
*
02

செல்வன் மகாலிங்கம் சதீஷன்

பணிப்பாளர்

(பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப்)



ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஏங்கும் கண் கொண்டு எதிர்பார்கின்றோம் - உன்னை
ஆண்டவனை நம்பி இருந்தோர் அன்று - உன்
ஆளுந்தத்தை காண முடியவில்லை இன்றும் எம்மால்
இதயம் நெகிழ்ந்து இன்றும் தொடர்கின்றோம் - உன் முயற்சி

என்றும் உன் நினைவுடன் உறவுகள்

பிள்ளையார் கோயில் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

மீனவர்களுக்கு மானியம் வழங்கல்

யாழ்ப்பாணம், மே2

யாழ்.குடாநாட்டில் மீனவர்களுக்கான ஏப்ரல் மாதத்துக்குரிய மானிய முத்திரை இந்த வாரத்திலும் தொடர்ந்து விநியோகிக்கப்படும் என்று யாழ்.மாவட்ட கடல் தொழில் நீரியல் வள திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெரும்பாலும் இந்த முத்திரைகளை விரைவாக இந்த வாரத்துக்குள் விநியோகித்து முடித்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் ஒவ்வொரு பிரதேச ரீதியாகவும் மேற்படி முத்திரைகள் விநியோகிக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

சகல பிரதேசங்களுக்குமான மீனவ மானிய முத்திரைகள் விநியோகித்து முடிக்கப்பட்ட பின்னரே மே மாதத்துக்கான மானிய முத்திரைகள் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

(வ-17)

மரண அறிவித்தல்

மரியாம்பிள்ளை அன்னம்மா

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், கிளாலியில் வசித்து வரும் 210/2, முரசு மோட்டையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட செல்லம்மா என்று அழைக்கப்படும் மரியாம் பிள்ளை அன்னம்மா (2012.04.30) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் - மரியமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மத்தியாஸ் - ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், எட்வேட் அன்ரன் (பரந்தன் இரசாயன தொழிற்சாலை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஓய்வு பெற்ற ஊழியர்), மேரி கெலன் அல்போன்ஸ் ஜெயரட்ணம் (ஐ.நா. சிறுவர் நிதியம், யாழ்ப்பாணம்), அல்வீனா ஜெயசீலி (கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்க பணியாளர்) ஆகியோரின் தாயும், ஞானம்மா (பிரான்ஸ்) காலஞ் சென்றவர்களான இராசேந்திரம், அமிர்தநாதர் (பொன்னையா), றோசம்மா, செபமாலையம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மேரி அஞ்சலீனா மற்றும் கிறிஸ்ரீனா (மகளிர் அபிவிருத்தி போதனாசிரியர், பிரதேச செயலகம், சாவகச்சேரி), கருணாநிதி ஆகியோரின் அன்பு மாமியும் றெஜீனா சாந்தினி (லண்டன்), அனிற்றாராஜினி, அமலதாஸ் (டினேஸ்), றொபினா, தயாளினி (அவுஸ்திரேலியா), ரமேஸ்விமலதாஸ், மரீனாஷாமினி, அன்சியாஜொய்சி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (2012.05.02) புதன் கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு முரசுமோட்டை சதாசகாய மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு 1 ஆம் கட்டை, பரந்தன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

210/2, முரசுமோட்டை,
பரந்தன்.

தகவல்:
குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

செல்வன் வடிவேலு இலங்கேஸ்வரன் (ரமேஸ்)

திருநாவலூர், புலோலி மேற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் வடிவேலு இலங்கேஸ்வரன் (ரமேஸ்) கடந்த (30.04.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேலு மற்றும் நாகம்மா தம்பதியரின் இளைய மகனும், கமலேஸ்வரன் (லண்டன்), நகுலேஸ்வரன் (லண்டன்), விக்னேஸ்வரன் (சுவிஸ்), லோகன் (லண்டன்), ரஞ்சிதமலர் ஆகியோரின் பாசமிகு தம்பியும், இரஞ்சிதமலர் (லண்டன்), துஷ்யந்தினி (லண்டன்), மதிவதனி (சுவிஸ்), உதயகீதா (லண்டன்), செல்வராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2012) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மாயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



திருநாவலூர்,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

தகவல்:
அம்மா,
சகோதரர்கள்,
மைத்துனர்

(சி/9582)(45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நாள்

தருவது வித்தியா

உங்களுக்கு எப்படி?

மேஷம்: நீங்கள் எதிர்பார்க்கும் உதவிகள் சற்று தாமதப்பட்டபோதும் கிடைக்கக் கூடும். அரசால் சில நன்மைகள் கிடைக்கப் பெறுவீர்கள். நெருங்கிய நபர்களைத் தொடர்பு கொள்ள முடியாமல் வேலைப்பளு அதிகமாக இருக்கும். வாகன வகையில் சிறு செலவுகள் ஏற்படும்.

இடபம்: அவசரப்பட்ட செயல்களால் அல்லல் பட நேரிடலாம் கவனம். வீட்டிலும் வெளியிலும் வார்த்தைகளில் மென்மை கலந்து இருக்கட்டும். தொழிலில் அவசரப்பட்ட முடிவுகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இல்லற துணையில் உடல்நலத்தில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

மிதுனம்: சில பணிகளை மனதில் கொண்டு விரைவாகச் செயற்பட திட்டமிடுவீர்கள். ஓரளவுக்கு உங்களின் திட்டம் நிறைவேறும். பணி முடிந்தபோதும், பணவரவு சற்று தாமதப்படும். சிலருக்கு, ஒரு சில விடயங்களைப் புரியவைக்க கடுமையான பிரயத்தனம் கொள்வீர்கள். உறவு வகையில் நன்மைகள் கிடைக்கும்.

கடகம்: ஒவ்வொரு பணிகளிலும் அவசரப்பட்டு, அவசரப்பட்டுச் செயற்படுவீர்கள். ஆனால், அதற்கேற்ற பலன் உங்களுக்கு தாமதமாகவே கிடைக்கும். சில காரணங்களுக்காக நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளும் அமைதி வெற்றி பெறும். குழந்தைகள் வழிச்செலவுகள் குறையும். வெளியூர் பயணங்கள் விரும்பும் விதத்தில் அமையும்

சிங்கம்: உங்களின் மனநிலையில் ஏற்படும் மாற்றம் சில பணிகளை விரைவாகச் செய்து முடிக்க உதவும். குடும்பத்தில், காரணமற்ற வகையில் கோபத்தை வெளிப்படுத்துவீர்கள். கோபத்தை கொஞ்சம் குறைத்துக் கொள்ளுதல், எல்லா வகைக்கும் நன்மையாகத் தெரியும்.

கன்னி: புகழ், செல்வாக்கு அதிகரிக்கும். உறவுகளால் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. அயலாரின் தொந்தரவு குறையும். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரின் நம்பிக்கையைப் பெறுவர்.

நாளை

சித்திரை 21 வியாழக்கிழமை 03.05.2012
திதி: துவாதசி பி.ப 04.45 வரை
நட்சத்திரம்: உத்தராடம் மரண மு.ப 11.01 வரை
சுபநேரம்: 07.26- 08.565 வரை
ராகு காலம்: 01.26- 02.56 வரை

துலாம்: காலைப்பொழுதில் சற்று உடல் நிலையில் சோர்வு காணப்படும். புதிய முயற்சிகள் ஓரளவுக்கு பயன்தரும். தொழில் ரீதியான தடைகள் அகலும். வருமானம் கூடும். இல்லறத்துணையின் செயற்பாடுகள் அதிகப்படியான கோபத்தை உண்டாக்கும்.

விருச்சிகம்: புதிய சிந்தனைகளால் மனதில் உற்சாகம் கூடும். தந்தையின் உடல் நலன் தொடர்பான விடயங்களில், கவனம் தேவை. தொழிலில், எதிர்பாராத வகையில் ஆர்டர் கிடைக்கப் பெறும். மாலைக்கு மேல், இனிய சந்திப்பு ஒன்றால் மன மகிழ்ச்சி அதிகரிக்கும்.

தனுசு: எண்ணங்கள், வியூகங்கள் கைகூடும். சத்தமில்லாமல், ஓரிரு காரியத்தை முடித்து ஆதாயம் தேடிக் கொள்வீர்கள். பணம் சம்பந்தப்பட்ட வகையில் அலைச்சல் இருக்கும். குடும்பத்தில் கலகலப்பு, மகிழ்ச்சி காணப்படும். வீண் வம்பு விவகாரங்களை, அமைதியான வழியில் தீர்ப்பீர்கள்.

மகரம்: உங்களின் நடவடிக்கைகள், ஒவ்வொன்றும் சற்று குழப்பம் கொண்டதாகவே இருக்கும். பணநிலையில் கூட, சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரலாம். தொழில் தொடர்பாக, வெளியூர் பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

கும்பம்: நீங்கள் எதிர்கால நலத்துக்காகப் போட்ட திட்டம் ஒன்று பின்னடைவைச் சந்திக்க நேரிடலாம். குடும்ப விவகாரங்களில், தெளிவான முடிவுக்கு வருவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில், சில விடயங்களைச் செய்துகொள்வீர்கள்.

மீனம்: செய்ய நினைத்த பணி ஒன்று, செய்து முடித்த பணி ஒன்று என்று இருக்கும். என்ன தான் சாமர்த்தியமாகப் பேசிய போதும், கடந்தகால ஏமாற்றங்கள் மனதில் கவலை கொள்ளச் செய்யும். பண நிலையில், எதிர்பாராத வரவுகள் மனமகிழ்ச்சி தரும். மனைவி மற்றும் குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

சுடோக்கு

எண் விளையாட்டு

7			2			3		
2	9	8		3	4		6	7
								4
			6				7	3
6		4	3		1	2		5
8	5				7			
9								
4	8		7	5		6	1	9
		6			2			8

சுடோக்கின் நேற்றைய விடை

5	1	6	9	8	3	7	2	4
7	4	3	6	5	2	8	9	1
8	9	2	1	7	4	3	6	5
4	2	5	7	3	9	1	8	6
6	7	1	5	4	8	2	3	9
3	8	9	2	6	1	5	4	7
2	6	8	4	1	5	9	7	3
1	3	7	8	9	6	4	5	2
9	5	4	3	2	7	6	1	8

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்



மலர்வு
28 * 04 * 1948

உதிர்வு
03 * 04 * 2012

அமரர்

பாக்கியநாதன் யோகநாதன்

(சமாதான நீதிவான், இளைப்பாறிய தபாலதிபர்)

இரணைஇலுப்பைக்குளத்தைப் பிறப்பிடமாகவும், இராஜதுரை வீதி, வைரவபுளியங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியநாதன் யோகநாதன் அவர்கள் 03.04.2012 அன்று யாழ்ப்பாணத்தில் சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாக்கியநாதன் (உடையார்) - காந்திமதி (இரணைஇலுப்பைக்குளம்) தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - விசாலாட்சி (புளியங்கூடல்) தம்பதியரின் மருமகனும் கமலாம்பிகையின் கணவருமான அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடிவந்து உதவிகளை அளித்த உள்ளங்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் வார்த்தை கூறியோருக்கும், உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து அனுதாபங்களை பகிர்ந்து கொண்டோருக்கும், மலர் வளையங்களை வைத்து கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும், அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்திய தமிழ் அரசுக்கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் (29.04.2012) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 03.05.2012 வியாழக்கிழமை அன்னாரின் வவுனியா இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு அழைத்துநிற்கின்றோம்.

இல. 9, இராஜதுரை வீதி,
வைரவபுளியங்குளம், வவுனியா

முன்றாம் ஆண்டு நினைவலைகள்



ஐ. லோகராணி ஐ. செல்வராணி ஐ. யோகராணி

திதி - 02.05.2012 ஏகாதசி

அம்மாக்களே ஆண்டுகள் முன்றானதே
ஆறவில்லை எம் இதயக் குமுறல்கள்
ஆறாய் ஓடுதே கண்ணீர்.....
ஆற்றமுடியுமா எம் அழுகையை....
ஆனந்தமாய் கூடி அன்பாய் இருந்தோமே
கொடியவன் குறிவைத்தான் எம் கூட்டை
ஓடினோம் ஓடினோம் புலம் பெயர்ந்து
பதுங்கினோம் பதுங்கினோம் பதுங்கு குழி வெட்டி
பாய்போற்ற வாழ்ந்த எம்மை
பாரில் இனைந்து வாழக்கூடாது
என்றெண்ணி....
பிரித்தானே..... குடித்தானே ....
உம் உயிரை கொடியவன்
ஆற்ற முடியவில்லை அழமுடியவில்லை
ஆறடிகளில் சிறங்கு அதனுள்
உமைப்புதைத்தோம்
ஆற்றமுடியாத காலத்தில் ஐயாவும் அக்காவும்
ஆஸ்பத்திரியில் அரிவின்றியிருக்க
ஆழ்கடலில் கப்பல் வெடி மழையில்
அடி ஒய் ஏற்றி அனுப்பினோம்.
அடைந்த இடம் தெரியாது
வெடியோசை இடியாய்வர
விரட்டப்பட்டோம் 17....05 இல்
கடந்தோம் எம் மண்ணை விட்டு
நந்திக் கடலோரே வந்தோம்
அகதிமுகாம்
வெந்தோம் வேதனையால்
வந்தோம் மீள் குடியேற்றம்
மீளமுடியவில்லையே
சென்ற இடமெல்லாம் சொல்லுதம்மா
உங்கள் கதை.....
கேட்குதம்மா உங்கள் குரலொலிகள்
ஆற்ற முடியவில்லை
ஆற்ற முடியவில்லை
உம்பிரிவால் வாடும்

இல.497/7, கல்மடு நகர்,
இராமநாதபுரம், கிளிநொச்சி.

குடும்பத்தினர்,
வி.ஐயாத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணக வாழ்வில் 6ம் ஆண்டு நினைவு

இவ்வுலகில்
28
.
11
.
1969

இறைவனிடம்
02
.
05
.
2006

பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஷ்)

சந்தைப்படுத்தல் முகாமையாளர் - உதயன் பத்திரிகை நிறுவனம்.

"ஆண்டவருக்குள் இறப்பவர்கள் பேறுபெற்றோர்
ஏனெனில் அவர்கள் செய்த நன்மைகள்
அவர்களைப் பின்தொடரும்." -பி.வெ 14 : 13

ஆறாண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம் மனங்களில் என்றும் பசுமையாகவே இருக்கும்.
நாம் வாழுங்காலம்வரை அந்நினைவுகள் எம்மைவிட்டகலாது.
உடல் மரிப்பதுண்டு. உயிர் மரிப்பதில்லை.
அப்படித்தான் நீங்களும் எத்தனை
காலம் கடந்தாலும் உங்களோடு நாம் வாழ்ந்த நாட்கள்
எம் உயிரோடு என்றும் உறவாடிக் கொண்டிருக்கும்.

எமது அன்பு சுரேஷின் ஆன்ம இளைப்பாற்றுக்காக
இன்று 02ம் திகதி காலை 6.45 மணிக்கு
மட்டக்குளிய பாம் வீதியில் அமைந்துள்ள
"கார்மல் மாதா" கன்னியர்மட சிற்றாலயத்தில்
திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுகிறது.

மனைவி : சுவேன் (Suven)
பிள்ளைகள் : அல்றின், சேஷா (Alrin & Sesha)

வாகனச் சுத்திகரிப்பு நிலைய உரிமையாளர்களுக்கு கூட்டம்

தென்மராட்சி, மே 2

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள வாகனச் சுத்திகரிப்பு நிலையங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் நான்காம் திகதி வெள்ளிக் கிழமை பி.ப 2 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான வியாபாரப் பெயர்ப் பதிவு, சூழல் பாதுகாப்பு உரிமம், உள்ளூராட்சி சபையின் வியாபார உரிமம் போன்றவை பெறுவது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் பிரதேசத்தில் உள்ள அனைத்து வாகன சுத்தீகரிப்பு நிலையங்களின் உரிமையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

(10-9)

Dr. Pimple Care

முகப்பருக்கள் சம்பந்தமான அனைத்து பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வு...

மருத்துவ ஆலோசனை

எதிர்வரும் 3ம், 4ம் திகதிகளில் யாழ் கிளையிலும்
6ம், 7ம் திகதிகளில் வவுனியா கிளையிலும் நடைபெற உள்ளது.

முற்பதிவுகளுக்கு : 021 4923416

Jaffna - No. 26, Browns Road. Tel: 021-4923416, 021-2220288
Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011-4874854, 011-4376078
Colombo - No. 190, George R.De Silva Mawatha Colombo 13. 011-4343270
Vavuniya - No. 152/5, Jaffna Road, Vavuniya. 024-4925807, 024-4924940

வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

வெளிவாரிப் பரீட்சைகள் 2010

1. இசைமாணி / நடனமாணி முதலாம் வருடம்
2. இசைமாணி / நடனமாணி இரண்டாம் வருடம்
3. இசைமாணி / நடனமாணி மூன்றாம், நான்காம் வருடம்

மேற்படி இசைமாணி மற்றும் நடனமாணி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இந்தப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100/= இனைச் செலுத்திய மைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/= க்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையை சுய முகவரியிடப்பட்ட ரூபா 40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், **உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 15.06.2012 (வெள்ளிக்கிழமை) வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பு: கடந்த வருடம் நடைபெற்ற பரீட்சைகளுக்கான பெறுபேறுகள் வெளியாகி உள்ளன.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

பதிவாளர்
27.04.2012

மரண அறிவித்தல்

சின்னத்தம்பி கந்தசாமி

(இளைப்பாறிய கிராம சேவை உத்தியோகத்தர்)

கலாசாலை வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், முருகமூர்த்தி வீதி, சங்கானை கிழக்கு, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி (இளைப்பாறிய கிராமசேவை உத்தியோகத்தர்) 30.04.2012 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராசம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான இலகுப்பிள்ளை - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், வள்ளியம்மையின் (இளைப்பாறிய ஆசிரியர் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்) அன்புக் கணவரும், சத்தியபாமா (கணக்குப்பதிவாளர், வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச. கொத்தணி, மானிப்பாய்), சத்தியசீலன் (சுவிஸ்), சத்தியலிங்கம் (தொழில் நுட்ப உத்தியோகத்தர் - வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா), சத்தியகௌரி (சுவிஸ்), சத்தியவதனி (சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிறீதரன் (முன்னாள் ஆசிரியர், ஸ்ரீ கணேச வித்தியாலயம், சித்தங்கேணி) மற்றும் யாமினி (சுவிஸ்), சிந்துஜா (வவுனியா), அகிலன் (சுவிஸ்), பிரபாகரன் (உதவிப்பதிவாளர் வெளிவாரிப்பிரிவு யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் இரத்தினம் (பிரான்ஸ்), காலஞ் சென்றவர்களான பாக்கியம் நடராசா, சிவஞானம் மற்றும் வீரபாகு, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ரங்கன், ரங்கா, கீர்த்தனி, கேதாரன், அபிஷன், ஆருஷன், அஸ்மிதர் ஆகியோரின் அன்புப்பேரனும், வாகினியின் (இ.போ.ச. கோண்டாவில்) அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2012) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி வீதி, சங்கானை கிழக்கு, சங்கானை.

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பிரம்மபுத்திரா ஆற்றில் படகு கவிழ்ந்தது

103 பேர் நீரில் மூழ்கிச் சாவு

அஸாம் மாநிலத்தின் பிரம்மபுத்திரா ஆற்றில் சுமார் 300 பேருடன் பயணம் செய்துகொண்டிருந்த படகொன்று கவிழ்ந்ததில் நதியில் மூழ்கி 103 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் உடல்கள் இதுவரை மீட்கப்பட்டன. மற்றவர்களைத் தேடும் பணியில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. எனினும் 200 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அசாம் மாநிலம் துப்ரி மாவட்டத்தில் பிரம்மபுத்ரா நதி ஓடுகிறது. துப்ரி படகு துறைமுகத்தில் இருந்து நதியின் எதிர்ப்புறம் உள்ள மெடார் டாரி என்ற இடத்துக்கு இரண்டு அடுக்கு மோட்டார் படகு ஒன்று நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் புறப்பட்டது. அதில் 300 பேர் இருந்தனர்.

நதியின் மத்திய பகுதியில் படகு சென்றபோது திடீரென்று புயல்காற்று வீசியது. இதனால் நிலை தடுமாறிய படகு திடீரென்று பிரம்மபுத்ரா ஆற்றுக்குள் கவிழ்ந்தது. இதனால் படகில் இருந்த ஏராளமான பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 300 பேரும் ஆற்றில் மூழ்கினார்கள். இது பற்றிய தகவல் துப்ரி மாவட்ட ஆட்சியாளர் குமுத் சந்த்ரா வுக்கு தெரிவிக்கப்பட்டது. உடனே அவர் இராணுவம் மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மைய அமைப்பைச் சேர்ந்த மீட்புப் படையினருக்குத் தகவல் கொடுத்து வரவழைத்தார்.

அவர்கள் வந்து நதியில் மூழ்கி உயிரிழந்த 103 பேரின் உடல்களை மீட்டனர். மேலும் 25பேர் நீந்திக்கரை சேர்ந்ததாகத் தெரிகிறது. படகில் இருந்த ஏனைய 172 பேரின் நிலைமை என்ன என்று தெரியவில்லை. பிரம்மபுத்ரா ஆற்றில் மூழ்கியவர்களைத் தேடும் பணி நேற்று முன்தினம் இரவு முழுவதும் தொடர்ந்து நடைபெற்றது. மோசமான வானிலை இருந்தும் நதியின் ஆழப்பகுதிகளில் சென்று இராணுவ நீச்சல் படையைச் சேர்ந்த மீட்புப்படையினர் தேடுதலில் ஈடுபட்டனர்.

மீட்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் தான். அவர்களின் உடல்கள் பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுள்ளன. மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து இந்திய பிரதமர் மன்மோகன் சிங்,

''இந்தச்சம்பவம் எனக்கு மிகவும் அதிர்ச்சியளிக்கிறது, என்னுடைய மிகுந்த இரக்கங்களையும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். பிரம்மபுத்திரா ஆற்றில் இதுபோன்ற விபத்து நடந்திருப்பது இதுவே முதல் முறையாகும், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளும், நிவாரணங்களும் முழுமையாக வந்து சேரும்'' என்று உறுதியளித்துள்ளார். (வ)

திருமணநாளைக் கொண்டாடிய உலகத் தம்பதிகள்

பிரித்தானிய இளவரசர் வில்லியம்,கேத் மிடில்டன் தம்பதி தங்களது முதல் திருமண நாளைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் , மறைந்த இளவரசி டயானா தம்பதியின் முதல் மகன் வில்லியம். இவருக்கும் இவரது காதலி கேத் மிடில்டனுக்கும் கடந்த ஆண்டு ஏப்ரல் 29ஆம் திகதி லண்டனின் பழமையான வெஸ்ட்மினிஸ்டர் அபே தேவாலயத்தில் திருமணம் நடந்தது.

30 ஆண்டுக்குப் பிறகு நடந்த அரசகுடும்ப விழாவை காண லண்டன் நகர தெருக்களில் 10 லட்சம் பேர் குவிந்தனர். உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் தொலைக் காட்சியில் நேரடி ஒளிபரப்பு மூலம் பார்த்துப் பரவசமடைந்தனர். வில்லியம், கேத் தம்பதி நேற்று முன்தினம் தங்கள் முதல் திருமண நாளைச் சிறப்பாகக் கொண்டாடினர். இதன் மூலம் கேத் அரச குடும்பத்தின் அதிகாரப்பூர்வ முக்கிய உறுப்பினராகி உள்ளார்.

பிரித்தானிய ராணி இரண்டாம் எலிசபெத், மன்னர் பிலிப், அவர்களது மகன் சார்ள்ஸ், அவரது 2ஆவது மனைவி கமீலா பார்க்கர் உட்பட அரச குடும்பத்தினர் அனைவரும் இந்தத் தம்பதிக்கு வாழ்த்து தெரிவித்தனர். இதுதவிர, உலகம் முழுவதிலுமிருந்து பலர் வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தனர். வில்லியம்,கேத் தம்பதி தங்களது திருமண நாளைமுன்னிட்டுப்,பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கு நேரில் சென்று பல்வேறு உதவிகளை வழங்கினர். கேத் கர்ப்பமாக இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

ஈர விழிகளுடன் ஐந்தாண்டு நினைவலைகளிலே...

மலர்வு 06 * 04 * 1944
உதிர்வு 28 * 04 * 2007

அமரர் செல்லையா சின்னத்துரை (கிளாக்கர்)

திதி : பூர்வபக்க ஏகாதசி

எத்தனை ஆயிரம் உறவுகள் – இருந்தாலென்ன
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே – எம் அருகில்
ஒளிமயமான எம் குடும்பத்தில்
ஒளி விளக்கு அணைந்ததேனோ ?
காலங்கள் கடந்து சென்றாலும் – மாறாது
உங்கள் நினைவலைகள் எம் மனதில்.....

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

காணி விற்பனைக்கு

மீசாலை வடக்கில் 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 821 2084

திருமண சேவை

*83இல் பிறந்த 4 இல் செவ்வாய், 71 பாவம் உடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகளிற்கு படித்த உள்நாட்டு மணமகன் தேவை.
*89இல் பிறந்த RC வேதமுடைய அவுஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற மணமகளிற்கு நன்கு படித்த RC வேதத்தில் மணமகன் தேவை.
*87இல் பிறந்த 8இல் செவ்வாய் 26 ¼ பாவம் உடைய அவுஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற மணமகள் வரவுள்ளார். தகுந்த மணமகன் தேவை
*74இல் பிறந்த 8¼ பாவமுடைய சைவ போசன முள்ள மணமகன் பிரஜாவுரிமை பெற்று லண்டனால் வந்துள்ளார். படித்த சைவ போசனமுள்ள மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை
இல.320, கோயில் வீதி, நல்லூர்.
T.P: 0776070862

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 * 12 * 1939
மறைவு 28 * 04 * 2007

திதி : ஏகாதசி (02.05.2012)

அமரர்
தம்பு குணரத்தினம்

என் சிறு தவறுக்கெல்லாம் - நீங்கள்
கோபங்கொள்ளும் போது சலித்திருக்கிறேன்
"என்ன இந்த அப்பா" என்று ஏன் அந்த கோபம்;
எல்லாம் எனக்காக எனும் போது கண்கள் குளமாகியது
நான் மட்டுமே அறிவேன், நான் துன்பப்பட்ட
காலங்களில் துணையாக இருந்து விட்டு இன்பம் வரும்
வேளைகளில் தூரமாகிப் போனீர்கள்
மறுபிறப்பெடுத்து என் மனாகப் பிறக்க வேண்டாம்-என்
அடுத்த பிறவியிலும் என் அப்பாவாக நீங்கள் வேண்டும்

22/1, கனகரத்தினம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்.

(17634) (6.7.10)

முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
தியாகராஜா கருணீசன் (கருணா)

பிறப்பு 24 * 07 * 1953
இறப்பு 13 * 05 * 2011

திதி - ஏகாதசி 02.05.2012

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டாகியும்
உங்கள் நினைவோடு என்றும் வாழ்கிறோம்.

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்.

(17525) (6.7.10)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் நாகேஸ்வரி நடராசா

மலர்வு - 02.04.1933 உதிர்வு - 02.05.2010

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும்
எங்கள் கண்களில் தினமும்
வந்து செல்கிறீர்கள் இன்னும்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றுமே
மறையாது அன்னையே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்

குணாநி, அனுதன், கணேஸ், தினுஸன் பிரசாந்த், பிரவீனன், பிரியங்கா, பிரியங்கள், பேரப்பிள்ளைகள்.

(17608) (6.7.10)

நீங்கா நினைவலைகள்

4ஆம் ஆண்டு

மலர்வு 04.06.1944
உதிர்வு 16.04.2008



அமரர்
கனகரத்தினம் செல்வராஜா

திதி: ஏகாதசி

15ஆம் ஆண்டு

மலர்வு 03.07.1954
உதிர்வு 01.01.1997

அமரர்
செல்வராஜா பேபி சரோஜா

திதி: அமாவாசை

தந்தையும் தாயுமாக அன்பாக எமை அணைத்து எந்த இடர் வந்தபோதும் எமை ஆளாக்கி கடமையே கருத்தென கண்ணியமாய் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து நின்ற அன்புத் தெய்வங்களை நினைவு கூருகின்றோம்.

மஞ்சத்தடி
இணுவில் கிழக்கு.

சி .சஜிந்திரன்
(பேரமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதல்3 மாவட்டங்களிலும் ஓரள வான மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை காணப்படும். முல்லைத் தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் வானம் தெளிவாக இருக்கும்.

படகுகளில் பயணிப்போருக்கு உயிர் காப்பு அங்கிகள்

படகுப் பயணம் மற்றும் மீனவர் படகுகளில் பயணம் செல்வோருக்கு உயிர்ப் பாதுகாப்பு அங்கிகளை வழங்க வேண்டுமெனப் படகுகளின் உரிமையாளர்களுக்கு இடர் முகாமைத்துவ அமைச் சினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

பயணத்தில் ஏற்படும் ஆபத்துக்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கே இந்த ஏற்பாடு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

1200 இற்கும் மேற்பட்ட இளைஞர்களும் பாடசாலை மாணவர்களும் வருடாந்தம் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர் என்று அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் பல முறை அறி வுறுத்தல்கள் வழங்கப்பட்டும் அநேகர் அதனைக் கருத்திற் கொள்வதில்லை என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். இந்த விடயமாகக் கடற்றொழில் அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டு உள்ளது.

இதனையடுத்து அங்கி அணியாமல் செல்லும் மீனவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படு என்று தெரிவிக்கப்படுகிறது.

உல்லாசப் பிரயாண ஹோட்டல்களுக்காக வேலை செய்யும் தனியார் படகு உரிமையாளர் களும் பாதுகாப்பு அங்கிகளை வழங்க வேண்டு மென்றும் உத்தரவிடப்பட்டுள்ளனர்.

(ந)

தமிழ் விவாதச் சுற்றுப் போட்டி

தமிழ் மாணவர்களின் பேச்சுத்திறனை யும் சிந்தனையாற்றலையும் வளர்த்தெடுக் கும் முகமாகக் கொழும்பு றோயல் கல்லூரி பழைய தமிழ் விவாதிகள் மன்றம் நாடளா விய ரீதியிலான விவாதச் சுற்றுப்போட் டிகளை நடத்தவுள்ளது.

இந்த மாதம் 26ஆம்,27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்த விவாதச் சுற்றுப் போட்டிகள், சவாலான தலைப்புக்கள், விவா தம் பற்றிய வழிகாட்டுதல்களை வழங்க அனுபவம் வாய்ந்த பழைய விவாதிகள் போட்டிகளுக்குத் தரமான நடுவர்கள், பெறுமதியான பரிசில்கள் எனச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த விவாதச் சுற்றுப்போட்டியில் அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு கேட்கப்பட் டுள்ளது.

இதில் மாணவர்களின் பங்களிப்பான வளர்ந்து வரும் தலைமுறையினருக்கு விவாதக் கலையின் மீது ஆர்வத்தைத் துண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ந)

இலங்கை விவகாரம் குறித்து அமெரிக்காவில் கவனயீர்ப்பு

சர்வதேச பொது மன் னிப் புச் சபையின் ஒருங்கிணைப் பில், அமெரிக்க உயர்கல்வி மாணவ சமூகத்தினால், நியூ யோர்க் நகரில் இலங்கை தொடர்பில் முன்னெடுக் கப்பட்ட கவன யீர்ப்பு நிகழ் வொன்று, பலரது கவனத் தையும் பெற்றுள்ளது.

"Get on Bus for human rights"எனும் தலைப்பில், இலங்கை தொடர்பில் ஒரு சர்வதேச சுயாதீன விசார ணையை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட இந்த கவனயீர்ப்பு நிகழ்வானது, உள்ளக அரங்க நிகழ்வா கவும், வெளித்திடல் கவ னயீர்ப்பு போராட்ட மாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உள்ளக அரங்க நிகழ் வில், மன்னிப்புச் சபையின் மேலாளர் சூசன் நோசெல் இலங்கையில் இருந்து தற்போது அமெரிக்காவில் தஞ்சமடைந் துள்ள பிரபல ஊடகவியலாளர் ஏ.எஸ். திசநாயகம் மற்றும் பர்மா, இந்தோனேசிய பிரதிநிதி கள் பலரும் உரையாற்றி யிருந்தனர்.

காணமல்போயும், கடத்தி வைக்கப்பட்டும் உள்ள வர்களது நிலையினை வலி யுறுத்தும் வகையில் இடம் பெற்றிருந்த நிகழ் வரங் கொன்று, பர்மியப் பெண் ணொருவரினால் மேற்கொள் ளப்பட்டமை அனை வரது கவனத்தையும் பெற் றது.

700இற்கும் மேற்பட்ட உயர்கல்வி மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்கெடுத் திருந்தனர்.

700இற்கும் மேற்பட்ட உயர்கல்வி மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்கெடுத்திருந்தனர்.

உள்ளரங்கினைத் தொடர்ந்து, இலங்கையின் தூதரகத்தை நோக்கி பேரணி யாகச் சென்ற மாணவர்கள், ''இலங்கையே உன்னைக் கண்காணித்துக் கொண் டிருக்கின்றோம்'' என்று தொடர் முழக்கமிட்டனர்.

இந்தநிகழ்வில் பங் கெடுத்திருந்த நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதிநிதி சான் சுந்தரம்,

''அமெரிக்கர்கள் இவ் வாறு இலங்கை தொடர்பில் அணிதிரள்வதும், குறிப்பாக மாணவ சமூகம் இலங்கை யின் விவகாரத்தை கையி லெடுத்திருப்பதும் நம்பிக் கையினைத் தருவதாக உள் ளது'' என்று தெரிவித்தார்.

இலங்கையின் முள் வேலிக்குள் அகப்பட்ட தமிழர்கள் மற்றும் வெள் ளைக் கொடியேந்திய தமிழர் களை இலங்கை இராணு வத்தினர் படுகொலை செய் திருந்தமை ஆகியனவற்றை வெளிக்காட்டும் வகையில் அமைந்திருந்த ஒவியங்கள் இவ்விரு நிகழ்வுக்களிலும் முக்கிய இடத்தைப் பிடிந் திருந்தன. (வ)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10
★
05
★
1936



மறைவு
14
★
04
★
2011

அமரர் **சிவகுரு கந்தசாமி**

திதி: ஏகாதசி

அன்பும் பண்பும் வாழ்வும் தந்த
எம் இனிய தெய்வமே!
எம்மை விட்டு நீங்கள் சென்றாலும்
எம் மனதைவிட்டு நீங்கள் விலகவில்லையே
இந்த மண்ணைவிட்டு உங்கள் உடல்
மட்டும் தான் சென்றதப்பா.....
உங்கள் ஆத்மா எங்களுடனேயே வாழ்கின்றது
உங்கள் சிரிப்பும் கதையும் இன்னும்
எங்கள் மனதிலே காண்கின்றோம்
அப்பா என்று தினம் அழைக்கும் - எங்கள்
பாசத்தின் குரல் கேட்கின்றதா?
நீங்கள் எம்மைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
நீங்களே எங்களுக்கு என்றும் உலகம்
எப்போதும் எம் இதயக்கோயிலில்
உங்களை இருத்தி நாம் பூசிப்போம்.

குருந்தடிப் பிள்ளையார் கோயிலடி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்

ASAP கற்கைநெறி

USAID நிறுவனத்தின் அனுசரணையில் அரசாங்கத்தால்

இலவசமாக வழங்கப்படும் கணினி
மற்றும்
ஆங்கில பயிற்சி நெறி

★ தென்மராட்சி/ வடமராட்சி மாணவர்களுக்காக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

★ விண்ணப்பதாரி பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த வராகவும், 24 வயதுக்கு உட்பட்ட வராகவும் இருக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தினை

Gateway Chavakachcheri
Gateway Nelliyady

கிளைகளில் 14 ஆம் திகதிக்கு முன்பாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களுக்கு

Gateway
Centre for ICT Education

New Market Building,
Chavakachcheri.
021 227 0323, 021 567 0266

Luxmi Theatre Lane,
Nelliyadi.
021 226 2395,021 567 7606

ADB EKSP USAID FROM THE AMERICAN PEOPLE ASAP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்ணத்தை தனதாக்கியது தெல்லிப்பழை

வலி. வடக்கு மே.2

கோப்பாய் பிரதேச செயலக அணி தவறவிட்ட பிடிகளை ஓட்டங்களாக்கிக் கொண்ட தெல்லிப்பழை பிரதேச செயலக அணி தோல்வியைத் தழுவும் நிலையில் இருந்து தப்பிப் பிழைத்தது. யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி வெற்றி பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் இடம் பெற்ற இந்தப் போட்டியில் கோப்பாய்ப் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி மூன்று ஓட்டங்களை பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தார்கள். சுகிர்தரன், கனிஸ்ரன், சந்தோஸ் தலா ஒரு ஓட்டங்கள் என்ற அடிப்படையில் மூன்று ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கோப்பாய் பிரதேச செயலக அணி தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி வீரர்களின் கவலையீனமான களத்தடுப்பினால் தவற விடப்பட்ட பிடிகள் அனைத்தையும் ஓட்டங்களாக்கி 6 ஓட்டங்களைப் பெற்றது.

சாருஜன் 2, சுரேஷ், பிரசாந்தன், ஜெயசாந், சதீஸ் ஆகியோர் தலா ஒரு ஓட்டங்களையும் பெற்றனர். இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி கோப்பாய் பிரதேச செயலக அணியின் களத்தடுப்பில் ஏற்பட்ட தொய்வு நிலையைப் பயன்படுத்தி 06 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. புனிதராஸ் 3 ஓட்டங்களையும், சந்தோஸ் 2 ஓட்டங்களையும், நிதிகரன் ஒரு ஓட்டத்தையும் பெற்றார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கோப்பாய்ப் பிரதேச செயலக அணி தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி முதல் இனிங்சில் தவறவிட்ட களத்தடுப்பு குறைகளை நீக்கி புதிய உற்சாகத்துடன் விளையாடியமையால் கோப்பாயினால் ஓட்டம் எதனையும் பெற முடியவில்லை. இதனால் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி 9:6 ஓட்டங்கள் என்ற அடிப்டையில் கோப்பாய் பிரதேச செயலக அணியை வெற்றி பெற்று யாழ். மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

(ங-86)

பருத்தித்துறை சித்திவிநாயகர் முதலிடம்

வலி. வடக்கு,மே.02

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள்,பெண்களுக்கான உடற் பயிற்சிப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளின் விபரம் வருமாறு:

ஆண்கள்

முதலாமிடம்-பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்.

இரண்டாமிடம்-வடமராட்சி இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

மூன்றாமிடம்- வல்லை சிவகுரு வித்தியாலயம்.

பெண்கள்

முதலாமிடம்- வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

இரண்டாமிடம்-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

மூன்றாமிடம்-வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

(த-86)

வென்றது செட்டிக்குளம்

வவுனியா ,மே.2

வவுனியா தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய மாவட்ட மட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் செட்டிக்குளம் பிரதேச இளைஞர் கழகம் 6 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டி மாவட்ட சம்பியன் ஆனது.

இந்தப் போட்டியின் இறுதியாட்டம் கடந்தவாரம் வைரவர் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் வவுனியா பிரதேச இளைஞர் கழக அணியும், செட்டிக்குள பிரதேச இளைஞர்கழக அணியும் மோதிக் கொண்டன. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய வவுனியா பிரதேச இளைஞர்கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

55 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய செட்டிக்குளம் பிரதேச இளைஞர் கழக அணி ஒரு பந்துப் பரிமாற்றம் மீதம் இருக்கையில் 7 பந்துப் பரிமாற்றங்களில் 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்று 6 இலக்குகளால் வெற்றியீட்டி மாவட்டச் சம்பியன் ஆனது.

(ங-400)

உடற்பயிற்சிப் போட்டி

பருத்தித்துறை, மே 2

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட உடற்பயிற்சிப் போட்டி இன்று புதன்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலய மட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகள் மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளன.

(ங-190)

மானிப்பாய் பொலிஸார் மானிப்பாய் ரஞ்சித் மோட்டோர்ஸ் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் ஆனைக்கோட்டை ஆதவன் பாலர் பாடசாலையில் நடத்திய நடமாடும் சேவையில் சாவற்காட்டு மகாத்மா விளையாட்டுக்கழகத்துக்கும் ஆனைக்கோட்டை கலைஒளி விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே உதைபந்தாட்டப் போட்டி இடம் பெற்றது. இதில் கலை ஒளிவிளையாட்டுக்கழகம் இரண்டு கோல்களால் வெற்றியீட்டியது. இதனைப் பாராட்டி மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்திரபாலாவும், ரஞ்சித் மோட்டார் உரிமையாளரும் வெற்றிக் கேடயம் ஒன்றை விளையாட்டுக்கழகத் தலைவரிடம் வழங்கினர். (ங-100)

வலைப்பந்தாட்டத்தில் சரஸ்வதி சம்பியன்

வவுனியா ,மே.2

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. இந்தப் போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்தவாரம் வெள்ளிக்கிழமை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் இடம் பெற்றது

இதன் இறுதியாட்டத்தில் வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயமும், தெற்கு வலயத்தைச் சேர்ந்த சைவப்பிரகாச மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன. ஆரம்பம் முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற போட்டியில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் கடும் போட்டியின் பின் 12:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மாவட்ட சம்பியன் ஆகியது.

(ங-400)

துணுக்காய் வலய மகளிர் பெருவிளையாட்டு முடிவுகள்

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற வலய மட்ட பெருவிளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான பெருவிளையாட்டுக்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட பாடசாலைகளின் முடிவுகளைத் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர்,திருமதி ட.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

15 வயதின் கீழ் பெண்கள் பூப்பந்தாட்டம்

முதலாமிடம் -முல்லைத்தீவு பாலிநகர் ம.வி.

இரண்டாமிடம் -முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் றோ.த.க. பாடசாலை

மூன்றாமிடம் - முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி

19 வயதின் கீழ் பெண்கள் பூப்பந்தாட்டம்

முதலாமிடம்-முல்லைத்தீவு ஒலுமடு தமிழ் வித்தியாலயம்

இரண்டாமிடம் -முல்லைத்தீவு மாங்குளம் ம.வி.

மூன்றாமிடம்- முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் ம.வி

19 வயதின் கீழ் பெண்கள் உதைபந்தாட்டம்

முதலாமிடம் -முல்லைத்தீவு கற்சிலை மடு அ.த.க. பாடசாலை

இரண்டாமிடம் -முல்லைத்தீவு பாலிநகர் ம.வி.

மூன்றாமிடம்- முல்லைத்தீவு முத்தையன் கட்டு வலது கரை அ.த.க பாடசாலை

19 வயதின் கீழ் பெண்கள் எல்லே

முதலாமிடம் -முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி

இரண்டாமிடம் - முல்லைத்தீவு பாண்டியன் குளம் ம.வி.

மூன்றாமிடம்- முல்லைத்தீவு கற்சிலை மடு அ.த.க. பாடசாலை

15 வயதின் கீழ் பெண்கள் முதலாமிடம்-முல்லைத்தீவு அணிஞ்சியன் குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்

இரண்டாமிடம்-முல்லைத்தீவு நெட்டாங் கண்டல் அ.த.க பாடசாலை

மூன்றாமிடம்- முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலயம்

19 வயதின் கீழ் பெண்கள் கரம்

முதலாமிடம்-முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலயம்

இரண்டாமிடம் -முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி

மூன்றாமிடம்- முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் ம.வி.

15 வயதின் கீழ் பெண்கள் கரப்பந்தாட்டம்

முதலாமிடம்-முல்லைத்தீவு பாண்டியன் குளம் ம.வி.

இரண்டாமிடம்-முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலயம்

மூன்றாமிடம்-முல்லைத்தீவு முத்தையன் கட்டு இடது கரை அ.த.க. பாடசாலை

17 வயதின் கீழ் பெண்கள் கரப்பந்தாட்டம்

முதலாமிடம்-முல்லைத்தீவு பாண்டியன் குளம் ம.வி.

இரண்டாமிடம்-முல்லைத்தீவு மாங்குளம் ம.வி.

மூன்றாமிடம்- முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் ம.வி.

19 வயதின் கீழ் பெண்கள் கரப்பந்தாட்டம்

முதலாமிடம்-முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி

இரண்டாமிடம்-முல்லைத்தீவு கற்சிலை மடு அ.த.க. பாடசாலை

மூன்றாமிடம்- முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலயம்

19 வயதின் கீழ் பெண்கள் பெண்பந்துதுப்பாட்டம்

முதலாமிடம்-முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலயம்

இரண்டாமிடம்-முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி

மூன்றாமிடம்- முல்லைத்தீவு பாலிநகர் ம.வி.

15 வயதின் கீழ் பெண்கள் சதுரங்கம்

முதலாமிடம்-முல்லைத்தீவு ஒலுமடு தமிழ் வித்தியாலயம்

இரண்டாமிடம்-முல்லைத்தீவு அணிஞ்சியன் குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்

மூன்றாமிடம்- முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் ம.வி.

19 வயதின் கீழ் பெண்கள் சதுரங்கம்

முதலாமிடம்-முல்லைத்தீவு ஒலுமடு தமிழ் வித்தியாலயம்

இரண்டாமிடம்-முல்லைத்தீவு மாங்குளம் ம.வி.

மூன்றாமிடம்- முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி

15 வயதின் கீழ் பெண்கள் வலைப்பந்தாட்டம்

முதலாமிடம்-முல்லைத்தீவு ஐயங்கன்குளம் அ.த.க. பாடசாலை

இரண்டாமிடம்-முல்லைத்தீவு கற்சிலை மடு அ.த.க. பாடசாலை

மூன்றாமிடம்- முல்லைத்தீவு பாலிநகர் ம.வி.

17 வயதின் கீழ் பெண்கள் வலைப்பந்தாட்டம்

முதலாமிடம்-முல்லைத்தீவு ஐயங்கன்குளம் அ.த.க. பாடசாலை

இரண்டாமிடம்-முல்லைத்தீவு கற்சிலை மடு அ.த.க. பாடசாலை

மூன்றாமிடம்- முல்லைத்தீவு பாலிநகர் ம.வி.

19 வயதின் கீழ் பெண்கள் சதுரங்கம்

முதலாமிடம்-முல்லைத்தீவு ஐயங்கன்குளம் அ.த.க. பாடசாலை

இரண்டாமிடம்-முல்லைத்தீவு கற்சிலை மடு அ.த.க. பாடசாலை

மூன்றாமிடம்- முல்லைத்தீவு பாலிநகர் ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொதப்பியது சென்னை

ஐ.பி.எல்., லீக் ஆட்டத்தில் மீண்டும் சொதப்பிய சென்னை சுப்பர் கிங்ஸ், அணி 5 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்ந்தது. கடைசிப் பந்துப் பரிமாற்றத்தில் கம்பீர் தலைமையிலான கொல்கத்தா அணி வெற்றியை தன்வசப்படுத்தியது.

சென்னையில் நேற்று முன்தினம் இரவு நடந்த ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரின் 41 ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

சென்னை அணியில் சகா, குலசேகரா நீக்கப்பட்டு மைக்கல் ஹசி, யோ மகேஷ் வாய்ப்பு பெற்றனர். கொல்கத்தா அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணித் தலைவர் டோனி, துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

சென்னை அணி தொடக்கத்தில் தினறியது. இக்பால் வீசிய முதல் பந்துப் பரிமாற்றத்தில் 4 ஓட்டங்கள் தான் கிடைத்தன. பிரட் லீ வீசிய அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் டுபிளசி (3), இலக்குக் காப்பாளர் பிரண்டன் மக்கலத்தின் அசத்தல் பிடியெடுப்பில் ஆட்டமிழந்தார். இந்தப் பிடியெடுப்புத் தொடர்பாக சந்தேகம் எழ, மூன்றாவது நடுவரிடம் கேட்கப்பட்டது. 'ரீ- பிளேயில்' பிடியெடுப்பு உறுதி செய்யப்பட, டுபிளசி பரிதாபமாக வெளியேறினார்.

பின்னர் சுரேஷ் ரெய்னா, ஹசி சேர்ந்து பொறுப்பாக ஆடினர். பிரட் லீ பந்தில் ரெய்னா ஒரு சிக்சர் அடித்தார். நரைன் பந்தை தட்டி விட்டு ஓர் ஓட்டத்துக்கு வீணாக ஓடிய ஹசி (18), பிரட் லீயின் துல்லிய 'த்ரோவில் ரன் அவுட் டானார்'. தனது அசத்தல் ஆட்டத்தைத் தொடர்ந்த ரெய்னா, ஐ.பி.எல்., அரங்கில் 2 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார். இவர் பவுண்டரிகளாக விளாச, சென்னை ரசிகர்கள் உற்சாகமடைந்தனர்.

கலிஸ் பந்தில் பிராவோ (12) ஆட்டமிழந்தார். மீண்டும் பந்துவீச வந்த கலிஸ் இந்த முறை ரெய்னாவை (44) வெளியேற்றி, இன்னொரு அதிர்ச்சி கொடுத்தார். கடைசி கட்டத்தில் டோனி, ரவிந்திர ஜடேஜா இணைந்து மந்தமாக ஆட, ஓட்ட எண்ணிக்கை உயர வாய்ப்பு இல்லாமல் போனது. துடுப்பாட்ட வரிசையில் செய்த தேவையில்லாத மாற்றங்களும் சிக்கலை ஏற்படுத்தின. நரைன் சுழலில் ஜடேஜா (9) வெளியேறினார். சென்னை அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளுக்கு 139 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. டோனி (34), அல்பி மோர்கல் (13) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சுலப இலக்கை விரட்டிய கொல்கத்தா அணி தொடக்கத்தில் தடுமாறியது. அஷ்வின் சுழலில் பிரண்டன் மக்கலம் (2) ஆட்டமிழந்தார். பின்னர் கம்பீர், கலிஸ் சேர்ந்து அசத்தலாக ஆடினர். சென்னை அணியின் பந்துவீச்சை சிதறடித்த இவர்கள், மிக விரைவாக ஓட்டங்கள் சேர்த்தனர். பிராவோ வேகத்தில் கலிஸ் (26) வெளியேறினார். அசத்தல் ஆட்டத்தை தொடர்ந்த கம்பீர் அரைச் சதம் கடந்தார். மனோஜ் திவாரி (13) ஏமாற்றினார். சிறிது நேரத்தில் பிராவோ பந்தில் கம்பீர் (63) வெளியேற, சிக்கல் ஏற்பட்டது.

கடைசிப் பந்து பரிமாற்றத்தில் கொல்கத்தா அணியின் வெற்றிக்கு 6 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அஷ்வின் பந்துவீசினார். முதல் பந்தில் யூசுப் 2 ஓட்டங்கள் எடுத்தார். 2 ஆவது பந்தில் ஓட்டமெதுவும் பெறப்படவில்லை. 3 ஆவது பந்தில் யூசுப் (12) ஆட்டமிழக்க, 'டென்ஷன்' எகிறியது. ஆனால், அடுத்த பந்தை பவுண்டரிக்கு விரட்டியதாஸ், வெற்றியை உறுதி செய்தார். கொல்கத்தா அணி 19.4 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளுக்கு 140 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. தாஸ் (11) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

தகவல் தொழினுட்பமானி பட்டம்
BIT கொழும்புப் பல்கலைக்கழகம் BIT
புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் எமது நிறுவனத்தால் கோரப்பட்டுள்ளன.
இலங்கையில் தொடர்ச்சியாக 10 வருடங்கள் இப்பட்டக் கற்கைநெறிக்கு மாணவர்களைத் தயார்படுத்துகின்றோம்.
A/L ல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்கள் நேரடியாக விண்ணப்பிக்கலாம். ஏனையவர்கள் FIT சித்தியடைவதன் மூலம் விண்ணப்பிக்கலாம்.
Call Us: 0718474239 , 0776577359
MIS Open Source College
74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்-இராமநாதன் வீதியிலிருந்து 150 m

மணல் விற்பனைக்குண்டு
நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்
4 றெக்டர் - 23,000/- அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு. (கல்லு 1 - 38/-)
தொடர்புகளுக்கு கண்ணா 0776766499

ESOL Diploma in English City & Guilds
COURSE COMPONENTS
Reading : From Beginner to Advanced
Writing : From Beginner to Advanced
Speaking : Effective Speaking - Basic to Advanced
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.
திருமணம் செய்த இல்லத்தரசிகள் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும். UK Border Agency அங்கீகரிக்கும் பாடநெறி City & Guilds இன் Diploma in English (A1, A2) மட்டுமே 02 மாதங்களில் பூரண கல்வியை பெற்று எமது கல்லூரியில் பரீட்சையை எழுத முடியும்.
ஏன் நீங்கள் Diploma of English City College இல் கற்க வேண்டும்
- எமது விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகங்களில் பல வருடங்கள் விரிவுரைகள் ஆற்றிய அனுபவமுடையவர்கள்
- பல தடவைகள் Vincent Sidowicz and Bridgel Bloom அவர்களின் பயிற்சிப்பட்டடைகளில் பங்கு பற்றி இருக்கின்றனர்.

Course Schedule	Mon -Tue-Wed-Thu-Fri	Sat & Sun
Duration	2 Months (100 hours)	2 Months (100 hours)
Time	8.30.10.30 a.m 10.30.12.30 p.m	2.00 - 5.00 p.m
Commencement	02.05.2012	05.05.2012

வகுப்புகள் 02.05.2012 ஆரம்பம்
CITY COLLEGE OF ENGLISH
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
143, Adiyapatham Road, Thirunelvely.
T.P: 0212220384 - 0778803887 - 0754164429

மரண அறிவித்தல்

திருமதி சத்தியதேவி தர்மராஜா (கிளி)

கோப்பாய் வடக்கு கந்தசுவாமி கோயிலடியைச் சேர்ந்த திருமதி சத்தியாதேவி தர்மராஜா (30.04.2012) திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கமுத்து தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - நாகம்மா (வேலணை மேற்கு) தம்பதியரின் மருமகளும், தர்மராஜாவின் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்) அன்பு மனைவியும், பிரதீபன், கீர்த்திகன்(யாழ். மத்தியகல்லூரி, வர்த்தகப் பிரிவு மாணவன்- 2013) ஆகியோரின் அன்புத் தாயும், அருணாசலத்தின் மருமகளும், காலஞ்சென்ற நடேசப் பெருமாள் மற்றும் உருத்திராதேவி (ஆஸ்திரேலியா), கமலினிதேவி மற்றும் பத்மினிதேவி, மங்கையற்கரசி (லண்டன்), காலஞ்சென்ற திலகவதி மற்றும் பாக்கியலட்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி சுசிலாதேவி (கனடா), விக்கிரமசிங்கம் (ஆஸ்திரேலியா), பாலகணேசன், மனோகரன், ஸ்ரீகாந்தன் (லண்டன்), யோகேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது திலகவாசா இல்லத்தில் இன்று (02.05.2012) புதன்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் பி.ப 4 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"திலகவாசா"
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்: திரு.த.தர்மராஜா
குடும்பத்தினர் மற்றும்
உறவினர்கள்.

IELTS BRITISH COUNCIL
யாழ்ப்பாணத்தில்
IELTS பரீட்சையில் 30.06.2012 இல் நடைபெறும் இந்தப்பரீட்சையில் அனைத்து மாணவர்களும் 7.5 Band ற்கு மேல் பெறவேண்டும் என்ற இலட்சியத்தில் Video படக்காட்சியுடன் விரிவுரைகள் அடங்கிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
"BRITISH COUNCIL TRAINED TRAINERS"
Man, Tue, Wed, Thu
4.30p.m - 6.00p.m
Course Schedule	Sat & Sun
Duration	10 Weeks
Time	8.30 to 11.30

புதிய பிரிவுகள் ஆரம்பம்
CITY COLLEGE OF ENGLISH
No.143, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
Tel. 021 222 0384
077 8803887

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

காலமும் நானும்
சேர்ந்து நிற்பதால்
எதையும் என்னால்
நிறைவேற்றிட
முடிகிறது.
-பிலிப்-

புதன் பொய்கை

A

உதயன் 02 மே 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

கல்வியும் ஒழுக்கமும்

தர்மினி பார்த்திபன்



இன்றைய கல்வியின் அபிவிருத்திப் போக்கில் பல்வேறு இடையூறுகள், அதனை கல்வியின் வழிகளைத் தடுத்து நிற்பதாக உணரப்படுகின்றன. மாணவர் தமது கல்வியை விருப்புடன் கற்பதற்கும், அந்தக் கல்வியைக் கற்றுத் தமது வாழ்க்கையில் மறுமலர்ச்சி காண்பதற்கும் இன்றைய கல்விக்கலைத் திட்டம் எத்தகைய வலிமையைக் கொண்டுள்ளது என்பதை ஆராய்ந்து பார்ப்பதில் கல்வியியலாளர்களின் கவனம் இன்று இருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

ஒவ்வொரு பிள்ளையையும் அவரது கல்வி கற்றல் போக்கில் செல்லவிடாது வலிந்து திசை திருப்பிப் பெற்றோரும் ஆசிரியரும் தமது நோக்கத்துக்கு ஏற்ப பல விடயங்களையும் திணித்துக் கற்பிக்க அல்லது கற்கத் தூண்டும் நிலையே தொடர்கிறது.

மாணவர்களின் தனித்துவம் பல்வேறு திறன்களைத் தம்மகத்தே கொண்டுள்ளது என்பதை உணராது அவர்களின் மீது - அவர்களின் பாதையில் எல்லையிட்டு தமது அதிகாரத்தைப் பிரயோகித்து வழி நடத்தும் துன்பத்தால் அவர்கள் திசை கெட்டு அலையும் வகை நீள்கிறது.

வாழ்க்கையின் யதார்த்தத்தையும், சவால்களையும் மன உறுதியோடு சந்திக்கவும், சமுதாயத்தின் நல்விழுமியங்களைக் காத்து வளர்ப்பதற்கும் வலுவூட்டும் வகையில் தேர்ந்த கல்வியை இன்றைய மாணவர்கள் பெறவேண்டும்.

உண்மையான கற்பித்தலின் முதல் தத்துவமே எதையும் கற்பிக்க முடியாது' என்பதே என்கிறார் மகான் அரவிந்தர். இதன் அர்த்தத்தை ஆழமாக நோக்கினால் அதன் உள்ளே பொதிந்திருக்கும் உண்மை வெளிப்படும்.

கற்றலும், கற்பித்தலும் ஒன்றல்ல என்பதும் அவை இரண்டும் ஒன்று போலத் தோன்றினாலும், வேறுபாடுகள் நிறையவே உள்ளன என்பதை உணர்தலும் வேண்டும்' என்பதையுமே அரவிந்தரின் கூற்று எமக்குத் தெளிவு படுத்துகின்றது.

பாடசாலைகளில் நிகழும் கற்றல், கற்பித்தல் ஒழுங்குகள் பரீட்சையை நோக்காகக் கொண்டுள்ளன. அவையே கற்றல் நிகழத் துணை செய்கின்றன என்ற நம்பிக்கையும் நம்மவரிடம் நிறையவே உண்டு.

புள்ளிகளைப் பெறவும், பரீட்சையில் சித்தியடையவும் செய்ய நடைபெறும் கற்றலும், கற்பித்தலும் ஒருவனைக் கற்றவன் என்ற நிலைக்கு உயர்த்துகின்றது. அதுவே அவனைப் பரீட்சையில் சித்திபெறச் செய்வதால் பட்டங்களையும் விருதுகளையும் பெறச் சந்தர்ப்பம் அளிக்கிறது.

ஆனால் கற்றல் என்பது இயல்பானது, இயற்கையானது. மனித வாழ்வுடன் ஒன்றியது. மனிதன் பிறந்தது முதல் கற்கிறான். வாழ் நாள் முழுவதுமே கற்றுக் கொண்டிருக்கிறான்.

பிறப்பு முதல் இறப்புவரை கற்கிறான் என்றபோதும் கருவறையிலிருந்தே கற்கத் தொடங்குகிறான் என்ற ஆய்வுகளும் உண்மையென அறியப்பட்டுள்ளன. பள்ளியில் கற்பவை பரீட்சைக்காகவே என்ற கருத்து எம்மவர் மத்தியில் வேரூன்றி விட்டமையால், வாழ்க்கையோடு இணையாத அனுபவத்தோடு கலக்காத கல்வியாகவே அது பட்டத்தையும் பல்வேறு சான்றிதழ்களையும் எமக்குத் தந்துவிட்டு ஊமையாகிவிடுகிறது.

நாமோ கையிற் கிடைத்த அந்தக் கடதாசி அத்தாட்சிகளான பத்திரங்களை வைத்துக் கொண்டு படித்தவர்கள் என்று பிதற்றித் திரிகின்றோம். கற்றவன் என்பதற்குச் சான்றிதழ்கள் போதுமானவை அல்ல. எமது நடத்தைகளால், செயற்பாடுகளால் நாம் கற்றவன் என்பதை உறுதி செய்தல் அவசியமாகும்.

எமது சமூகம், எமது மக்கள், அவர்களின் வாழ்வு எமக்குப் பாடங்களாக உள்ளன. எமது சமூகத்தின் உயர்ச்சியும், வீழ்ச்சியும் எமது மக்களின் கற்றல் திறனிலேயே தங்கியுள்ளது. மக்கள் மகிழ்ச்சியாக, வாழ்க்கையின் நல்லொழுக்க நெறிமுறைகளைக் கற்றுக் கொண்டு அவற்றைத் தமதாக்கி வாழ்தலின் மூலம் கற்றவர்கள் என்ற நிலைக்கு உயர்தல் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் வாழ்வுச் சூழலில் கற்றுக் கொள்பவை ஏராளம். அவற்றைச் சீர்தூக்கி ஆராய்ந்து கற்றலின் மூலம் ஒவ்வொருவனும் தனது செயற்பாடுகளில், ஒழுக்கங்களில் நல்வழி சேர்ந்து நடப்பவனே கற்றவனாகின்றான்.

இன்று படித்தவர்கள் என்று தம்மைத் தாமே சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்பவர்கள் பலரையும் நாம் காண்கின்றோம். படித்தவன், பண்புள்ளவன் என்ற பட்டங்களைச் சான்றிதழ்களாகப் பெறப் பரீட்சை எழுதினோம்.

ஆனால் நான் படித்தவன் என்பதைச் சமூகம் ஒப்புக் கொள்ளும் வகையில் எனது வாழ்க்கை அமையாத போது இந்தச் சான்றிதழ்களால் எந்தப் பயனும் இல்லை. கற்றதன் படி ஒழுகுபவனும், சமுதாயத்தின் உயர்ச்சிக்குத் துணை நிற்கும் நல்லொழுக்க சீலனுமே கற்றவனாவான்.

எனவே கல்வி, ஒழுக்கம், பண்பாடு என்பவற்றை உயர்த்தும் ஏணியாக அமையக் கற்போம், கற்பிப்போம். ★

உலகை மாற்றி அமைத்த விஞ்ஞானி சார்ல்ஸ் டார்வின்

அபிராமி முத்துலிங்கம்



இயற்கைத் தேர்வு செயல்முறையானது குறிப்பான, நோக்கமற்ற தொடரான செயல் முறையாருமென விளக்குகின்றார்.அதாவது தக்கன பிழைக்கும்(""survival of the fittest"). இதுவே பெரும்பாலான தாவர மற்றும் விலங்கு இனங்களில் நிகழும் இயற்கைத் தேர்வு என்பதன் சாரம்சமாகும்.

பிரபல்யம் (popularity)

'பரிணாமம்'என்று சொல் இவரது கண்டுபிடிப்புக்கு முன்பிருந்தே பிரபலமாகியிருந்தும் கூட,தான் எழுதி வெளியிட்ட"origin of species" என்ற நூலின் 6 வது அத்தியாயம் வரை டார்வின் பரிணாமம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி இருக்கவில்லை. இன்று நாம்,பூமியில் எவ்வாறு உயிரின வாழ்வு விஸ்தரிக்கப்பட்டதென்று தெளிவான எண்ணக்கருவைக் கொண்டுள்ளோம். உயிரினங்களின் சிக்கல் தன்மை இன்று தெளிவாக உணரக்கூடிய பொருளாகிவிட்டது.

இப்பூமி 4.6 பில்லியன் வருடங்களுக்கு முன் தோன்றின. பரிணாமக் கொள்கையின் படி,இன்று இப்பூமியில் காணப்படும் எல்லா உயிரினங்களும் பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்வாழ்ந்த எளிய உயிரினங்களிலிருந்தே கடைசியாக படிப்படியாகத் தோற்றம் பெற்றவை.

முதலாவது பல்கல உயிரினங்கள் 1 பில்லியன் ஆண்டகளுக்கு முன்புதான் தோற்றம்பெற்றவை. எளிய (ஒருகல) விலங்குகள் சுமார் 600 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியவை. முலையூட்டிகள்,இப்பூமியில் தோன்றிய இனங்களில் மிகவும் வெற்றிகரமான குழுவாக இருக்கலாம். இவை பூமியில் தோற்றம் பெற்று 200 மில்லியன் வருடங்களே ஆகவில்லை.

டைனோசர்கள் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே அழிவடைந்து விட்டன. மனிதன்,genus homo என்னும் உருவில் இப் பூமியில் 2.5 மில்லியன் வருடங்களுக்கு முன்புதான் தோன்றியுள்ளான்.

இருந்தபோதிலும், டார்வின் தனது நூலில் மனித இனத்தின் கூர்ப்பு தொடர்பாகத் தெளிவாக எதனையும் கூறவில்லை. அதில் அவர் மனித இனத்தின் தோற்றம், வரலாறு தொடர்பாக ஆராயப்படும் அல்லது கவனம் செலுத்தப்படும் என்பதை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். "இனங்களின் தோற்றம்" பற்றிய வாக்குவாதங்கள் இன்னும் நடந்துகொண்டிருக்கும் போதே, 1871ஆம் ஆண்டில் டார்வின் "மனித பரம்பரை" (The Descent of Man) என்னும் நூலை எழுதினார்.

டார்வின் மனிதன் வாலில்லாக் குரங்கு (Ape) போன்ற ஒரு பிராணியிலிருந்து தான் தோன்றினான் என்ற தனது எண்ணக்கருவைப் பிரபலமாக்கியிருக்கவில்லை என்றாலும் கூட இவரது எண்ணக்கருவோ உடனடியாகப் பத்திரிகைவரை விஸ்தரிக்கப்பட்டது. இதன் விளைவாக, பத்திரிகையொன்று டார்வினை (தாடியுள்ள) ஒரு வாலில்லாக் குரங்கு போன்று சித்திரிக்கும் கேலிச் சித்திரம் ஒன்றை வெளியிட்டது.

சிந்தனை வளர்ச்சி... (Major discovery)

இவரது பரிணாமம் பற்றிய கண்டுபிடிப்புக்கு மிகவும் அடிப்படையாகச் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் பிரதானமானது, மிகப்பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்ட பல மில்லியன் வருடங்களுக்கு முன் வாழ்ந்த விலங்கினங்களின் படிமங்கள் இந்தக் கிரகத்திலே உயிரினங்களின் வாழ்வியல் செயற்பாடு இருந்ததை எடுத்துக்காட்டுகின்றன. அடுத்த முக்கிய காரணி என்னவென்றால் ஒரே குடும்பத்தைச் சார்ந்த இனங்களிடையே மாறல்கள் இருந்தமை. இந்த விடயமானது டார்வினால் தெளிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

இன்னொருபுறம், இது தொடர்பாக இன்னும் பல கேள்விகளும் எழுகின்றன. "உயிரின வாழ்வானது 'Primodil Soup' இல் உள்ள அமினோஅமிலங்கள் மற்றும் உள்ளீடுகளிலிருந்து தோற்றம் பெற்றதெனில், இதே நிபந்தனைகளைக்கொண்ட வேறு கிரகங்களிலும் உயிரினங்கள் உயிர் வாழ்கின்றனவா? இந்த உயிரின வாழ்வானது குறிப்பாக மனித வாழ்வு, பூமிக்கு மட்டுமே தனித்துவ முடையதா, இல்லை இந்தப் பிரபஞ்சத்தில் எங்குமே பொதுவானதொன்றாக உள்ளதா? இந்தக் கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும்வரை உயிரினத் தோற்றம் மற்றும் பரிணாமம் பற்றிய விவாதம் மேலும் தீவிரமடைந்து செல்லும்.

ஆர்வ மீளெழுச்சி.... (Resurgence of enterest)

பரிணாமம் என்பது டார்வின் குறிப்பிட்டது போன்று இத்துடன் நின்று விடவில்லை. புதிய flora மற்றும் flora இனங்கள் நாளுக்கு நாள் கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப் பூமியானது தொடர்ந்து மாறிக்கொண்டேயிருக்கிறது. எனவே இந்தப் புதிய கண்டுபிடிப்புகளுடன் நாம் மேலும் பரிமாணத்தைப் பற்றி அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். இவ்வாறு உயிரியலையும், மானிடவியலையும் புரட்சிகரமாக மாற்றியமைக்கக்கூடிய கொள்கையை உருவாக்கிய, விஞ்ஞானத்துக்காகவே தனது வாழ்நாளை அர்ப்பணித்த இந்த மேதையை என்றுமே நினைவு கூருவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப்பைக் குறைத்தால் மாரடைப்பு ஏற்படும்

உணவுப் பொருள்களில் உப்பு அதிகம் சேர்த்தால் உயர் ரத்த அழுத்தம் வரும் என்று பயமுறுத்துகின்றனர். இதைத் தவிர்க்க உப்பை குறைத்தாலும் இதயநோய் வரும் என்று அண்மைய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது. திடீரென மாரடைப்பு வருவதற்கு உயர் இரத்த அழுத்தமும், கொழுப்புப் பொருள்களைச் சேர்ப்பதும்தான் காரணம் என்கின்றனர் ஆய்வாளர்கள். எனவேதான் இரத்த அழுத்தம் உள்ள நோயாளிகளுக்கு உணவில் உப்பின் அளவைக் குறைக்க மருத்துவர்கள் ஆலோசனை தெரிவிக்கின்றனர். மாரடைப்பு வராமல் தடுப்பதற்காக உப்பைக் குறைத்துக் கொள்வதே இதய நோய்களை ஏற்படுத்தும் என்று புதிய ஆய்வுகள் அதிர்ச்சிகரமான தகவலை வெளியிட்டுள்ளன.

இது குறித்து டென்மார்க்கில் உள்ள கோபன்ஹேகன் பல்கலைக்கழக மருத்துவமனையில் 40,000 பேரிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 67 ஆய்வுகளின் முடிவில், உப்பைக் குறைத்துக் கொள்வோரின் உடலில் 2.5 சதவீதம் கொழுப்பு அதிகரிப்பதாக அதிர்ச்சித் தகவல் தெரியவந்துள்ளது. இவ்வாறு தொடர்ந்து உப்பைக் குறைத்து வந்தோரின் சிறுநீரகத்தில் ரெனின் என்ற புரதமும், அல்டோஸ்டிரோன் என்ற ஹோர்மோனும் அதிகளவில் சுரந்து, உயர் இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

உப்பைக் குறைத்தால் அது இருதய நோயை ஏற்படுத்தும். அதற்குப் பதிலாகப் புகைப்பிடித்தல், மது அருந்துதல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். அதிக உடல் எடை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று இந்த ஆய்வை மேற்கொண்ட ஆய்வாளர் நீல்ஸ் கிரெடல் தெரிவித்தார்.

நாளொன்றுக்கு உணவில் சராசரியாக 6 கிராம் அளவு உப்பைச் சேர்த்துக் கொள்வதால் உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும் என்றும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்களும் நண்பர்கள்!

மிருகக்காட்சிச்சாலை ஒன்றில் சிறுத்தைக் குட்டியும் நாயும் ஒரு வருடமாக மிகச் சிறந்த நண்பர்களாக உள்ளன.

எட்டு வாரங்களான சீட்டா இன சிறுத்தைக் குட்டியும் 16 வாரங்களான லாபேர்ரர் இன நாயும் முதன் முதலில் சிறந்த நண்பர்களாக அறிமுகமாகின.

அமெரிக்காவின் புவேரியா மாகாணத்தில் உள்ள மிருகக்காட்சிச் சாலையில்தான் மேற்படி இருவரும் சிறந்த நண்பர்களாக உள்ளனர்.

ஒரே அளவு உயரமான இருவரும் கடந்த ஒரு வருடமாக ஒரே கூண்டில் சேர்ந்து வாழ்ந்து வருகின்றனர். கூடப் பிறந்த சகோதரங்கள் போல சிறுத்தையும் நாயும் பூங்காவில் வலம் வருவது பார்வையாளர்களுக்குத் திகைப்பை ஏற்படுத்துகின்றது.

இருதலை உயிரினங்கள்



கலிபோர்னியாவைச் சேர்ந்த ஒருவர் இரு தலைகளைக் கொண்டு காணப்படும் உயிரினங்களைச் சேகரித்துள்ளார்.

அவ்வாறு அவர் சேகரித்த உயிரினங்களில் சிலவற்றைக் காணலாம்.

தனது கோப்பையைத் தானே சுத்தம் செய்யும் பூனை

பூனைக் குட்டி ஒன்று தான் உணவு உண்ணுவதற்காகப் பயன்படுத்தப்படும் கோப்பையை தானே கழுவிச் சுத்தம் செய்கின்றது. மனிதர்களே சில வேளைகளில் இவ்வாறு சுத்தம் செய்வதற்கு தயக்கம் காட்டும் தருணத்தில் செல்லப் பிராணியாக வளர்க்கப்படும் பூனைக்குட்டி மிகுந்த பொறுப்புடன் தனது கோப்பையைத் தானே சுத்தப்படுத்துவது ஆச்சரியம் ஊட்டும் வகையில் காணப்படுவதுடன் சிலருக்கு இது ஒரு பாடமாகவும் அமைகின்றது.

எறும்புகளின் உலகம்



பொதுவாக மனிதனின் சுறுசுறுப்புக்கு எறும்பைத் தான் உதாரணமாகக் கூறுவார்கள். அவ்வாறு காணப்படும் எறும்புகளின் செயல்களைத் தத்ரூபமாகப் படமெடுத்துள்ளார் புகைப்படக்காரர் ஒருவர்.

ரஷ்யாவைச் சேர்ந்த Andrey Pavlov என்பவரால் எடுக்கப்பட்டு பின்பு போட்டோஷொப்பால் வடிவமைக்கப்பட்ட புகைப்படங்களே இவை. இந்தப் புகைப்படங்களில் தோன்றும் அனைத்து எறும்புகளும் நிஜமானவை. ஆனால் சில தருணங்களில் இறந்த எறும்புக்களின் உருவங்களையும் பயன்படுத்தியுள்ளார்.

எறும்புகளைப் பற்றி ஆராய்ச்சி மேற்கொண்டு வரும் இவர், இந்த எறும்புகள் வேலை செய்யும் போது வித்தியாசமான உடல் அசைவுகளை வெளிப்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எறும்புகளின் நடத்தைகளைத் துல்லியமாகப் படம்பிடிப்பதற்காகச் சில Stage செட்டுக்களையும் வடிவமைத்து அவற்றில் இந்த எறும்புகளை நடமாடவிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (49)



பூமியை நோக்கி வீசும் இடி மின்னல் மூலம் வேதியியல் மாற்றம் ஏற்பட்டு உருவாவதே வைடூரியம் ஆகும். கருமை கலந்த கல்லை அணியக் கூடாது. எலும்பு வாதநோய், கபம், இருதய நோய்கள் நீங்கும்.

நீலம்: நீலமணி என்னும் நீலக்கல்லில் பலவகை யுண்டு. இதில் ஆறு வரிக்கோடுகளை உடைய இந்திர நீலமே சிறந்ததாகும். காக்கை நீலம், வெளிர் நீலம் என்று பலவகையுண்டு. நீலமணி மிகவும் சிறந்தது. ஒளியுடைய நீலக்கல் மிகவும் சிறப்புடையது. உடல் அழுகல் நோய், முடக்கு வாதம் குணமாகும்.

பவளம்: கோவைப் பழத்தை ஒத்த நிறமுடைய தாகும். கிளியின் மூக்கை ஒத்த நிறமுடையதாகும். கடினத் தன்மையற்றது. செம்பவளம், வெண்மை கலந்த பவளம் என்று இரண்டு வகை உண்டு. கறுப்புப் பவளம் பூச்சிகள் உருவாக்குவது. கடலிலும் மலை உச்சியிலும் பவளப் பாறைகள் இருக்கும். இரத்த சம்பந்தமான நோய்கள் அறவே நீங்கும். அதிக கரட் எடை கொண்ட பவளத்தை அணிய வேண்டும். இரத்தசோகை, மூலம், இரத்தப் போக்கு, பசியின்மை குணமாகும். ஒவ்வொரு கல்லும் ஆண் பெண் அலி என்று பால்தன்மை உடையது. அலிவகைக் கற்களை யாரும் அணியக்கூடாது. ரத்தினங் களை அணியும்போது நல்ல அனுபவசாலிகளின் அறிவு ரைப்படி கேட்டு வாங்கி அணிந்து கொள்ள வேண்டும்.

பிறப்பு எண் இரகசியங்கள்

மனிதனின் பிறப்புக்கும், இறப்புக்கும் மூல காரண மாக இருக்கும் இயற்கை, சக்திகளின் வெளிப்பாடான கிரகக் காந்த அலை இயக்கங்களின் வெளிப்பாட்டைக் கீழ்க்கண்ட உதாரணத்தின் மூலம் கண்டுணருங்கள். கீழ்க் கண்ட உதாரணங்களுடன் சேர்ந்து, மொத்தம் ஒன்பதின் மடங்குகளில் பல வகையான பிறப்பு, இறப்பு அமைப்பினை இயற்கை அமைத்துள்ளது.

ஒரு எண்ணுக்கு ஒவ்வாத நேர் எதிரான ... எண்களாலும் இந்தசுழற்சியை இயற்கை மேற்கொண்டு வருகின்றது. சூரியனின் ஒளிக்கிரணங்கள் கடல் நீரின் ஒவ்வொரு துளியையும் பற்றி இழுத்துச் சென்று மீண்டும் மழையாகப் பொழிந்து கடலிலே கொண்டு சேர்ப்பதைப் போல, பிறப்பும் இறப்பும் ஒன்பது கிரகங்களின் ஈர்ப்பு மற்றும் விலக்கு சக்தியின் மூலம் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும். ஒவ்வொரு வகையான பிறப்பு இறப்புக்குள்ளும் ஒருவித அர்த்தம் தங்கியிருக்கும்.

இயற்கையின் மறுசூழற்சிக்கான ஜீவ ஆத்மாக்களை இந்த பிறப்பு, இறப்பு நாட்களின் மூலம் அடையாளம் கண்டு கொள்ளலாம். மனிதர்களின் முக்திப் பேறு நிலையைப் பற்றி இந்தப் பிறப்பு இறப்பு நாள்கள் அடையாளம் காட்டிவிடும். பிறப்பு இறப்பு தினங்கள் ஒரு மனிதனின் வாழ்க்கையில் நடந்த, நடத்திய வெளியுலக சாதனைகளைவிடவும் மிகவும் முக்கியம். இறப்பு தினமே அந்த ஆத்மாவின் பிறப்பின்மை மற்றும் மறுபிறப்பின் அடையாளமாகத் திகழும். தொடர்ச்சியான பிறப்புக்களை உள்ளடக்கிய ஆத்மாக்கள் பிறவிப் பெருங்கடல் தாண்ட பலமுறை பிறப்பு இறப்புக்களைச் சந்திக்க நேரிடும்.

ஒரு இடத்தில் இருக்கும் காற்றானது சூரியனின் கிரண சக்தியின் வெப்பத்தால் ஆவியாக மேல்நோக்கிச் சென்றவுடன், அந்த இடத்தில் நிலவும் வெற்றிடத்தை நிரப்ப அதிலிருக்கும் காற்று அசைகின்றது. அப்போது அங்கே ஒரு அதிர்வு இயக்கநிலை உருவாகின்றது. அதைபோன்று தான் உலக வாழ்க்கையில் பிறப் பெடுத்துள்ள உயிரினங்கள் கிரகங்களினால் வெளி யிடப்படும். இயக்க சக்திக்கான சக்தி கதிர் அலைவீச்சுகள் நிறுத்தப்பட்டவுடன் தன்னுடைய இயக்கத்தை பூவுலக வாழ்க்கையில் முடித்துக் கொள்கின் றன. மீண்டும் கதிர் இயக்க அலைவீச்சுக்களால் புதிய பிறப்புகள் உருவாகின்றன.

(தொடரும்)

அதிர்ஷ்ட இரத்தினங்கள்

அதிர்ஷ்ட இரத்தினங்களை குற்றமற்றவைகளாகப் பார்த்து வாங்கி அதிர்ஷ்ட நாளில் வலது கை மோதிர விரலில் அணிந்து கொண்டால் அனைத்து அதிர்ஷ்டங்களும் பன்மடங்கு விருத்தியாகும். குற்றமற்ற இரத்தினங்களை வாங்கி அவரவருக்கு அதிர்ஷ்டமான நாளில் அணிந்து கொண்டால் அனைத்துக் குறைகளும் நீங்கி அதிர்ஷ்டம் பன்மடங்கு விருத்தியாகும். போதைப் பழக்கத்திற்கு, தீய பழக்கத்திற்கு ஆளானவர்களைத் திருத்தி விடும். மன அமைதியைத் தரும். நல்ல, குற்றமற்ற, அதிர்ஷ்டத்தைத் தரும் நவரத்தினங்களை அணிவதால் முழுமையான பலன்களும், உப இரத்தினங்களையும் அணிவதால் பாதிபலனும் கிடைக்கும்.

மாணிக்கம்: முதல்தரமான இரத்தினத்தை 1 கரட் அல்லது அதற்கு மேலும் அணிந்து கொள்ளலாம். உயர்ந்த ரத்தினம் மிகுந்த அதிர்ஷ்டத்தைத் தரக் கூடியது. சிவப்பு நிறம் கொண்ட இக்கல்லை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதல் தரம் சிறந்தது. மாடப்புறாவின் ரத்தம், பழுத்து வெடித்த மாதுளம் பழத்தின் வித்து, மாந்தளிர் போன்றவற்றை ஒத்த நிறத்தில் காணப்படும். வாதம் பித்தம் கப நோய்களைத் தீர்க்க வல்லது.

முத்து: வெண்மை நிறங்கொண்ட முத்து குறைந்தது 4 முதல் 5 கரட் வரை அணியலாம். இயற்கை முத்து மற்றும் செயற்கை முத்து என்று இரண்டு வகையுண்டு. பால் போன்ற கொக்கின் நிறம். அழகான பற்கள் போன்ற வெண்ணிறத்தை உடையது. எலும்பு நோய், மூளை பலவீனம், காய்ச்சல், கண் சம்பந்தப்பட்ட நோய்கள் தீரும். வெண்மையான ஒளி போன்ற பால் வண்ணத்தில் காணப்படும். இயற்கையான முத்து நன்மைகளைத் தரும்.

புஷ்பராகம்: வெண்மஞ்சள் நிறம் கொண்டது. கனக புஷ்பராகம், வெண் புஷ்பராகம், தங்க புஷ்பராகம் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். சர்க்கரை வியாதிகள், தோல் வியாதிகள், இரகசிய நோய்கள், சோர்வு போன்றவை அறவே நீங்கும்.

கோமேதகம்: பசுமாட்டின் சிறுநீரையும்,தேனையும் போன்ற நிறத்தை உடையது. கருமை நிறங்கலந்த மற்றும் ஆரஞ்சு நிறமுடைய கோமேதகம் என்று இரண்டு வகைப்படும். இக்கல்லின் கரும்புள்ளிகள், கோடுகள், பள்ளம், திட்டு, நீர்க்குமிழ் போன்ற தோற்றமுடைய கற்கள் தோஷமுடையவை. இந்த இரத்தினங்கள் அணிவதால் மனதில் அமைதி உண்டாகும். சீதம், ஆஸ்துமா, குஷ்டம், ஈரல் சம்பந்தப்பட்ட நோய்கள் தீரும்.

வைரம்: இளநீலம் கலந்த வைரம், பச்சை கலந்த வைரம், செங்கதிர் நிறம் கலந்த வைரம் என்று மூன்று வகையான வைரங்கள் உள்ளன. இயற்கை மற்றும் செயற்கை வைரம் என்று இரண்டு வைரம் இருக்கும். ஆண்மைக் குறைவு, நரம்புத் தளர்ச்சி, ஞாபக மறதி, இருதய வலிகளைக் குணமாக்கும்.

மரகதம்: பச்சை நிறங் கொண்டது. பட்டை தீட்டிய மரகதம் மிகவும் அழகானது. வயிற்றுவலி, பித்தரோகம், மயக்கம், இரத்தச்சோகை போன்ற நோய்கள் குணமாகும்.

வைடூரியம்: வேப்பம் பழத்தை ஒத்த நிறமுடையது. சிறிய நூல் ஓடும் கல்லே சிறந்தது. வானத்திலிருந்து

கடன் உயிரைக் குடித்தது

கடன் அன்பை முறிக்கும் என்பது மூத்தோர் முதுமொழி. பின்பு அது கடன் எலும்பை முறிக்கும் என்று மாறி தற்போது, கடன் உயிரைக் குடிக்கும் என்னும் நிலைக்குச் சென்றிருக்கின்றது. அந்தளவு தூரம் பணம் தற்போது மனிதனை ஆட்டிப்படைக்கின்றது.

அண்மையில் பாடசாலை மாணவி ஒருவர் கடனினால் தூக்கில் தொங்கி தனது உயிரை மாய்த்திருக்கின்றார். அதுவும் யாழ்ப்பாணத்தின் நகரை அண்டிய பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

அந்த மாணவி ஒன்றும் தான் வாங்கிய கடனுக்காக உயிரை மாய்க்கவில்லை. தனது தந்தை வாங்கிய கடனுக்காகவே தனது உயிரை மாய்த்திருக்கின்றார். குறித்த மாணவியின் தந்தையார் கடன் வாங்கி அதனைச் செலுத்தாமல் விடவே, கடனைக் கொடுத்தவர் பணத்தைத் திருப்பித் தரும்படி குறித்த நபரை தொடர்ச்சியாக கேட்டு வந்திருக்கின்றார்.

ஏன்... எதற்கு... எப்படி?

கடன் கொடுத்தவர் நாள் செல்ல செல்ல குறித்த மாணவியின் வீட்டில் வந்திருந்து, அவரது தாய் முன்பாகவே, தகாத வார்த்தைகளால் பேசிய துடன், தந்தை கடன் தராவிட்டால் குறித்த மாணவியைத் தன்னை திருப்திப்படுத்தத் தயாராக இருக்கும்படி என்று எச்சரித்துச் சென்றிருக்கின் ளறார். அவர் தொடர்ச்சியாகவே இவ்வாறு தெரிவித்து வந்த நிலையிலேயே குறித்த மாணவி தாயார் வீட்டில் இல்லாத நேரத்தில் தூக்கில் தொங்கி தனது உயிரை மாய்த்திருக்கின்றார்.

மானத்துக்காக தனது உயிரை அந்த மாணவி மாய்த்திருக்கின்றார். குறித்த தந்தையின் செயல், அந்த பிள்ளையின் உயிரைக் குடித்திருக்கின்றது. கலாசார பிறழ்வுகள் கட்டுக்கடங்காமல் அதிகரித்துச் செல்லும் இன்றைய சூழலில் இவ்வாறான கீழ்த்தரமான செயல்களும் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன.

பிள்ளைகளுக்கு பெற்றோரே மிகச் சிறந்த பாதுகாப்பு அரண் என்பது இப்போது மெல்ல மெல்ல தகர்க்கப்பட்டத் தொடங்கியிருக்கின்றது. சமூகப் பெரியவர்கள் அந்த அரணை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள் வார்களா ?

-நக்கல் நரசிம்மன்.

உதயனை விமர்சியுங்கள்

உதயன் நாளிதழ் தமிழ்ச் சமூகத்துக்கு வழங்கி வரும் பங்களிப்பு பாராட்டத்தக்கது. காலத்தின் கண்ணாடியாக தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகளை தனது இலட்சியமாக கொண்டு 'உதயன்' செய்தி வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் நாளிதழின் பணி மகத்தானது.

ஆனாலும் பிறவிடயங்கள் தொடர்பாக உதயன் வெளியிட்டு வரும் செய்தி போதுமானதாக இல்லை. குறிப்பாக கலை, இலக்கியம், சமூக, மரபுரிமை, பாரம்பரியம் தொடர்பான விடயங்கள் உங்கள் பத்திரிகையில் பிரசுரமாவது போதுமான தாக இல்லை.

உதயனின் செய்தியை நம்பி இருக்கும் எமக்கு உதயன் பூரணமாக செய்தி வழங்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அரசியல் முழுமைக்காக உதயனும், பிற விடயங்களுக்காக ஏனைய ஊடகங்களையும் பார்க்க வேண்டும் என்ற நிலை வேண்டாம்.

கிராமியக் கலைகளுக்கும் அதிகூடிய -முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இவ்வாறு அரசியல் தவிர்ந்த ஏனைய விடயங்களுக்கும் உதயன் முக்கியம் கொடுக்க வேண்டும். அத்துடன் மூலை முடக்குகள் எங்கும் உதயன் கிடைக்க வேண்டும். அதற்கு உதயன் நிர்வாகம் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

-வாசகரில் ஒருவன், நெடுந்தீவு

★ ★ ★

நெடுந்தீவு மக்களை விடுவிக்க வேண்டும் என்று நெடுந்தீவு மக்கள் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்தனர். [illegible] வெளியிட்டிருக்கும் [illegible] கோட்டையாக நெடுந்தீ வைத் தொடர்ந்து ஆக்கிரமித்து வரும் அந்தக் கட்சிக்கு இது ஒரு பாடமாக அமைய வேண்டும். அப்பொழுது தான் அங்குள்ள மக்களை மீட்க முடியும். சிங்கள அரசோடு ஒன்று சேர்ந்து கொண்டு தமிழ் மக்களுக்கு தீர்ப்பைப் பெற முடியும் என்று மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் அதிகாரத்திலி ருந்து கட்சியின் திருகு தாளங்கள் உதயனில் உட னுக்குடன் வெளிவரவேண்டும். இப்படிப்பட்டவர் களை கட்சியில் இருந்து விரட்ட வேண்டிய பொறுப்பு உதயனின் கையிலேயே உள்ளது.

-கனுஷன், புதுக்குடியிருப்பு

★ ★ ★

தமிழ்த் தேசியத்துக்காக போராடிக் கொண்டிருக் கும் ஒரு பத்திரிகையாகத் திகழ்ந்தது இன்றும் திகழ்ந்து கொண்டிருக்கும் உதயன் பத்திரிகை என்றைக்குமே தனது சேவையைக் காத்திரமாகத் தொடர எனது வாழ்த்துக்கள்.

நான் பலவருடங்களாகவே உதயனின் வாசக னாக இருந்து வருகிறேன். முன்னரைவிட சிறப்பான பக்க வடிவமைப்புடனும் நிறைந்த தகவல்களுடனும் உதயன் வெளிவருகின்றமை மகிழ்ச்சியைத் தருகிறது.

ஆனாலும் சில செய்திகளை உடனுக்குடன் பத்திரிகையில் காணமுடிவதில்லை. மறுநாளே பிரசுரமாகிறது. மேலும் ஏனைய சில பத்திரிகைக ளில் வந்த செய்திகளையே காணமுடிகிறது. இதற்கு இடமளிக்காது இருக்க வேண்டும் என எதிர்பார்கிறேன். தவிர சில செய்திகளுக்கும் தலையங்கங்களுக்கும் இடையே வேறுபாடு இருப்பது போன்று உணர்கிறேன். எழுத்துப் பிழைக ளையும் அவதானிக்கிறேன். எனவே இவற்றைத் திருத்தியும் என்னைப் போன்ற பலவாசகர்களுக்கும் தொடர்ந்தும் உதயன் கிடைக்கவும் சிறப்பாக மிளி ரவும் எனது வாழ்த்துக்கள். **-கேதாரன், வரணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களின் விடியலாக மே தின நிகழ்வு அமைந்ததா?

தொழிலாளர் கூட்டத்தின் முதல் உரிமைக்குரல் 1806 ஆம் ஆண்டு அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் ஒலித்தது. அதுவரை நடைமுறையில் இருந்த 15 முதல் 20 மணி நேரம் வரையிலான அசுரத்தனமான உடல் உழைப்பை எதிர்த்து 10 மணி வேலை நேரம் கேட்டு ஒலித்த குரல்கள் முதலாளி வர்க்கத்தால் ஒழித்துக் கட்டப்பட்டன. 30 வருடங்கள் உறங்குவதாய் தெரிந்த உணர்வுகள் 1837 இல் மீண்டும் புது எழுச்சி கண்டன. சீற்றம் கொண்டன. சீறி எழுந்து முதலாளி வர்க்கத்தின் செவிட்டுச் செவிப்பறைகளை அடித்துக் கிழிந்தன. ஆட வைத்தன. விளைவு.... பாகுபாடோடு ஒரு சட்டம் அமெரிக்காவில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அரச பணியில் இருப்பவர்களுக்கு மட்டும் 10 மணிநேரம் வகுக்கப்பட்டது. மற்றத் தொழிலாளர்கள் கைவிடப்பட்டவர்களாயினர். இதனால் புரட்சியின் வேகம் மீண்டும் புதுப்பொலிவு கண்டது. வேகம் கொண்டது

1856 இல் தொழிலாளர் வர்க்கத்தின் தொடர் போராட்டம் மே 01 அன்று விடியல் கண்டது. 8 மணி நேரம் வேலை, 8 மணிநேரம் மன மகிழ்வு, 8 மணி நேரம் உறக்கம். மே01 தொழிலாளர்களின் வெற்றி நாளாய் விடியல் நாளாய் விடுமுறை நாளாய் ஆஸ்திரேலியாவில் அவதாரம் கண்டது. அந்த விடியல் உலகம் முழுக்க வியாபிக்க 33 ஆண்டுகள் பிடித்தது. தங்கள் உதிரத்தை வேர்வையாகச் சிந்தி உழைத்து மானிட நாகரிகத்தின் வளர்ச்சிக்கு மாபெரும் பங்காற்றிய உழைப்பாளர்கள் 8 மணி நேரம் கொண்ட உழைப்பு நாளே தங்களுடைய உரிமையாகப் போராடிப் பெற்ற நாளே மே தினமாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

> மூன்று தசாப்த கால போரினால் நொந்து போய் இருக்கும் தமிழ் மக்களின் விடியலின் தேடலாக மே தினம் அமைய வேண்டும். அப்பொழுதுதான் மே தின நிகழ்வுகள் எமக்குப் பயனுள்ளதாக அமையும். இல்லாது போயின் மே தின நிகழ்வுகளை நடத்துபவர்கள் அதனை கைவிடுவது நல்லது.

எல்லோரும் நினைப்பது போல மே தினம் என்பது முதன் முதலில் பொதுவுடமைப் புரட்சி நடந்த சோவியத் ரஷ்யாவிலோ அல்லது அதன் பிறகு பொதுவுடமை நாடான சீனாவிலோ பிறக்கவில்லை. மாறாகப் பொதுவுடமைத் தத்துவத்துக்கு பெரும் எதிர்ப்புக் காட்டி வரும் அமெரிக்காவில்தான் முதன் முதலில் உழைப்பாளர்களின் அடிப்படை உரிமை நிலைநாட்டப்பட்டது. இன்றிலிருந்து 125 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் உள்ள சிக்காகோ நகரில் அந்த உரிமைக் கோரிக்கை போராட்ட வடிவத்தைப் பெற்றது.

ஒவ்வொரு நாளும் 10 மணி நேரம், 12 மணி நேரம், 14 மணி நேரம் என்று உழைப் பாளர்கள் நேர வரையறையற்று வேலை வாங்கப்பட்டு வந்த அந்த நாளில் 8 மணி நேரம் மட்டுமே பணியாற்றுவோம் என்றும் வாரத்தில் ஒரு நாள் விடுமுறை வழங்க வேண்டும் என்று கோரியும் தொழிலாளர்கள் முதன் முதலாக 1880 ஆம் ஆண்டு குரல் கொடுத்தனர். அந்த உரிமைக் கோரிக்கை அடுத்த 4 ஆண்டுகளில் மிகப்பெரிய தொழிலாளர் ஒற்றுமைக்கு வழி வகுத்தது.

1884 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் மற்றும் சிறு வணிகர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. 1886 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அனைத்து தொழிலாளர்களும் நாள் ஒன்றுக்கு 8 மணி நேரம் மட்டுமே பணியாற்றுவோம் என்று கூறி அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்தது.

ஆனால் தொழிலாளர்கள் கோரிக்கை ஏற்கப்படவில்லை. 1886 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சிக்காகோ நகரில் 2 லட்சத்து 50 ஆயிரம் தொழிலாளர்கள் கலந்து கொண்டு மே தின இயக்கத்தைத் தொடங்கினார்கள். உலகெங்கிலும் உழைக்கும் மக்களின் உரிமைகள் நிறைவேற மானிடத்தை உயர்த்த அரும்பாடுபட்ட அந்த உழைக்கும் மக்கள் கூட்டத்தை மனிதாபிமானத்தோடு பார்க்க உலகம் கற்றுக்கொண்டது.

1889 ஆம் ஆண்டு உலகம் முழுக்க ஒட்டு மொத்த தொழிலாளர்களின் புரட்சி விழா கொண்டாடப்பட்டது. தொழிலாளர்களின் உணர்வுகளும் தேவைகளும் முழுமையாய் உலகம் முழுக்க ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பும் இலங்கையில் அது பின்னாளில்தான் நடைமுறைக்கு வந்தது. தொழிலாளரின் அவர்களது ஆற்றலின் தேவையை உணர்த்த வேண்டிய, போற்ற வேண்டிய இந்த நாள் உண்மையான நோக்கத்தில் இருந்து தலை குப்புறப் புரண்டு விட்டது.

தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுப்பதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கம் பெற்ற இந்த நாளானது இன்று உருவாக்கத்தின் நோக்கத்தையே மறந்து விட்டு ஒரு கேளிக்கை தினமாக மாறி வருவது சிந்திக்க வேண்டியதொரு விடயமாகும்.

தொழிலாளர்களின் ஒற்றுமையை உறுதிப்படுத்தச் சபதமேற்கும் இந்த நாள் தொழிலாளரின் உரிமைகள் வெற்றி கொள்ள ஒன்று பட்டுக் குரல் எழுப்ப வேண்டிய இந்த நாள் அரசியலுக்கு உர மூட்டும் நாளாக அமைந்து விட்டது. உழைப் பாளரின் சக்தியை ஒற்றுமையை ஓங்கியொலிக்க வேண்டிய இன்று அரசியல் மயப் படுத்தப்பட்ட அவல நிலையையே வெளிப்படுத்துகின்றது. இந்தத் தினத்தின் நோக்கம் இன்று புறந் தள்ளப்பட்டு ஒவ்வொரு அரசியல் கட்சியினதும் ஆள் பலத்தை வெளிப்படுத்தும் தேசிய நாளாக அமைந்து விட்டது என்றால் அதுவே யதார்த்தம், உண்மை. ''பிள்ளையார் பிடிக்கக் குரங்கானது'' என்பது போல் தொழிலாளரின் உரிமை பற்றி குரல் கொடுக்க வேண்டிய மே தின ஊர்வலங்களும் கூட்டங்களும் இன்று அரசியல் ஊர்வலங்களாகவும் அரசியல் மேடைகளாகவும் மாறி விட்டன.

ஜனநாயகம் இல்லாத எமது நாட்டில் மே தினம் நடத்த, ஊர்வலம் செல்ல, கூட்டத்திற்கு ஆள் திரட்டப் பணமும், மதுவும் உதவும் பரிதாப நிலையும் காணப்படுகின்றது. மே தினத்தின் நோக்கத்தையே அதன் உண்மைத் தார்ப்பரியத்தையே குழி தோண்டிப் புதைத்து விட்டு அதன் மேல் நின்று ஒப்பாரி வைப்பது போன்றே இன்று மே தினம் கொண்டாடப்படுகிறது.

மூன்று தசாப்த கால போரினால் நொந்து போய் இருக்கும் தமிழ் மக்களின் விடியலின் தேடலாக மே தினம் அமைந்ததா?.

எமக்கு விடியல் கிடைக்கும் போதுதான் மே தின நிகழ்வுகள் எமக்குப் பயனுள்ளதாக அமையும். இல்லாது போயின் மே தின நிகழ்வுகளை நடத்துபவர்கள் அதனைக் கைவிடுவது நல்லது. உலக நாடுகளில் மே தின நிகழ்வுகள் அந்த மக்களுக்கு ஒரு வெற்றியை கொடுத்திருக்கிறது. ஆனால் ஈழத்து தமிழ் மக்களுக்கு இன்றும் விடிவு கிடைக்கவில்லை. மே தினம் தமிழ் மக்களின் தேடலின் [illegible]

■ பித்தன்

பொன் முட்டையிடும் வாத்துக்கள்

''ட்ரிங் ட்ரிங்'' ஒலித்த மணியோசை கேட்டு வந்த இளைஞனிடம் கடிதத்தை நீட்டிவிட்டு சென்றார் தபால்காரர். கடிதத்தை பார்த்தான் அதில் ஒன்றும் அதிகம் எழுதப்பட்டிருக்கவில்லை. தங்களை கட்சிச் செயலகத்துக்கு அழைக்கின்றோம் என்று மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தது. வேலை வாய்ப்பு பெறும் பொருட்டு அவன் கடந்த மாதம் குறித்த கட்சியால் ஆரம்பிக்கப்பட்ட பட்டதாரிகள் சங்கத்தில் 200 ரூபா கட்டிச் சேர்ந்திருந்தான். அத்துடன் ஜெனீவா தீர்மானத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்திலும் கட்டாயத்தின் பேரில் கலந்துகொண்டிருந்தான். இப்போது மீண்டும் அழைத்திருக்கிறார்கள் .

'வேலை தருவதற்காக இருக்குமோ?' என்று மனதில் எண்ணிக்கொண்டான். ''மே மாதம் நெருங்குவதால் முள்ளிவாய்க்கால் பாவங்களைப் போக்க எங்களுக்கு வேலை வாய்ப்பை தருகினமாக்கும்'' என்றும் நினைத்தான். சைக்கிளை வேகமாக மிதித்தவனுக்கு அவனை அழைத்த கட்சியின் தலைவரின் படத்துடன் கிழிந்தபடி தொங்கிக் கொண்டிருக்கும் போஸ்ரர்கள் காரணத்தை உணர்த்தி விட்டன.

''ஓ! மே முதலாம் திகதி தொழிலாளர் தினம் . அதற்காகத்தான் இந்த அழைப்பு''.

மெதுவாகப் பயணித்த அவனை கட்சியின் அலுவலக வாசலில் வானுயர்ந்த கட்-அவுட் வரவேற்றது. சந்திப்பில் அமைப்பாளரின் பிரதிநிதி ஒருவர் '' உங்களைப் பற்றியே அமைச்சர் சிந்திக்கிறார். கடந்த ஆர்ப்பாட்டத்தின்போது நீங்கள் காட்டிய ஆதரவை விட அதிகம் தந்து அமைச்சரைப் பலப்படுத்த வேண்டும்.'' என்றார்.

''ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்பவர்கள் அனைவருக்கும் அனைத்து வசதிகளும் செய்து கொடுப்போம். நீங்கள் கடாயம் பங்கேற்க வேண்டும் பங்கேற்க விரும்புவர்கள் பங்கேற்கலாம். கலந்துகொள்ளாதவர்கள் பிறகு வேலை கிடைக்க வில்லை என்று கவலைப்படக்கூடாது.'' பேரணியில் கலந்துகொள்ளாதுவிடின் வேலை இல்லை என்பதை மறைமுகமாக வெளிப்படுத்தினார்.

தேர்தல், அரச ஆதரவு ஆர்ப்பாட்டங்கள், அரச தலைவர்கள் மற்றும் இந்திய உயர் அதிகாரிகளின் வருகைகளின்போது தமக்கான ஆதரவாளர்களாக பட்டதாரிகளையே அரசின் தலைக் கட்சியும் வால் கட்சியும் காட்டிக் கொள்கின்றன. மிருகக்காட்சிசாலைகளில் மிருகங்களைத் தம் இஷ்டப்படி ஆட்டுவிக்க அவற்றுக்கு இறைச்சியைக் காட்டுவது போல் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புத் தருவதாக கூறி தமது சுயநல அரசியலை இங்கு சிலர் நடத்துகின்றனர். கடந்தவாரம் சில பிரதேசங்களில் அரசின் அடி வருடிக் கட்சி களத்தில் இறங்கியது. அங்குள்ள பட்டதாரிகளை அழைத்து சிறுசிறு குழுக்களாக பிரசாரம் செய்தது. இம்முறை மேதினக் கூட்டத்துக்கு வருபவர்களை கணித்து அவர்களுக்கு நிச்சயம் வேலைவாய்ப்புப் பெற்றுத் தரப்படும் என்று ஆசை வார்த்தைகள் ஊட்டப்பட்டன. ஆனாலும் இந்த முறை பட்டதாரிகள் கொஞ்சம் உசாராகவே இருந்தார்கள். ஏற்கனவே பலமுறை இதேபோன்ற ஆசை வார்த்தைகளை அவர்கள் கேட்டுக்கேட்டு சலித்துவிட்டார்கள்.

நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பவற்றின் போதெல்லாம் குறித்த கட்சியால் இதேபோல் வேலை வாய்ப்பு என்ற ஆசை வார்த்தை காட்டப்பட்டது. பட்டதாரிகளும் நிச்சயம் வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் தெருத் தெருவாகத் திரிந்து குறித்த கட்சியின் பிரசார வேலைகளில் ஈடுபட்டார்கள். அவர்களது மனம் அந்தக் கட்சியின் பிரசாரப் பணிகளைச் செய்வதற்கு நாணியபோதும், வேலையைப் பெறுவதற்கு வேறு வழியெதுவும் கிடைக்காததால் அவர்கள் அந்தக் கட்சியின் பிரசாரகர்களாக மாற வேண்டியிருந்தது.

ஓடுகாலி

தேர்தல்கள் முடிந்தவுடன் எதிர்பார்த்தளவு வாக்குகள் கிடைக்கவில்லை என்பதை காரணம் காட்டி, வெயில், மழை என்பவற்றைப் பாராமல் குறித்த கட்சிக்காக உழைத்த பட்டதாரிகள் அலைக்கழிக்கப்பட்டனர். தேர்தல் சமயங்களில் சிரித்த முகத்தோடு இவர்களை வலியவந்து அழைத்துச்சென்ற கட்சி உறுப்பினர்கள் தேர்தல் முடிந்த பின்னர் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டனர். அதன் பின்னர் ஜெனிவாத் தீர்மானத்துக்கு எதிராக யாழ். மக்கள் கிளர்ந்தெழுவது போல உலகுக்கு 'பிலிம்' காட்ட குறித்த கட்சிக்கு மீண்டும் பட்டதாரிகள் தேவைப்பட்டனர். வேலை வாய்ப்புத் தொடர்பான கலந்துரையாடல் என்ற போர்வையில் வழமை போல பட்டதாரிகள் ஏமாற்றப்பட்டு ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ள வைக்கப்பட்டனர்.

இந்த முறை எதிர்க்கட்சிகளின் கூட்டு மேதினம் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. இந்த மேதினத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தலைமை தாங்கி எழுச்சியுற வைத்தது. வழமையாக, புலிகள் குடாநாட்டை விட்டுச்சென்ற பின்னர் யாழ்ப்பாணத்தில் மே தினம் சிறிய கூட்டங்களோடு முடிந்துவிடும். கொழும்பில் நடைபெறும் மேதினக் கூட்டங்களிலேயே இங்குள்ள அரச சார் உதிரிக்கட்சிகள் ஓடிச்சென்று ஒட்டிக்கொண்டு குரலெழுப்பின. அப்போதெல்லாம் அவர்களுக்கு யாழ்ப்பாணம் கண்ணுக்குத் தெரியவே இல்லை. இப்போது எதிர்க்கட்சிகளின் கூட்டு மே தினத்தை குழப்ப வேண்டும் என்ற ஒரே நோக்குக்காக மட்டுமே அரச சார் கட்சியால் ஏட்டிக்குப் போட்டியாக யாழ்ப்பாணத்தில் மே தினம் அனுஷ்டிக்கப்பட்டது. உண்மையில் அவர்களுக்கு தொழிலாளர்கள் மீது அக்கறை இருந்திருக்குமானால் ஏன் இது நாள் வரையில் மே தினத்தை மறந்து போயிருந்தார்கள்?

இப்போது திடீரென தொழிலாளர்கள் மீது பாசம் பொங்கி வழிவதாகக் காட்டிக் கொண்டு பட்டதாரிகளை பகடைக்காய்களாக்கி மேதினக் கூட்டத்தை நடத்தியதால் அந்தக் கட்சி என்ன சாதித்தது என்பது எவருக்குமே தெரியவில்லை. குறித்த கட்சியின் மே தினக் கூட்டத்திலும் மக்கள் கலந்துகொண்டார்கள் என்பதைக் காட்டுவதற்காக கால் கடுக்க பங்குபற்றிய பட்டதாரிகளுக்கு இந்த முறையேனும் வேலை வாய்ப்பு கிடைத்தாலே பெரிய விடயம். ஆனால் அப்படி நடந்தால் அது உலக அதிசயம் தான். இந்த முறை பட்டதாரிகள் எல்லோருக்கும் வேலை வாய்ப்பை கொடுத்து விட்டால் அடுத்த முறை ஆர்ப்பாட்டம், தேர்தல் பிரசாரம் என்பவற்றுக்கு குறித்த கட்சி எப்படி ஆள் பிடிக்க முடியும்? வேலையில்லாப் பட்டதாரிகள் இருக்கும் வரைதான் இவர்களும் அவர்களை ஏவல் செய்து ஓரளவுக்கேனும் வாக்குகளைப் பெறமுடியும். உண்மையைச் சொன்னால் வேலையற்ற பட்டதாரிகள் இந்தக் கட்சிக்கு பொன் முட்டையிடும் வாத்துக்கள். அவர்களை உத்தியோகத்தர்கள் ஆக்கி, பொன் முட்டைகளை இழப்பதற்கு அந்தக் கட்சி ஒரு போதும் விரும்பாது என்பதே யதார்த்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org